உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 05 வியாழக்கிழமை (19.05.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 174



03
வோர்னுக்கு 55 லட்சம் அபராதம்



13
சிங்கள குடியேற்றத்தை அரசு கைவிட வேண்டும்



16
மக்கள் மனங்களில் மறைந்து கிடப்பது என்ன?



30
துயரம் நீங்க உதவட்டும்

# முறையான அதிகாரப் பகிர்வு மூலம் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்

## ஒத்துழைக்க கூட்டமைப்பு தயார் என்கிறார் சம்பந்தன்



கொழும்பு, மே19

"இந்தியாவிடம் உறுதி அளித்தபடி முறையான அதிகாரப் பகிர்வின் மூலமாகத் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுக்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமாயின் நாம் அதற்குத் தேவையான சகல ஒத்துழைப்பையும் வழங்குவோம்."

-இப்படித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இந்திய அரசுக்கு இலங்கை (29 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதாவுடன் இணைந்து செயற்பட இலங்கை விருப்பம்

### அமைச்சர் பீரிஸ் கடிதம் எழுதினார்



புதுடில்லி,மே19

தமிழகத்தின் புதிய முதல்வராகப் பதவியேற்றுள்ள செல்வி ஜெயலலிதாவுக்கு வாழ்த்துத் தெரிவித்து கடிதம் எழுதியுள்ள இலங்கை அரசு அவருடன் இணைந்து செயற்படவும் விருப்பம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும், அவரது சகாக்களையும் போர்க்குற்றம் தொடர்பாகச் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டும் என்று ஜெயலலிதா தெரிவித்திருந்த நிலையில் வெளிவிவகார அமைச்சர் தமிழக முதல்வருக்கு வாழ்த்துக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இந்தியப் பிரதமர் (29 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர்களின் தேசிய துக்க நாள் நேற்று தாயகத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

### இறுதிப் போரில் மாண்ட உறவுகளுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம்,மே19

தமிழ் மக்களின் வாழ்வில் என்றுமே மறக்க முடியாத பெருந்துயரை ஏற்படுத்திய முள்ளிவாய்க்கால் தேசிய துக்கதினத்தை வடபகுதி மக்கள் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டித்தனர்.

நேற்றுக் குடாநாட்டின் வீதிகளில் சன நடமாட்டம் மிகக் குறைவாகக் காணப்பட்டது. நகரின் முக்கிய வீதிகளில் போக்குவரத்து குறைவாகவே காணப்பட்டது.

விடுமுறை நாள்களில் நகருக்கு வருகின்ற மக்களின் எண்ணிக்கையை விட மிகக் குறைவானோரே நேற்று வந்ததாக ஓட்டோ சேவையில் ஈடுபடும் சாரதி ஒருவர் தெரிவித்தார்..

பஸ்களில் பயணிகளின் எண்ணிக்கையும் குறைவாகக் காணப்பட்டதாக தனியார் பஸ் சாரதியொருவர் கூறினார்.

மக்களில் பலர் நேற்றைய தினத்தில் வன்னியில் காவுகொள்ளப்பட்ட தமது உறவுகளின் நினைவாக ஆலய (29 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை மீது சர்வதேச விசாரணை அவசியம்

## சர்வதேச மன்னிப்புச் சபை கோருகிறது

கொழும்பு,மே19

"ஐ.நாவின் நிபுணர் குழு வெளியிட்ட அறிக்கை மூலம் இலங்கையில் போர்க்குற்றம் இடம்பெற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் இலங்கை மீது சர்வதேச ரீதியில் விசாரணை நடத்துவதற்கு ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன் சர்வதேச சுயாதீன பொறிமுறை ஒன்றை ஏற்படுத்த வேண்டும். இதற்காக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சபையின் பெற்றுக்கொள்ள வேண்டும்"-இவ்வாறு சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைக்கு எதிரான(32 ஆம் பக்கம் பார்க்க)





இறுதி யுத்தத்தின்போது முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த உறவுகளின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு வவுனியா நகரசபை பழைய மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது வன்னி மாவட்ட எம்.பிக்களான சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், விநோநோகராதலிங்கம் மற்றும் வவுனியா நகரசபை உபதலைவர் எம்.எம்.ரதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ஐ.நா. அறிக்கைக்கு இலங்கை பதிலளிக்காவிடின் சர்வதேச விசாரணைப் பொறிமுறை அவசியம்!

### வலியுறுத்துகிறது நியூஸிலாந்து

கொழும்பு,மே 19

ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு இலங்கை அரசு முறையாக பதிலளிக்காவிட்டால், நியூஸிலாந்து உட்பட சர்வதேச சமூகம் பொருத்தமான சர்வதேச விசாரணை பொறிமுறை ஒன்றை ஸ்தாபிப்பது குறித்து பரிசீலனை செய்யும்.

- இப்படி நியூஸிலாந்து வெளிவிவகார அமைச்சர் முரே மக்குலி தெரிவித்திருக்கிறார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித உரிமை(32 ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டில் 2,500 தமிழ் பேசும் பொலிஸாருக்கு வெற்றிடம்

### நியமிக்கப் பணம் இல்லை என்கிறார் அமைச்சர் வாசு

கொழும்பு, மே 19

"நாடு முழுவதிலும் உள்ள பொலிஸ் நிலையங்களில் 2ஆயிரத்து 500 தமிழ் பேசும் பொலிஸ் அதிகாரிகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இருந்தும், தற்போது அரசு எதிர்நோக்கியுள்ள நிதிப்பற்றாக்குறை காரணமாக இதற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கையை முன்னெடுக்க முடியாதுள்ளது"

-இப்படி தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார (32 ஆம் பக்கம் பார்க்க)

## மாநகர சபை உறுப்பினர் விந்தனுக்கு அச்சுறுத்தல்

யாழ்ப்பாணம்,மே19

இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் தனக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக யாழ்.மாநகர சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

(29 ஆம் பக்கம் பார்க்க)

## பிரச்சினைகளைச் சமாளிப்பதற்காக ஜனாதிபதியிடம் ஓடுகிறார் பிள்ளையான்

மட்டக்களப்பு,மே19

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் உயர்மட்டக் குழுவினர் இன்று வியாழக்கிழமை காலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

முன்னறிவித்தல் இன்றி கட்சியின்(32 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழி தீர்த்தது சென்னை

-அருண்மொழி-

டோனி தலைமையிலான சென்னை சூப்ப கிங்ஸ் அணிக்கும், பார்த்திவ் பட்டேல் தலைமையிலாக கொச்சி ருஸ்கேர்ஸ் அணிக்கும் இடையில் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்றைய ஐ.பி.எல் ஆட்டம் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை அணித்தலைவர் டோனி முதலில் துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தார். இதனடிப்படையில் சென்னை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக மைக் ஹஸி மற்றும் முரளி விஜய் ஆகியோர் களமிறங்கினர். ஆர்.பி.சிங் முதலாவது ஓவரை சிறப்பாக வீசி ஆரம்பித்து வைத்தார் ஆட்டத்தை. சிறீசாந்தின் இரண்டாவது ஓவரிலும் சென்னை அடக்கியே வாசித்தது.


மீண்டும் மூன்றாவது ஓவரை வீசினார் ஆர்.பி.சிங். மூன்று பவுண்டரிகள் அடித்தார் விஜய். அதிரடிகள் தொடங்கிய வேகத்திலேயே வேரோடு பிடுங்கப்பட்டது. இறுதிப் பந்தில் 11 பந்துகளில் 16 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் வீழ்த்தப்பட்டது விஜயின் விக்கெட்.

ரெய்னா அடுத்த வீரராக உள் நுழைந்தார். வந்த வேகத்தில் சிறீசாந்தின் ஓவரில் அவரது ஆட்டமிழப்பை தவறவிட்டனர் கொச்சி வீரர்கள். மீண்டும் நேற்றைய ஆட்டத்துக்கு திரும்பிய முரளி ஆட்டத்தின் ஐந்தாவது ஓவரை சிறப்பாக வீசி முடித்தார். ஆறாவது ஓவரை சிறீசாந்த் வீச ரெய்னா அதனை எதிர்கொண்டார். சிக்ஸர், பவுண்டரி, சிக்ஸர் என்று ரெய்னா தனது அதிரடியை முதல் மூன்று பந்துகளிலும் காட்டினார். அடுத்த பந்திலேயே 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

பத்திரிநாத் அடுத்து களமிறங்கினார். மறுமுனையில் ஹஸியின் ஆட்டம் சொல்லும்படியாக இல்லை. பத்திரிநாத் ஹொட்ஜ் பந்தில் சிக்ஸர் அடித்தார். அடுத்த பந்திலேயே ஆட்டமிழந்து வெளியேறினார். 10 பந்துகளில் 13 ஓட்டங்களுடன் அவரது ஆட்டம் அடங்கியது. அடுத்து களமிறங்கினார் சகா. சிறப்பான ஆட்டத்தை தொடங்கினார் சகா. 37 பந்துகளில் 32 ஓட்டங்களுடன் ஹஸி ஆட்டமிழந்து வெளியேறினார். 91 பந்துகளில் சென்னை தனது சதத்தை பூர்த்தி செய்தது.

அணித்தலைவர் டோனியும் நேற்றைய ஆட்டத்தில் ஏமாற்றினார். 6 பந்துகளில் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். 116 ஓட்டங்களுக்கு சென்னை அணி 5 விக்கெட்டுக்களை இழந்தது. மறுமுனையில் ஆடிக்கொண்டிருந்த சகாவுடன் அல்பி மோர்கல் ஜோடி சேர்ந்தார். வேகமாக ஓடி ஓட்டங்களை குவிப்பில் இந்த ஜோடி ஈடுபட்டது. அத்துடன் அதிரடி ஆட்டத்தையும் இடையிடையே வெளிப்படுத்தியது. இவர்களின் இறுதிகட்ட சிறப்பான தாக்குதல் மூலம் சென்னை அணி கௌரவமான இலக்கை அடைந்தது.

இருபது ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. சகா ஆட்டமிழக்காமல் 33 பந்துகளில் 3 சிக்ஸர்கள், ஒரு பவுண்டரி அடங்கலாக 46 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். மோர்கல் 10 பந்துகளில் 13 ஓட்டங்களை இறுதிவரை ஆட்டமிழக்காது நின்று பெற்றுக்கொடுத்தனர்.



சகா

ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கும் அணித்தலைவர் மஹேல இல்லாததனால் பார்த்திவ் பட்டேல் - பிரன்டன் மக்கலம் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினர். அஸ்வின் முதலாவது ஓவரை வீசினார். அதிரடிகள் ஆரம்பிக்க முன்னரே மூன்றாவது ஓவரில் பட்டேலின் விக்கெட்டை வீழ்த்தினார் அஸ்வின். தொடர்ந்து கணேஸ்வர ராவோ களமிறங்கினார். மக்கலத்துடன் இணைந்த ராவோ சிறப்பான அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். எல்லையை நோக்கி அடிக்கடி பவுண்டரிகள் படையெடுத்தன. 34 ஓட்டங்கள் இரண்டாவது விக்கெட்டுக்காக பகிரப்பட்ட நிலையில் ராவோ, பிராவோவின் பந்து வீச்சில் 17 பந்துகளில் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

பிரன்டன் மக்கலம் - பிரட் ஹொட்ஜ் இருவரும் இணைந்து மூன்றாவது விக்கெட்டுக்காக இணைப்பை ஏற்படுத்தினர். 49 பந்துகளில் கொச்சி அரைச்சதத்தை எட்டியது. மெல்ல மெல்ல கொச்சியின் ஆட்டம் சென்னையின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. அதிரடிகள் அடக்கப்பட்டது சென்னையின் சுழல் பந்து வீச்சு மூலம். இவர்களின் நிதான ஆட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து மக்கலத்தை வெளியேற்றி விட்டார் ஜகாத்தி. 37 பந்துகளில் 33 ஓட்டங்களுடன் மக்கலம் ஆட்டம் நிறைவை எய்தியது.

ஜடேஜா - ஹொட்ஜ் தொடர்ந்தனர் மீதி ஆட்டத்தினை. 15 ஆவது ஓவர் ஹொட்ஜ் கொடுத்த பிடியை முரளி விஜய் தவறவிட்டார். பொலஞ்சர் வீசிய 18 ஆவது ஓவரில் ஜடேஜா அதிரடியாட்டம். பவுண்டரி, சிக்ஸர் என்று பறந்தது அவரது ஆட்டம். இறுதிப் பந்தில் வீழ்ந்தார் ஜடேஜா. 13 பந்துகளில் 19 ஓட்டங்களுடன் வெளியேறினார் ஜடேஜா.

பிராவோ வீசிய 19 ஆவது ஓவரில் ஹொட்ஜ் அதிரடியாட்டம். அடுத்தடுத்து இரண்டு சிக்ஸர்கள், இறுதிப் பந்தில் பவுண்டரி என்று அவரது அதிரடியின் பட்டியல் நீண்டது. சென்னை அணியின் கையிலிருந்த வெற்றி மெல்ல கொச்சி பக்கம் சாய்ந்தது. இருந்தும் இறுதி ஓவரை சிறப்பாக வீசினார் பொலிஞ்சர். கொச்சியின் கையிலிருந்து வெற்றி பறித்தெடுக்கப்பட்டது. இறுதி வரை நின்றாடிய ஹொட்ஜ் 42 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகளுடன் 51 ஓட்டங்களைப் பெற்றார். 20 ஓவர்கள் நிறைவில் 141 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்தது.

பந்து வீச்சில் அஸ்வின் 16 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டினை வீழ்த்தினார். இறுதியில் சென்னை 11 ஓட்டங்களால் வெற்றி பெற்று புள்ளிப்பட்டியலில் முதலிடத்தை பெற்றது. ஆட்ட நாயகனாக சகா தேர்வு செய்யப்பட்டார்.

## இன்றைய ஆட்டம்

- புனே வாரியர்ஸ் எதிர் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் (இரவு 8 மணி)

## அதிகூடிய ஓட்டம்

- மார்ஷ் – பஞ்சாப் (13 ஆட்டங்கள் 491 ஓட்டங்கள்)
- வல்த்தாட்டி – பஞ்சாப் (13 ஆட்டங்கள் 458 ஓட்டங்கள்)
- கெயில் – பெங்களூர் (8 ஆட்டங்கள் 436 ஓட்டங்கள்)

## அதிகூடிய விக்கெட்டுக்கள்

- மலிங்க – மும்பை (12 ஆட்டங்கள் 27 விக்கெட்டுக்கள்)
- முனாப் பட்டேல் – மும்பை (12 ஆட்டங்கள் 17 விக்கெட்டுக்கள்)
- ராகுல் சர்மா – புனே (12 ஆட்டங்கள் 16 விக்கெட்டுக்கள்)

DLF INDIAN PREMIER LEAGUE

## அணிகளின் நிலைகள்...

| அணி | M | W | L | T | N/R | Net/R/R | P |
|---|---|---|---|---|---|---|---|
| சென்னை சூப்ப கிங்ஸ் | 13 | 09 | 04 | 0 | 0 | + 0.544 | 18 |
| றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் | 13 | 08 | 04 | 0 | 1 | + 0.283 | 17 |
| மும்பை இந்தியன்ஸ் | 12 | 08 | 04 | 0 | 0 | + 0.245 | 16 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 12 | 07 | 05 | 0 | 0 | + 0.403 | 14 |
| கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 13 | 07 | 06 | 0 | 0 | + 0.271 | 14 |
| கொச்சி ருஸ்கேர்ஸ் | 14 | 06 | 08 | 0 | 0 | - 0.214 | 12 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 13 | 05 | 07 | 0 | 1 | - 0.969 | 11 |
| டெக்கான் சார்ஜஸ் | 13 | 05 | 08 | 0 | 0 | - 0.080 | 10 |
| புனே வாரியர்ஸ் | 12 | 04 | 08 | 0 | 0 | - 0.033 | 08 |
| டெல்லி டெயாடெவில்ஸ் | 13 | 04 | 09 | 0 | 0 | - 0.448 | 08 |

# வெற்றியுடன் வெளியேறுவோம்

மீதமுள்ள இரண்டு லீக் ஆட்டங்களில் சிறப்பாக திறமையை வெளிப்படுத்தி வெற்றியுடன் முடிக்க போராடுவோம் என்று புனே வாரியர்ஸ் அணியின் தலைவர் யுவராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

மும்பையில் நடந்த ஐ.பி.எல்.லீக் ஆட்டத்தில் புனே வாரியர்ஸ், டெக்கன் சார்ஜர்ஸ் அணிகள் மோதின. இதில் டெக்கன் அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதனால் புனே அணியின் அடுத்த சுற்றுக்கான வாய்ப்பு வீணானது.

இது குறித்து புனே அணியின் தலைவர் யுவராஜ் சிங் கூறியதாவது, டெக்கன் அணிக்கு எதிராக தோல்வி கண்டதன் மூலம் எங்கள் புனே அணியின் அடுத்த சுற்றுக்கான ஓரளவு வாய்ப்பும் வீணானது. இந்த ஆட்டத்தில் எங்கள் அணியின் பந்துவீச்சு சிறப்பாக இருந்தது. ஆனால் துடுப்பாட்டத்தில் எதிர்பார்த்தபடி சோபிக்காதது தோல்விக்கு வித்திட்டது.

இந்தத் தொடரில் எங்கள் அணி தொடர்ந்து ஏழு தோல்வியை பதிவு செய்தது பின்னடைவாக அமைந்தது. இருப்பினும் மீதமுள்ள இரண்டு போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி தொடரை வெற்றியுடன் முடிக்க முயற்சி செய்வோம்.

இந்தத் தொடரில் எங்கள் அணியில் இருந்து ராகுல் சர்மா உள்ளிட்ட திறமையான இளம் வீரர்கள் சிலரை காண முடிந்தது. இதேபோல சில வெளிநாட்டு வீரர்களும் நம்பிக்கை அளித்தனர் என்று யுவராஜ் சிங் தெரிவித்தார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் முன்னணி வீரர்கள்



SLPL 2011

இலங்கை பிரிமியர் லீக் சார்பில் (எஸ்.எல்.பி.எல்.) நடத்தப்படும் 'ரி-20' போட்டித் தொடரில் முனாப் பட்டேல், அஸ்வின் உள்ளிட்ட 12 இந்திய வீரர்கள் பங்கேற்பார்கள் என்று தெரிகின்றது.

ஐ.பி.எல் தொடரைப் போல எஸ்.எல்.பி.எல். 'ரி-20' தொடர் வரும் ஜூலை 19 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 4 ஆம் திகதி வரை இலங்கையில் நடக்கின்றது. இதில் மொத்தம் ஏழு அணிகள் பங்கேற்கின்றன.

18 நாள்கள் நடக்கும் இந்தத் தொடரில் பங்கேற்க மேற்கிந்தியத்தீவுகளின் கிறிஸ் கெயில், பொலார்ட், பாகிஸ்தானின் அப்ரிடி, அக்தர், தென்னாபிரிக்காவின் கிப்ஸ் உள்ளிட்ட வீரர்கள் ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். தற்போது இந்திய வீரர்களும் இதில் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதுகுறித்து வெளியான செய்தியில், இலங்கை 'ரி- 20' தொடரில் வோர்னர், காயத்தில் இருந்து மீண்ட பின்னர் வெற்றோரி ஆகியோர் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தவிர தினேஷ் கார்த்திக், இப்ரான் பதான், மனிஷ் பான்டி, மனோஜ் திவாரி, வல்த்தாட்டி, ரவிந்திர ஜடேஜா, சவுரப் திவாரி, உமேஷ் யாதவ், வினய் குமார் உள்ளிட்ட இந்திய வீரர்களும் பங்கேற்கலாம்.

முனாப் படேல், அஸ்வின், பிரவீண் குமாரும் இந்தத் தொடரில் பங்கேற்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறு அந்தச் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (15)

# பந்துவீச்சு மோசம்

ஐ.பி.எல் போட்டியில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியின் தொடர் வெற்றிக்கு கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி முற்றுப்புள்ளி வைத்தது.

முதலில் விளையாடிய கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 20 ஓவரில் 2 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 232 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் விளையாடிய பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி 17 ஓவரில் 121 ஓட்டங்களில் சுருண்டது.

இந்த தோல்வி குறித்து பெங்களூர் அணியின் தற்காலிக அணித் தலைவர் விராட் ஹோக்லி கூறியதாவது:-

நாங்கள் தொடர்ந்து 7 ஆட்டங்களில் வெற்றி பெற்றோம். தற்போது சரியான நேரத்தில் தோல்வி ஏற்பட்டுள்ளது. அடுத்த சுற்றில் சிறப்பாக விளையாட எங்களை தயார்படுத்திக் கொள்ள இயலும். அரை இறுதிக்கு முன்பு ஒவ்வொரு ஆட்டத்திலும் வெற்றி பெறுவது என்பது இயலாது. எங்களது பந்துவீச்சு சிறப்பாக அமையவில்லை. மோசமான பந்துவீச்சால் தோல்வி அடைந்தோம். பஞ்சாப் அணியின் துடுப்பாட்டம் மிகவும் அபாரமாக இருந்தது. 233 ஓட்டங்கள் என்பது மிகவும் கடினமான இலக்காகும். இவ்வாறு அவர் கூறினார். (15)



ஹோக்லி

# பொதுநலவாய போட்டிகளை நடத்த இலங்கைக்கு தகைமையுண்டு

2018 இல் பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டியை அம்பாந்தோட்டையில் நடத்தும் நம்பிக்கையுடன் உள்ள இலங்கை ஒலிம்பிக் குழு, இந்த விளையாட்டுப் போட்டியை நடத்தும் தகைமை இலங்கைக்கு இல்லை என்ற சில தரப்பினர் கூறியுள்ளதை வன்மையாக மறுத்துள்ளது.

இந்தப் பொதுநலவாய போட்டிகளை நடத்துவதற்கு பெரும் நிதி தேவை என்பது எமக்குத் தெரியும். ஆனால் வெளிநாட்டு முதலீட்டாளர்களும் 50 தனியார் துறை நிறுவனங்களும் இதை நிதிப்படுத்துவர் என்று குழுவின் பிரதான நிர்வாக அதிகாரி நளின் ஆட்டிகல கூறினார்.

சண்டை நடந்த காலத்தில் பாதுகாப்புக் காக ஆண்டுதோறும் பெருந்தொகைப் பணம் செலவு செய்யப்பட்டது. இந்த பணத்தையும் நாட் டின் மதிப்பை உயர்த்தக் கூடிய இந்த திட்டத்துக்கு பயன்படுத்தலாம் என்று ஆட்டிகல கூறினார்.

அம்பாந்தோட்டையில் துறைமுகம், விமான நிலையம், மற்றும் நல்ல தெருக்கள் என்று சகல உட்கட்டமைப்புகளும் உள்ளன எனவும் அவர் கூறினார். (15)

# வோர்னுக்கு 55 லட்சம் அபராதம்



விசாரணைக்காக வோர்ன் வருகை

ராஜஸ்தான் றோயல்ஸ் அணித் தலைவரான ஷேன் வோர்னுக்கு 50,000 அமெரிக்க டொலர் (சுமார் 55 லட்சம் இலங்கை ரூபா) அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஐ.பி.எல் தொடரில் ராஜஸ்தான் அணியின் தலைவராக இருக்கின்றார் ஷேன் வோர்ன். சமீபத்தில் ஜெய்ப்பூரில் நடந்த பெங்களூருவுக்கு எதிரான ஆட்டத்தில் ராஜஸ்தான் அணி தோல்வியடைந்தது. இதற்கு தங்களுக்குச் சாதகமாக ஆடுகளம் அமைக்காததே காரணம் என்று கூறிய வோர்ன், ராஜஸ்தான் கிரிக்கட் சங்க செயலர் சஞ்சய் தீட்ஷித்தை கடும் வார்த்தைகளால் திட்டினார்..

இந்த சர்ச்சை தொடர்பாக திட்ஷித், ஷேன் வோர்ன் இருவரையும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வருமாறு ஐ.பி.எல். ஒழுக்காற்று குழு அழைத்திருந்தது.

கிரிக்கெட் நிர்வாகியை திட்டியது தொடர்பாக ஐ.பி.எல் விசாரணை குழுவிடம் நேரில் சென்று விளக்கம் அளித்தார் ராஜஸ்தான் அணித்தலைவர் ஷேன் வோர்ன்.

ஐ.பி.எல். தலைவரான சிராயு அமீன் மற்றும் ரவி சாஸ்திரி ஆகியோர் சுமார் 3 மணித்தியாலங்கள் விசாரணை நடத்தினர். அதன்பின் ஷேன் வோர்னுக்கு 50 லட்சம் டொலர் அபராதம் விதிப்பதாக மேற்படி ஒழுக்காற்றுக்குழு அறிவித்தது. ஷேன் வோர்ன் ஏற்கனவே மன்னிப்பு கோரிவிட்டதால் அவருக்கு அபராதம் மாத்திரம் விதிக்கப்பட்டதாகவும் இத்தகைய சம்பவம் மீண்டும் நடைபெற்றால் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (15)

# தென்னாபிரிக்காவின் அணித் தலைமை யாருக்கு?

தென்னாபிரிக்க ஒரு நாள் கிரிக்கெட் அணியின் புதிய அணித்தலைவராக தொடக்க வீரர் அம்லா, விக்கெட் காப்பாளர் டி வில்லியர்ஸ், சகலதுறை ஆட்டக்காரர் போத்தா ஆகியோரில் ஒருவர் நியமிக்கப்படலாம். இவ்வாறு அந்த அணியின் சகலதுறை ஆட்டக்காரர் டுமினி தெரிவித்துள்ளார்.

டுமினி மேலும் கூறியதாவது:-

ஏற்கனவே அணித்தலைவராக இருந்த கிரேம் ஸ்மித் உலகக் கிண்ணத் தொடரோடு ஒருநாள் போட்டியிலிருந்து ஓய்வு பெற்றார். இதையடுத்து அந்த அணியின் புதிய அணித் தலைவராக யார் தெரிவு செய்யப்படுவார் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் அணித்தலைமைக்கான பதவிக்கான போட்டியில் அம்லா, டி வில்லியர்ஸ், போத்தா ஆகியோர் உள்ளனர். இவர்கள் மூன்று பேரில் யார் தேர்வு செய்யப்பட்டாலும், அவர்கள் சிறப்பாக செயலாற்றுவார்கள். மூன்று பேரும் அணித்தலைமை பதவிக்கு தகுதியானவர்கள்.

அணியின் புதிய பயிற்சியாளர் யார் என்பது இன்னும் தெரியவில்லை. நிச்சயம் எப்போதும் இல்லாத அளவில் பெரிய மாற்றம் இருக்கும்.

போத்தா இருபது ஓவர் போட்டியின் அணித்தலைவராக உள்ளார். அவருடைய தலைமையின் கீழ் இரண்டு ஆட்டங்களில் விளையாடியுள்ளேன். அவர் மிகச்சிறந்த அணித் தலைவர் என்றார்.

மூத்த வீரரான கலிஸ் அணித்தலைவராகும் வாய்ப்பு இல்லையா என்று கேட்டபோது, கலிஸ் இப்போது ஓய்வு பெறும் நிலைக்கு வந்துவிட்டதாக நினைக்கிறேன். அதனால் அவர் அணித்தலைவராக வருவதற்கு வாய்ப்பில்லை. அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு அணித்தலைவராக இருக்கும் ஒருவரையே இந்தப் பதவிக்கு நியமிக்க வேண்டும் என்றார்.

கிறிஸ்டன் பயிற்சியாளராவதற்கு வாய்ப்பு உள்ளதா என்று கேட்டபோது, கிறிஸ்டன் தனது குடும்பத்தினருடன் சில காலம் இருக்க விரும்புவதாக நான் கேள்விப்பட்டேன். அடுத்த இரண்டு மாதங்களுக்கு நான் எதையும் உறுதியாக சொல்ல முடியாது. ஒரு வேளை கிறிஸ்டன் [illegible] மிகுந்த மகிழ்ச்சி[illegible] காலங்களில் அவருடன் இணைந்து பயிற்சியில் ஈடுபட்டிருக்கிறேன் என்றார். (15)



டுமினி



சானியா

# சானியா தோல்வி

பிரான்ஸில் நடைபெற்று வரும் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் மற்றும் இரட்டையர் ஆட்டங்களில் முதல் சுற்றிலேயே இந்தியாவின் சானியா தோல்வியடைந்துள்ளார். பிரான்ஸ் திறந்த ரென்னிஸ் போட்டி அடுத்த வாரம் தொடங்கவுள்ள நிலையில் இந்தத் தோல்வி சானியாவுக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மகளிர் ஒற்றையர் முதல் சுற்றில் சானியா, பிரான்ஸின் அலைஸ்கார்னெட்டை எதிர்கொண்டார். இந்த ஆட்டத்தின் முதல் செட்டை 4-6 என்ற கணக்கில் இழந்த சானியா, இரண்டாவது செட்டை 6-4 என்ற கணக்கில் கைப்பற்றினார். பின்னர் நடைபெற்ற பரபரப்பான மூன்றாவது செட்டை 1-6 என்ற கணக்கில் கார்னெட்டிடம் இழந்தார் சானியா. இதனால் 6-4, 4-6, 6-1 என்ற செட் கணக்கில் கார்னெட் வெற்றி பெற்றார்.

இரட்டையர் பிரிவு: இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சானியா-செக்.குடியரசின் லூஸி ரடேகா ஜோடி, ஜேர்மனியின் ஏஞ்ஜெலிக் - போலந்தின் கத்தர்ஜினா ஜோடியை எதிர்கொண்டது. இந்த ஆட்டத்தில் சானியா ஜோடி கடுமையாகப் போராடியபோதும் 7-5, 2-6, 10-12 என்ற கணக்கி[illegible] கண்டது. (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை சிங்களத்தில் மொழிபெயர்ப்பு

கொழும்பு, மே 19

பெரும்பான்மை சிங்கள மக்கள் வாசித்து அறிந்து கொள்வதற்காக ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கை சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட உள்ளது என அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெரும்பான்மை மக்கள் வாசித்து அறிந்து கொள்வதற்காக இவ்வாறு மொழிபெயர்க்கப்படுகிறது என அமைச்சர் சீ.பி.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வெசாக் பண்டிகையின் பின்னர் நாட்டின் அனைத்து மாவட்டச் செயலகங்களிலும் ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கையின் சிங்கள மொழிபெயர்ப்புப் பிரதி மக்களின் பார்வைக்காக வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆங்கில மொழியில் குறித்த அறிக்கையை வாசித்து அறிந்துகொள்ள பலரால் முடியாது என்பதனால் இவ்வாறான ஓர் தீர்மானம் எடுக்கப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

அறிக்கையின் விடயங்கள் தொடர்பில் பொதுமக்களுக்கு போதியளவு தெளிவு அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராகப் பத்து லட்சம் கையொப்பங்களை திரட்டும் நடவடிக்கைகளை அமைச்சர் சீ.பி.ரத்நாயக்க மேற்கொண்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

## சத்தியப்பிரமாணம்.....



இலங்கையின் முதல் பெண் பிரதம நீதியரசராக கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கா, நேற்று புதன்கிழமை காலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொள்கின்றார்.

# இலங்கையர்களுக்கான தடையை நீக்க பிலிப்பைன்ஸ் அரசு தீர்மானம்

கொழும்பு, மே 19

பிலிப்பைன்ஸுக்கு வேலைவாய்ப்பு பெற்றுச் செல்லும் இலங்கையர்களுக்கு விதிக்கப் பட்டிருந்த தடைகளை அகற்றுவதற்கு அந்த நாட்டு அரசு தீர்மானித்துள்ளது.

அண்மையில் பிலிப்பைன்ஸுக்குச் சென்ற பிரதமர் டி. எம். ஜயரட்ன அந்த நாட்டு ஜனாதிபதியுடன் நடத்திய கலந்துரையாடலின்போதே இதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இலங்கையர்கள் பிலிப்பைன்ஸுக்கு பிரவேசிக்கும் முன்னர் நாட்டில் விசா அனுமதிபெற்று கொள்ளப்பட வேண்டும் இந்த விதி தளர்த்தப்படவுள்ளது.

எதிர்காலத்தில் பிலிப்பைன்ஸூக்கு சென்றவுடன் விசா அனுமதியை பெற்றுகொள்ள முடியும் என தெரிவிக்கப் பட்டுள்ளது. இது குறித்த ஒப்பந்தம் வெகு விரைவில் கைச்சாத்தாகவுள்ளது.

இதேவேளை, கொழும்பில், பிலிப்பைன்ஸ் தூதவர் அலுவலகத்தை மீண்டும் திறந்ததன் ஊடாக இரு நாடுகளுக்கும் இடையிலான புதிய உறவுநிலை மேம்பட்டுள்ளது என பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார். (ச)

# நாட்டில் மீண்டும் பிரிவினைவாதத்தை ஏற்படுத்த புலம்பெயர் தமிழர்கள் முயற்சி

## ரிவன்த ஆரியசிங்க குற்றச்சாட்டு

கொழும்பு, மே 19

இலங்கையின் உறுதிப்பாட்டைக் குறைக்கும் வகையில் புலம்பெயர் தமிழர்கள் செயற்பட்டு வருகின்றனர். அதே வேளை, புலம்பெயர் தமிழர்களின் ஒரு பிரிவினர் தொடர்ந்தும் நாட்டில் மீண்டும் பிரிவினையை ஏற்படுத்தத் தீவிர ஆர்வம் காட்டிவருகின்றனர் - என்று ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கைத் தூதவர் ரிவன்த ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராகச் சர்வதேச யுத்தக் குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை ஐரோப்பிய ஒன்றி யத்தில் முறியடிக்கப்பட்டமை மகத்தான வெற்றியாகக் கருதப்பட வேண்டும் என்றும் அவர் தெவித்துளார்.

புலம்பெயர் தமிழர்களின் முயற்சி தோல்வியடைந்துள்ளது. ஐரோப்பிய நாடுகளில் இலங்கை தொடர்பான நிலைப்பாட்டில் ஒருதிருப்பு முனையாக இந்த நடவடிக்கைகளை நோக்க முடியும் எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

இலங்கைக்கு எதிரான போலியான பிரசாரங்களுக்கு இடமளிக்கப் படக்கூடாது. உண்மை நிலைமைகளை ஐரோப்பிய நாடுகளினது பிரதிநிதிகளுக்கு அரசு தெளிவுபடுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் சமாதானத்தில் உண்மையாகவே ஆர்வம் காட்டியிருந்தால் 2003 ஆம் ஆண்டு புலிகள் சமாதான முனைப்புகளிலிருந்து விலகியபோது தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆயுதப் போராட்டத்தின் மூலம் ஈழக் கனவை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை காணப்பட்ட வரையில் சர்வதேச தலையீடு பற்றி இந்தப் புலம்பெயர் தமிழ் அமைப்புகள் அக்கறை காட்டவில்லை.

தற்போது சர்வதேச யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் முதலைக் கண்ணீர் வடிக்கும் தரப்பினர், புலிகள் யுத்த முனைப் புகளை மேற்கொண்ட போது மௌனித்திருந்தனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஸ்திரத்தன்மைக்குக் குந்தகம் ஏற்படுத்தும் நோக்கில் ஐரோப்பிய ஒன்றியத்தில் தீர்மானம் நிறைவேற்ற முனைப்பு காட்டப்பட்டது என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ச)

## விடுதிப் பாதுகாவலர் தேவை

மன்னார் மாவட்டத்தில் உள்ள சைவ சூழலில் நடத்தப்பட்டு வருகின்ற சிறுவர் இல்லம் (ஆண்கள்) ஒன்றுக்கு 40- 60 வயதுக்கு உட்பட்ட, தேக ஆரோக்கியம் உள்ள விடுதிப் பாதுகாவலர் (Worden) ஒருவர் தேவையாக உள்ளார். சிறுவர் சம்பந்தப்பட்ட விடயங்களில் அனுபவம் மிக்கவர்கள் விரும்பப்படுவர். வேதனம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். சுய விவரம் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

திட்டச் செயலாளர்,
சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம்,
60A, பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
தொடர்புகொள்ள வேண்டிய தொ.பே.இல.: 0212220483.
மின்னஞ்சல்:cfcd 10@gmail.com.

(4347) (38)

## உழவு இயந்திரம் விற்பனைக்கு

SWARAJ இந்திய ரகம் 722FE
ரக்கர்25KP (டீசல் சிக்கனமுடையது)
சுயமுயற்சியாளருக்கு ஏற்றது.
நம்பமுடியாத விலையில்
பெட்டியுடன் விற்பனைக்கு உண்டு.
உடன் தொடர்பு கொள்பவர்களுக்கு
முன்னுரிமை வழங்கப்படும்.

மில் சேவைகள், 26, சீனிவாசகம் வீதி,
யாழ்ப்பாணம்.

## IMMEDIATE VACANCY
## OFFICE MANAGER

மருந்துவகைகள் இறக்குமதி செய்து விற்பனை செய்யும் நிறுவனத்துக்கு காரியாலய முகாமையாளர் தேவை.
தகைமை- Computer (Micro Soft office)
Accountancy Experience.
நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கவும்.
திகதி- 19.05.2011 காலை 9 மணி முதல்.
தொடர்பு- 0777313672

## பொதுக் கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும்
## வாரிவனம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்- சிவன் கோயில் வீதி, சாவகச்சேரி

எதிர்வரும் 21.05.2011 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவிருந்த மேற்படி ஆலயத்துக்கான நிர்வாக சபையைத் தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டம் பிற்போடப்பட்டு எதிர்வரும் 22.05.2011ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்துக்குத் தாங்கள் சமுகம் தருவதுடன் ஆலயத்துடன் சம்பந்தப்பட்ட உபயகாரர்கள், திருப்பணி நன்கொடையாளர்கள், வழிபடுவோர் அனைவரும் கலந்துகொள்வதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பிரதேச செயலர்,
தென்மராட்சி.

(4343) (38)

## 1ST முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



பார்த்திபன்- கார்த்திகா
தம்பதியரின் தவப்புதல்வன்
### பா.ஹரிஸீகேஸ்
### 19.05.2011

நுணாவில் மேற்கைச் சேர்ந்த திரு. திருமதி பார்த்திபன்- கார்த்திகா தம்பதியரின் தவப்புதல்வன் ஹிரிஸீகேஸ் தனது முதலாவது பிறந்தநாளை இன்று (19.05.2011) வியாழக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

ஹிரிஸீக் குட்டியை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, சோபிச்சித்தி, ஹரிமாமா, கனடாவில் வசிக்கும் சைத்திரி அத்தை, கண்ணன் மாமா, மிலன் மச்சான், அஸ்விகா மச்சாள், அனோகா மச்சாள், பெரியஅம்மம்மா, சின்ன அம்மம்மா (U.K) மற்றும் அத்தை, மாமா, மச்சான், மச்சாள், சித்தப்பா, சித்தி, அண்ணா, அக்கா, உற்றார், உறவினர் அனைவரும் கொல்லங்கிராய் விநாயகர் அருளால் சகல செல்வங்களும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

நுணாவில் சந்தி,
சாவகச்சேரி.

அப்பப்பா.

(செ/077)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கைகொடுக்கும் யோசனை

★இலங்கையில் நடைமுறையில் உள்ள அவசரகாலச் சட்டத்தை நீக்குவதற்கு விரைந்து ஏற்பாடு செய்யவேண்டும்.

★ இலங்கைக்கு எதிராக எழுப்பப்பட்டுள்ள மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து அது விசாரணை நடத்தவேண்டும்.

★ போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இயல்பு நிலையை உருவாக்க விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

இந்தியா சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், அந்த நாட்டின் அமைச்சர்கள், அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தியவேளை வலியுறுத்தப்பட்டவற்றில், மேற்கண்ட மூன்று விடயங்களும் முக்கிய இடம் பெறுகின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை தொடர்பான நிபுணர்குழுவின் அறிக்கை குறித்து இரண்டு தரப்புகளும் பேசிய போதிலும், கூட்டறிக்கையில் அது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை - என்று அறியப்படுகிறது.

அவசர காலச் சட்டத்தை நீக்க வேண்டும் என்ற கோரிக்கை நாடாளுமன்றத்தில் மிகக் குறிப்பாகத் தமிழர் தரப்பாலும், எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியாலும் மாதாந்தம் எழுப்பப்பட்டு வருவதும் -

அரசாங்கம் அதனைக் காதில் போட்டுக் கொள்ளாமல் தனது அதீத வாக்குப் பலத்தைக்கொண்டு நிறைவேற்றுவதும் தெரிந்தவையே.

அவசர காலச்சட்டத்தின் தேவையை நியாயப்படுத்தும் பாதுகாப்புச் சம்பந்தமான காரணங்களைப் புதிது புதிதாகத் தானே கண்டுபிடித்து அவற்றை முன்னிறுத்தி மாதாந்தம் நிறைவேற்றுவதும் - அதனைக் கையில் எடுத்து தான் நினைத்த காரியத்தை செய்து முடிப்பதும் அரசின் வழமையான சம்பிரதாயமாகிவிட்டது.

அந்தச் சட்டத்தை நீடிக்க தெரிவிக்கப்படும் காரணங்கள், விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும் செயற்படுவதற்கான கருக்கட்டுதல்கள் உண்டெனக் காட்டுவதாகவே அமைவதும் வழக்கம்.

அந்த வரிசையில், தமிழகத்தில் விடுதலைப்புலிகளின் பயிற்சி முகாம்கள் உள்ளன, அவற்றின் மூலம் இலங்கைக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படலாமென்று நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டதும் -

அவ்வாறு எந்த முகாமும் தமிழகத்தில் இல்லையென்று இந்திய அரசு மறுத்து, அங்குள்ள இலங்கைத் தூதுவரை அழைத்து ஆட்சேபம் தெரிவித்ததும் பதிவாகிய நிகழ்வுகள்.

அதனை ஞாபகத்தில் வைத்திருந்து, சந்தர்ப்பம் பார்த்து இந்திய அரச தரப்பில் அவசரகாலச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் பீரிஸிடம் இடித்துரைக்கப்பட்டுள்ளது எனக் கருதலாம்.

மேலும், இந்த மாதத்துக்கான அவசர காலச்சட்டம் நிறைவேற்றப்பட்ட சில நாள்களின் பின்னர், அரச தரப்பைச் சேர்ந்த சிலர், அந்த சட்டத்தின் சில பகுதிகளை நீக்குவது குறித்து சாதகமாக ஆராயப்படுவதாகக் கூறிவருகிறார்கள்.

அவசர காலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான முற்றிலும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ''பிடியை'' அரசு தன்னிடம் வைத்திருக்கிறது. அந்தக் கொழுக்கியால் அரசுக்கு விரோதமானவர்களை அச்சுறுத்தும் வாய்ப்பையும் அது வளர்த்துள்ளது.

இத்தகைய பின்னணியில் -

இந்தியா பகிரங்கமாக வலியுறுத்தியுள்ளது போன்று அவசரகாலச் சட்டத்தை முழுமையாக நீக்குவதற்கு, அரசு இசையுமா என்பதனைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

இலங்கைக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள மனித உரிமை மீறல்கள் குறித்து அரசு விசாரணைகளை நடத்த வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளமை ஒரு ''புதுவித அழுத்தம்'' என்று கொள்ளத்தக்கது.

வன்னிப் போர் தனது மனிதாபிமான நடவடிக்கை என்று பிரகடனம் (Enunciate) பண்ணும் இலங்கை அரசு இந்தியாவின் அழுத்தத்துக்கு அசையுமா என்பதே முதலில் எழும் வினாவும் சந்தேகமும் ஆகும்!

எனினும், ஐ.நா. நிபுணர் குழுவினால் தெரிவிக்கப்பட்டுள்ள போர்க் குற்றச்சாட்டுகளை அமுக்கி அமிழ்த்தி விடுவதற்கு இந்தியாவின் யோசனை வாய்ப்பு அளிக்கும் என்று கருதி இலங்கை அதனைச் சிரணித்துச் செயற்பட முனையக்கூடும் என்ற ஒரு ஏது நிலையும் தெரிகிறது.

இம்மாதம் முதல் வாரத்தில் கொழும்பு வந்திருந்த அமெரிக்க உதவி அமைச்சர் றொபேட் ஓ பிளெக் இலங்கை அரசாங்கத்திடம் தெரிவித்த ஆலோசனையிலிருந்து இந்தியாவின் யோசனை சற்று வேறுபாடாக உள்ளதையும் அவதானிக்க முடிகிறது.

துணைச் செயலாளர் றொபேட் ஓ பிளேக், இலங்கையில் போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்களை நீதியின் முன் நிறுத்துங்கள். போர்க் குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறும் விடயத்தில் கவனம் செலுத்தப்படும் என இலங்கை உறுதியளித்திருக்கிறது. ஆனால் அது உறுதி மொழிகளில் அல்லாமல் செயலில் காட்டப்பட வேண்டும் -

உள்ளூர் அதிகாரிகள் போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறும் தமது கடமையைச் சரிவரச் செய்யத் தவறுவார்களாயின், சர்வதேசப் பொறிமுறை ஒன்றின் மூலம் அதனை நிறைவேற்றவேண்டி வரும் என்று எச்சரிக்கும் தொனியில் வலியுறுத்தியுள்ளார்.

பிளேக் தெரிவித்தவாறு, சர்வதேச நீதிமன்றங்களில் இலங்கை மீதான போர்க் குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்படுவதனைத் தடுக்கும் யோசனையாகவே இந்தியாவின் அறிவுறுத்தல் அமைந்துள்ளது எனலாம்.

ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கையை இலங்கை அரசு நிராகரித்துள்ளது. அதற்கு மாற்று மார்க்கமாக தருஸ்மன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் உண்மைகள் இல்லை என்பதனைச் சர்வதேசங்களுக்கு நாம் எடுத்துரைத்தால் அது வலு இழந்துவிடும். இதனை மனதிற் கொண்டு, போர் நடைபெற்ற பிரதேசங்களில் வாழும் இடம்பெயர்ந்த மக்களுக்கு அரசாங்கம் செய்துவரும் மனிதாபிமானப் பணிகள் குறித்தும் நல்லிணக்க ஆணைக்குழு மேற்கொள்ளும் நற் பணிகள் குறித்தும் ஆதார பூர்வ அறிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபைக்கும், அதன் செயலாளர் நாயகத்துக்கும் அனுப்பி வைப்போம் என்ற ஜனாதிபதியின் நிலைப்பாடு சரிந்து போகும் என்று கொள்ளலாம்.

இலங்கை அரசு, தான் நியமித்துள்ள நல்லிணக்க ஆணைக்குழுவைத் தூக்கிப் பிடித்துக் காட்டிக்கொண்டு, போர்க் குற்ற விசாரணையை இல்லாமற் செய்து சமாளித்து விடலாம் என்று இனியும் நம்பிக்கை வைத்திருக்க முடியாது என்று வெளிச் சக்திகள் நெருக்கும் கட்டம் வந்து கொண்டிருக்கிறது.

அரசுக்கு எதிரான நிலைப்பாடு மேற்கு நாடுகள் உட்பட மிகப் பல நாடுகளில் வலுத்து வருகிறது. உலகளாவிய ரீதியில் முப்பத்தைந்துக்கும் அதிகமான நாடுகள் ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை ஆதரிக்கின்றன. இத்தகைய நிலையில் இந்தியாவின் ஆலோசனை இலங்கைக்குச் சார்பாக, கைகொடுப்பதாகவே உள்ளது எனலாம்.

# வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் 75 சுகாதார சேவை நிலையங்கள்

## 20 கோடி ரூபா செலவில் அமைக்க ஏற்பாடு

கொழும்பு, மே 19

இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் 20 கோடி ரூபாய் செலவில் புதிதாக 75 சுகாதார சேவை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேன கடந்த 16 ஆம் திகதி ஜெனீவாவில் வைத்துத் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் இடம்பெற்ற உலக சுகாதார அமைப்பின் 64 ஆவது உலக மாநாட்டில் உரை நிகழ்த்தியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இலங்கை அரசு உலகமய சுகாதாரச் செயற்பாடுகளை மேம்படுத்த உலக சுகாதார அமைப்புடன் ஒத்துழைத்துச் செயற்படுகிறது. அந்த அமைப்பு வழங்கும் ஒத்துழைப்பை மதித்துப்போற்றுகிறது.

கடந்த இரண்டாண்டு காலத்தில் யுத்த மோதல்கள் இடம்பெற்ற பிரதேசங்களின் அபிவிருத்திகளுக்காக அரசு செலவழித்துள்ள தொகை 9ஆயிரத்து 200 கோடி ரூபாவாகும்.

அதேபோன்று அந்தப் பிரதேசங்களின் மருத்துவமனைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. மேலதிகமாக 75 சுகாதார சேவை நிலையங்களையும் நிறுவும் புதிய செயற்றிட்டம் ஒன்றைச் சுகாதார அமைச்சு ஆரம்பித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் முதற் கட்டச் செயற்பாடுகள் தொடர்பாக 20 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-22)

# தமிழர் படுகொலை தொடர்பான புத்தகங்கள் கொழும்பில் சுங்கத் துறையினரால் பறிமுதல்

## கனடாவுக்கு கப்பலில் எடுத்துச் செல்லப்பட்ட

போர்க்குற்றம் தொடர்பான புத்தகங்களை கனடாவுக்கு அனுப்பப்பட்டபோது, கொழும்பு சுங்கத்துறையினரால் சட்ட விரோதமாக பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இலங்கை அரசால் நடத்தப்பட்ட ஈழத் தமிழர்கள் மீதான படுகொலைகள் மற்றும் போர்க் குற்றம் தொடர்பான ஆவணங்களை உள்ளடக்கிய புத்தகங்களான' தமிழினப் படுகொலைகள்' மற்றும் என்ன செய்யலாம் இதற்காக? என்ற புத்தகங்கள் தமிழகத்தில் வெளியிடப்பட்டு விற்பனையாகி வருகின்றன.

தமிழினப் படுகொலைகள் என்ற புத்தகம், 60 ஆண்டுகளாக ஈழத்தமிழர்கள் மீது நடத்தப்பட்ட படுகொலைகள் குறித்த முழு புள்ளி விவரங்களைக் கொண்டுள்ளது. வட கிழக்கு மனித உரிமை செயலகத்தால் தொகுக்கப்பட்டு, தமிழகத்தில் மனிதம் பதிப்பகத்தால், இப்புத்தகம் கடந்த 2009 இல் ஆங்கிலத்திலும், தமிழிலும் அச்சிடப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தமிழகத்தின் அனைத்துப் புத்தகக் கடைகளிலும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டில், கனடா, நோர்வே மற்றும் ஐரோப்பாவிலும் வெளியிடப்பட்டு விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

தமிழினப் படுகொலைகள் புத்தகம், டப்ளினில் நடத்தப்பட்ட பன்னாட்டு நீதியரசர்களால் இலங்கை போர் குற்றங்கள் தீர்ப்பாயத்தில் ஒரு குற்ற ஆவணமாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று. என்ன செய்யலாம் இதற்காக? என்ற புத்தகம் அண்மையில் சென்னையில் வெளியிடப்பட்டது. இதை பிரபாகரன் என்பவரால் தொகுக்கப்பட்டு, மதுரையில் உள்ள பென்னி குயிக் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

இப்புத்தகத்தில், ஈழத்தில் நடைபெற்ற போர் குற்றங்கள் தொடர்பான படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இப்புத்தகமும் தமிழகத்தில் விற்பனையாகி வருகிறது.

இந்த இரண்டு புத்தகங்களை கனடாவில் உள்ள தமிழர்களுக்கு கிடைக்க வேண்டி, 45 பெட்டிகளில், சென்னையில் உள்ள மனிதம் இண்டர்நசனல் என்ற வெளிநாட்டுக்கு பொருள்களை அனுப்பு உரிமம் வைத்துள்ள நிறுவனத்தின் மூலமாக, எல்லாவித இந்திய சுங்கத் துறை ஆவணங்களைப் பெற்று, முறையாக கடந்த 9ஆம் திகதி கப்பல் மூலமாக கனடாவுக்கு அனுப்பப்பட்டது. அக்கப்பல், 11ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தினூடாக, கனடாவுக்கு அந்தப் புத்தகங்கள் எடுத்துச் செல்லவிருந்தது. இவ்வேளையில், கொழும்பு துறைமுகத்தையடைந்த கப்பலின் புத்தக பெட்டகங்களை இலங்கை சுங்கத்துறையினர், 14ஆம் திகதி சோதனையிட்டு, தடை செய்யப்பட்ட புத்தகங்கள் எனக் கூறி அவை அனைத்தையும் பறிமுதல் செய்து வைத்துள்ளனர்.

கொழும்பு ஊடாக செல்லும்போது, இலங்கை சுங்கத்துறையினர் பன்னாட்டு சட்டங்களை மதிக்காமல், கொழும்பில் சோதனை செய்துள்ளனர். சோதனையிட்டப் பொருள்களையும், பொய்யான காரணங்களை கூறி, கனடாவுக்கு புத்தங்களை அனுமதிக்காமல் பறிமுதல் செய்து நிறுத்தி வைத்துள்ளனர். இது பன்னாட்டு சட்டங்களின்படி குற்றமாகும்.

இலங்கை அரசு, உடனடியாக பொருள்களை கனடாவுக்கு விடுவிக்காதபட்சத்தில், இலங்கையின் மீது பன்னாட்டு கடல் வணிகச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படும்'', என்று சென்னையில் உள்ள மனிதம் இன்டர்நசனலின் உரிமையாளர் அக்னி சுப்பிரமணியம் தெரிவித்தார் என்று இணையத் தள செய்தி ஒன்று தெரிவித்தது.

(ஒ-10)

# ஒவ்வொரு மாணவனும் செய்ய வேண்டியது எதனை?

ஒவ்வொரு மாணவனும் சித்த சுத்தியை - தூய சிந்தனைக்கு வழிவகுக்கக் கூடிய சத்கர்மாஸ் - நல்ல கருமங்களைச் செய்ய முற்படவேண்டும். தூய சிந்தை எங்கு இருக்கிறதோ அங்கு ஞான சித்தி- ஞானோதயம் இருக்கும். இவை அனைத்தும் எமக்குள்ளேயே இருக்கின்றன. புறத்தே எங்கும் தேடி அலைய வேண்டியதில்லை. சுவர் மணிக்கூட்டை உதாரணத்துக்கு எடுத்துக் கொள்வோம், அதன் நொடிக் கம்பியை சத்கர்மங்களுக்கு ஒப்பிடலாம். அதாவது நாம் செய்யும் நற்காரியங்கள் நிமிடம் காட்டும் கம்பி, சித்த சுத்தியை - சிந்தையின் தூய்மையைக் குறிக்கும், சித்த சுத்தி உபாசன நிலையைக் குறிக்கின்றது. நாம் கடவுளை நேசிப்பதையும் பலகாலங்களுக்குப் பலவகையாக வழிபாடாற்று வதையும் உபாசன நிலை குறிக்கும், இது ஆத்ம விஸ்வாஸ - தன்னம்பிக்கைக்கு வழிவகுக்கும், மணித்தியாலக் கம்பி தன்னம்பிக்கையைக் குறித்து நிற்கும்.

வினாடிகாட்டியினதும், நிமிடக்காட்டியினதும் பார்க்கக்கூடிய வேகமான அசைவுகள், கண்ணுக்குப் புலனாகாத மந்தகதியில் செல்லும் மணித்தியாலக் கம்பியின் அசைவுக்குக் காரணமாக உள்ளது.



அதுபோலவே, எமது நல்ல செயல்கள், இறைவனை நேசித்தல் வணங்குதல் ஆகியன ஆத்ம விசுவாசத்துக்கு அல்லது தன்னம்பிக்கைக்கு வழி வகுக்கும்.

*(நன்றி: சாயி அருளமுதம்)*

சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச ஊழியருக்கு புதிய காப்புறுதி திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை

கொழும்பு, மே19

இலங்கையின் அனைத்து அரச ஊழியர்களும் பலாபலன்களை ஈட்டிக் கொள்ளத்தக்க புதிய கோணத்திலான ஆயுள் காப்புறுதித் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தின் தலைவர் சேனக்க அபே குணசேகர இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

அனைத்துத் தரங்களிலும் உள்ள அரச ஊழியர் ஒருவருக்கு ஆயுள் காப்புறுதிப் பாதுகாப்பு ஒன்றைப் பெறத்தக்க விதத்தில் அறிமுகப்படுத்தப்படவுள்ள அந்தப் புதிய கோணத்திலான காப்புறுதி முறைமை, அனுமதிக்காக நிதியமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

நிதியமைச்சின் அனுமதி கிடைத்ததும் உடனடியாகவே அந்த முறைமையை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ம-22)

# சிரேஷ்ட அமைச்சர்களின் அலுவலக கட்டடத்துக்கு மாதாந்தம் 21 லட்சம் வாடகை

கொழும்பு, மே19

சிரேஷ்ட அமைச்சர்களுக்கான அலுவலகம் செயற்படும் கொழும்பு- 3 இல் அமைந்துள்ள கட்டடத்துக்கு மாதாந்த வாடகையாக அரசு 21 லட்சம் ரூபாவைச் செலுத்துவதாக அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதற்கமைய இந்தக் கட்டடத்துக்கு ஆண்டொன்றில் இரண்டு கோடி 52 லட்சம் ரூபா அரசு வாடகைப் பணமாகச் செலுத்த வேண்டி நேர்ந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

முன்னர் இதேமாத வாடகை அடிப்படையில் ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பாகவும் பின்னர் அரச சேவைகள் ஆணைக்குழுவின் அலுவலகம் தொடர்பாகவும் இந்தக்கட்டடம் பெறப்பட்டிருந்தது.

தனியார் நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான இந்தக் கட்டடத்தை வாடகை அடிப்படையில் பெறும் ஒப்பந்தக் காலம் கடந்த ஏப்ரல் மாதத்தில் முடிவுற்றுள்ளது. இன்னும் ஓராண்டு காலத்துக்கு அரசு அந்த ஒப்பந்தத்தை நீடிக்கத் தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-22)


## மரண அறிவித்தல்

### இரத்தினம் இதயராசா (மாமா)



கரணவாய், தூதாவளையைப் பிறப்பிடமாகவும், கரணவாய், காவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் இதயராசா 16.05.2011 அன்று அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் - வரதலட்சுமி (அசுபதி) தம்பதியரின் பாசமிகு புதல்வரும், தயாளன் (லண்டன்), தயாநிதி (லண்டன்),செல்வராசா (தாஸ்-லண்டன்), தயாபரன் (அப்பன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கஜசிலா (லண்டன்), கணேசராசா (லண்டன்), கோசலா ஆகியோரின் மைத்துனரும் கவீனா, கஜித், அபிகா, ஆதிகா (லண்டன்) ஆகியோரின் சித்தப்பாவும் கீர்த்திகா, வருண் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.பகல் 10.00 மணிக்கு தகனக் கிரியைக்காக வெல்லன்கிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

காவில், கரணவாய்,
கரவெட்டி.

(46)(115)

தகவல்
சி.முருகேசு (பெரியதந்தை)

## 90 ஆம் நாள், 5 ஆம் மாத நினைவில்...

அமரர் தில்லையம்பலம் மகேந்திரசெல்வம்



பிறப்பு 1955.03.07
இறப்பு 2011.02.20

அமரர் மகேந்திரசெல்வம் திருவருட்செல்வன்



பிறப்பு 1984.04.27
இறப்பு 2010.12.27

ஆலம் விழுதுகள் போல் உறவுகள்
ஆயிரம் இருந்துமென்ன
வேரென நீங்கள் இருந்தீர்கள்- அதில்
வீழ்ந்து விடாதிருந்தோம்
எம் புலன்கள் எம்மை உணரும்
இறுதிக் கணம் வரை
உங்கள் நினைவுகளுடன்.....

மீசாலை மேற்கு,
மீசாலை

(40-20-50)(1681)

- குடும்பத்தினர்.


# இலங்கையின் புவி ஈர்ப்பு விசை குறைகிறது சர்வதேச புவியியல் ஆய்வாளர்கள் கருத்து

கொழும்பு, மே 19

உலகில் புவியீர்ப்பு விசை மிகவும் குறைந்த நாடுகளில் ஒன் றாக இலங்கை காணப்படுகின்றது என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

புவியியலாளர்களினால் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இந்த உண்மை கண்டறியப்பட்டுள்ளது.

குறிப்பாக தென் மாகாணம் மற்றும் அதன் கரையோரப் பகுதிகளில் மிகவும் குறைந்தளவு புவியீர்ப்பு விசை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. சில நாடுகளைச் சேர்ந்த புவியியல் ஆய்வாளர்களினால் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

என்ன காரணத்தினால் இவ்வாறு ஈர்ப்பு விசையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பது கண்டுபிடிக்கப்படவில்லை. புவியீர்ப்பு விசையானது எல்லா நாடுகளிலும் ஒரே அளவானது என்றே அண்மைக்காலம் வரையில் கருதப்பட்டு வந்தது.

நிலத்தின் கீழ்க் காணப்படும் பாறைகளின் அடிப்படையில் புவியீர்ப்பு விசையில் மாற்றம் காணப்படுகின்றது என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். எனவே இந்த விடயங்கள் தொடர்பில் விரிவான ஆய்வுகள் நடத்தப்பட உள்ளன என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(ச)

# கள்ள நோட்டு வைத்திருந்த ஒருவர் பொலிஸாரிடம் சிக்கினார்

மரதங்கடவல பிரதேசத்தில் கடந்த திங்கட்கிழமை போலி நாண யத்தாள்கள் சிலவற்றுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்தே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் காணப்பட்ட 2,000 மற்றும் 1,000 ரூபா போலி நாணயத்தாள்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

மரதங்கடவல வலகம்பாகுவ பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேக நபர் கெக்கிராவ நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

(ச)

# விபத்தில் இருவர் காயம்

வீதியில் உள்ள குழியில் மோட்டார் சைக்கிள் சில்லு இறங்கியதில் தூக்கி வீசப்பட்டு காயமடைந்த இருவர் சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு வரபட்டுள்ளனர்.

புளியம் பொக்கணையைச் சேர்ந்த எஸ். சுந்தரம் (வயது- 62), கச்சாயைச் சேர்ந்த எஸ். பிரேமினி (வயது- 17) ஆகியோரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டவர்களாவர்.

இதேவேளை நுங்கு பொறுக்கச் சென்றவரின் தலையில் தேங்காயும் கையில் நுங்கும் வீழ்ந்ததில் இளைஞர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் உசனில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ஆர்.புவனேந்திரன் (வயது- 25) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ம-207)


## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் அரியரத்தினம்



காரைநகர், பயிரிக்கூடலைப் பிறப்பிடமாகவும் பத்தர் கேணியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் அரியரத்தினம் நேற்று (18.05.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம்- முத்தம்மா தம்பதியரின் மருமகனும் புஸ்பராணியின் அன்புக் கணவரும் காண்டீபன், கிருபாகரன், சசிகரன், ரேவதி ஆகியோரின் அன்புத் தந்தையும் சபாரத்தினம், விமலசந்திரன், இராமன், இலட்சுமணன்,கணேசபிள்ளை, கனகாம்பிகை, கனகமலர், இராசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் நாகேஸ்வரி (ஆசிரியை, யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம் ), புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.05.2011) வியாழக்கிழமை மு.ப 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிய்யைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பத்தர் கேணியடி,
காரைநகர்.

(46)(4344)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
25.01.1925

மறைவு
19.05.2006

அமரர் கணபதிப்பிள்ளை மார்க்கண்டு ஜோசவ்

வாழ்வு என்னும் கொடையை - இவ்
வையகத்தில் எமக்குத்தந்து- எம்மை விட்டு
வானகம் சென்றுவிட்ட எங்கள் அன்பு ஐயாவே

மறைந்தோடியது ஐந்து ஆண்டுகள்
மறக்கத்தான் முடியுமா? உங்கள் அன்புமுகம்
ஆண்டுகள் ஐந்து என்ன? ஆயிரம்தான் ஆனாலும்
அழியாது உங்கள் அன்பு முகம் எம் இதயமதில்
உங்கள் ஆன்மா சாந்திபெற அனுதினமும்
வேண்டுகின்றோம் ஆண்டவரை

இல.25 A முளாய் லேன்,
சுண்டுக்குளி தெற்கு, யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(40)(4346)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாய தலைமைத்துவப் பயிற்சிக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் எதிர்ப்பு

கொழும்பு, மே 18

பல்கலைக்கழக மாணவர்களுக்கு ராணுவப் பயிற்சிக் கல்லூரிகளில் கட்டாய தலைமைத்துவப் பயிற்சி வழங்கும் உயர் கல்வி அமைச்சின் தீர்மானத்துக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

''இந்தத் திட்டத்தை நாம் எதிர்க்கிறோம்.

உயர்கல்வி அமைச்சின் தீர்மானத்தின் பின்விளைவுகளை அது எண்ணிப் பார்க்கவில்லை. இந்தத் திட்டத்தால் அதிகளவான மாணவர்களுக்கு பல்கலைக்கழகம் செல்வதற்கான ஆவல் குறைந்துவிடும்'' என்றார் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின்.

தலைமைத்துவப் பயிற்சியை இராணுவ முகாம்களில் தங்கியிருந்து பெற வேண்டியிருப்பதையிட்டு பல மாணவர்கள் அதிருப்தி வெளி யிட்டுள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

''இவ்வாறான கட்டாயப் பயிற்சியை பல்கலைக்கழக மாண வர்களுக்கு வழங்குவதற்கான அதிகாரம் உயர்கல்வி அமைச்சுக்கோ, பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழுவுக்கோ இல்லை'' என்றும் அவர் கூறினார். (சி)

## அழகோ அழகு...



கொண்டாட்டம்: வெசாக் கொண்டாட்டத்தை முன்னிட்டு யாழ்.குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் அலங்காரக்கூடுகள் அமைக்கப்பட்டுள்ளன. (23)

# போட்டிப் பரீட்சை முடிவுகளை வெளியிடாததால் உள நெருக்கடி

யாழ்ப்பாணம், மே 19

முகாமைத்துவ சேவையில் உள்ள இளநிலை ஊழியர்களைத் தரம் உயர்த்துவதற்கு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்படாமையால் பரீட்சைக்குத் தோற்றியோர் உள ரீதியாக நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளனர்.

கனிஷ்ட ஊழியர்களை முகாமைத்துவ சேவையில் தரம் III இற்கு தரம் உயர்த்துவதற்கு இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் கடந்த வருடம் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது.

போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த வடக்கு மாகாண சபை ஊழியர்களின் பெயர்ப்பட்டியல் அதன் தலைமை அலுவலகத்துக்கு வந்து இரு வாரங்கள் ஆகின்றன. ஆனால் இதுவரை அவை வெளியிடப்படவில்லை என்று பரீட்சைக்கு தோற்றிய ஊழியர்கள் கவலையும் விசனமும் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பரீட்சையில் சித்தியடைந்த வடக்கில் கடமைபுரியும் மத்திய அரசு ஊழியர்களின் பெயர்ப்பட்டியல் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்டது.

வடக்கு மாகாண சபைக்கு இந்தப் பெயர்ப் பட்டியல் கிடைத்த போதும் அது வெளியிடப்படவில்லை.

இதேவேளை, மாகாண சபையின் செல்வாக்கைப் பயன்படுத்தி சில ஊழியர்கள் அங்கு இருக்கும் பெயர்ப்பட்டியலைப் பார்வையிடுகின்றனர் எனவும் கூறப்படுகிறது.

அவர்கள் மூலமே பெயர்ப் பட்டியல் வந்த தகவல் தெரிய வந்ததாகவும் பரீட்சைக்கு தோற்றியவர்கள் கூறுகின்றனர். (ம-288)

# திருமலை சித்த மாணவர்கள் குடாநாட்டுக்கு கல்விச் சுற்றுலா

யாழ்ப்பாணம், மே 19

திருகோணமலை வளாக சித்த மருத்துவ மாணவர்கள் முதல் தடவையாக யாழ்ப்பாணத்துக்கு கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டு கடந்த 13ஆம் திகதி இங்கு வந்துள்ளனர்.

கடந்த ஐந்து தினங்களாக வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் ஆகிய பகுதிகளில் உள்ள மூலிகைப் பரம்பல் பற்றிய ஆய்வுகளை அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

முதலாம், இரண்டாம், மூன்றாம் சித்தமருத்துவ மாணவர்கள் சித்தமருத்துவத் துறைத் தலைவர் டாக்டர் வர்ண குலேந்திரன் தலைமையில் கல்விச் சுற்றுலாவில் இங்கு வந்துள்ளனர். (ஒ-323)

## ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையால் புதிய திருப்பம்

# ஈழத்தமிழர் பிரச்சினை சர்வதேசத்தின் கைகளில்; இந்த நிலையில் அரசு - கூட்டமைப்பு பேச்சு பாதகமே

## அரசியல் ஆய்வாளர் கீதபொன்கலன் கருத்து

கொழும்பு, மே 19

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை மூலம் ஈழத்தமிழர் பிரச்சினையில் புதிய திருப்பம் - மாற்றம் வந்துள்ளது. இந்த அறிக்கையின் ஊடாக சர்வதேச சமூகம் தமிழர் அரசியல் பிரச்சினையைக் கையில் எடுத்துள்ளது. அதாவது நெறிப்படுத்தி வருகிறது.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசுடனான பேச்சுக்களை அறிக்கையின் சர்ச்சைகள் சற்று ஓய்கின்ற வரையாவது ஒத்திவைப்பதே சிறந்ததும் அவசியமானதும் கூட.

தொடர்ந்து பேச்சு நடத்துவது பாரதூரமானதாகவே அமையும் - இவ்வாறு கூறினார் அரசியல் ஆய்வாளரும் பேராசிரியருமான எஸ்.ஐ.கீதபொன்கலன்.

ஊடகவியலாளர் எஸ். சிவராம் மற்றும் ஐ.நடேசன் ஆகியோரின் நினைவஞ்சலிக் கூட்டம் வெள்ளவத்தை தமிழ்ச் சங்கத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கீதபொன்கலன் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தமிழ் அரசியல் பிரதிநிதிகள் அரசியல் யதார்த்தம் மற்றும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு செயற்படவேண்டியதே காலத்தின் தேவையாகும்.

ஏனெனில் அரசியல் என்பது பிச்சையல்ல. தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பெற்றுக் கொடுக்கும் அதிகாரப் பரவலாக்கலுடன் கூடிய சமஷ்டிமுறைமையே தீர்வாக அமையவேண்டும். எனவே சமஷ்டிக் கோரிக்கைகளைப் பாதுகாத்து வைத்திருக்கவேண்டியதும் அவசியமாகும்.

எனவே நிபுணர் குழு அறிக்கையின் சர்ச்சை சற்று ஓய்கின்ற வரையாவது கூட்டமைப்பினர் அரசுடனான பேச்சுக்களை ஒத்திவைக்க வேண்டியது அவசியமாகும். அரசால் முன்வைக்கப்பட்டுள்ள செனட்சபை அல்லது இரண்டாவது சபை அமைக்கும் யோசனையானது பாரதூரமான விடயமல்ல. நாடாளுமன்றத்தின் அதிகாரம் குறைவடைந்து மாற்றுத் தெரிவாக இரண்டாவது பிரச்சினைக்கு செனட் சபையை - அதன் மூலமான தீர்வை தீர்வாகக் கொள்ளமுடியாது. எமது உரிமைகளைப் பெறுவதற்காக முன்வைக்கும் கோரிக்கைகளைப் பாதுகாத்து வைத்திருக்க வேண்டிய தேவை உள்ளது.

தமிழச் சமூகத்தினரின் அரசியல் எதிர்காலம் சற்று மங்கலாகவே உள்ளது. மூன்றாம் உலக நாடுகள் குறிப்பாக காலனித்துவ ஆட்சியிலிருந்து சுதந்திரம் அடைந்த நாடுகள் பல்லின சமூகங்களைக் கொண்டவை.

1948,1955 மற்றும் 1960 ஆம் ஆண்டுகளில் சுதந்திரமடைந்த நாடுகள் பல்லினங்களை இணைத்துக் கொண்டு தமது தேசிய ஐக்கியத்துக்குள் செயற்படுகின்றன. இதற்கு இந்தியா நல்ல எடுத்துக்காட்டாக விளங்குகிறது. வெற்றிகரமான மாற்றங்களுடன் பல்லின சமூக அதிகாரங்களை தன்வசப்படுத்தி தனது அரசியலில் உறுதி அடைந்துள்ளது. அதன் அரசியல் கொள்கைகளுக்கு எதிராகப் பேசமுடியாது. ஆனால், இதே காரணம்தான் இலங்கைத் தமிழர் பிரச்சினை தமிழ் நாட்டில் மேலோங்கவும் காரணமாக அமைந்தது.

### இரண்டாவது தடவை நாடு சுதந்திரம்?

2009 ஆம் ஆண்டில் இலங்கை இரண்டாவது தடவையாகச் சுதந்திரம் அடைந்ததாகக் கொண்டாப்படுகின்றது. ஆனால் இதன் பின்னரும் இலங்கை புதிய சவால்களை எதிர்கொண்டுள்ளது. புலிகள் இல்லாத பின்னணியில் அதிகாரப் பகிர்வு மீண்டும் தூசு தட்டப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களாக இனரீதியாகப் பிளவு ஏற்படுத்தும் வகையில் சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தமிழர்களின் எதிர்பார்ப்புகள் பலவீனமடைந்துள்ளன.

இதற்கு அரசியல் பிரச்சினைகளுக்குத்தீர்வுகிடைக்கப்பெறாமை, இனங்களுக்கிடையில் நல்லுறவு ஏற்படுத்தப்படாமை, தேசிய கொள்கைகளில் ஒளித்து வைக்கப்பட்ட தேசிய வாதம் என்பவற்றைப் பிரதான காரணங்களாகக் கொள்ளலாம்.

சர்வகட்சிக்குழு ஊடான 13 ஆவது திருத்தம் , அரசியல் பகிர்வும் கூட தீர்வுத்திட்டத்துக்கு இதுவரை உட்படுத்தப்படாதிருக்கின்றமை அவற்றின் மீதுள்ள நம்பிக்கையில்லாத் தன்மையைக் காட்டுகிறது.

### நல்லிணக்க ஆணைக்குழுவை பயன்படுத்திய தமிழர்கள்

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் தேசிய நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவை தமிழர்கள் முறையாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளதாகக் கருதுகிறேன். யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் தமது பிரச்சினைகளை முன்வைப்பதற்கு இந்தக் குழுவை களமாகப் பயன்படுத்தினர். ஆணைக்குழுவின் முன் மக்களால் முன்வைக்கப்பட்ட சாட்சியங்கள் ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையிலும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

இந்த அறிக்கை இலங்கைக்கு நேரடியாகப் பாரதூரமான விடயமாக அமைய வி... ...லும் ஐரோப்பிய ஒன்றியம் உட்பட அனைத்து சவர்தேச நாடுகளும் அறிக்கையைக் கையில் எடுத்துள்ளன. தற்போது இலங்கைத் தமிழர் பிரச்சினையைச் சர்வதேச் சமூகமே நெறிப்படுத்துகின்றது. இந்த நிலையில் கூட்டமைப்பினர் அரசுடன் பேச்சு நடத்துவது பாரதூர... ...வே அமையும் என்ற... ...ன்கலன். (ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
19 மே 2011 வியாழக்கிழமை

# மண்கும்பானில் சட்டவிரோத மணல் அகழ்வு கடல்நீர் ஊருக்குள் புகும் அபாய நிலை

## தடுத்து நிறுத்துமாறு ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் வலியுறுத்து

வேலணை, மே 19

சட்டவிரோத மண் அகழ்வானது வேலணைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய பிரதேசங்களில் என்றுமில்லாதவாறு அதிகரித்து காணப்படுகிறது. குறிப்பாக மண்கும்பான் பகுதி இதனால் மோசமாகப் பாதிக்கப்படுகிறது. சுமார் ஒரு மைல் சுற்றளவைக் கொண்ட இந்தக் கிராமத்தில் மணல் அகழ்வினால் கடல் நீர் உட்புகும் அபாயம் காணப்படுகிறது. இதனை தடுப்பதாயின் சட்டவிரோத மணல் அகழ்வை உடனடியாக நிறுத்த வேண்டும் - இவ்வாறு கேட்டுக்கொண்டார் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன்.

வேலணைப் பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கடந்த திங்கட்கிழமை வேலணைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சி.சிறீதரன், பாரம்பரிய கைத்தொழில், சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், பிரதேச செயலர் எஸ்.நந்தகோபாலன் ஆகியோருடன் துறைசார் அதிகாரிகள், பொலிஸ் மற்றும் கடற்படை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்தச் சட்டவிரோத மண் அகழ்வு தொடர்பாக பொலிஸ் அதிகாரிகளுடன் உடனடியாகக் கலந்துரையாடப்பட்டு அதனைத் தடுப்பதற்கு பொலிஸாரும் ரோந்து நடவடிக்கை மேற்கொள்ளவும், விழிப்புக் குழு அமைக்கப்படவும் தீர்மானிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள், கடற்தொழில் பிரச்சினைகள், வீதி அபிவிருத்தி, குடிதண்ணீர் வசதியை மேம்படுத்தல், போக்குவரத்து, மின்சாரம், சட்டவிரோத மண் அகழ்வு, வாழ்வாதார அபிவிருத்தி, கல்வி நடவடிக்கைகள் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது. (ஒ)

# 'என்றிப்' திட்டக் குழுவினர் அபிவிருத்திகள் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், மே 19

வடமராட்சி கிழக்கு வலிகாமம் வடக்கு ஆகிய பகுதிகளுக்கு நேற்று விஜயம் செய்த 'என்றிப்' திட்ட உயர்மட்டக் குழு அங்கு நடைபெறும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராய்ந்தது.

நேற்று காலை 9 மணியவில் வடமராட்சி கிழக்குப் பகுதிகளுக்குச் சென்ற இந்தக் குழுவினர் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்ற மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனைக்கான கட்டட வேலைகளையும், மருதங்கேணி, உடுத்துறை, ஆழியவளை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்ற பாடசாலைகளின் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் நேரில் சென்று கள நிலைமைகளை அவதானித்தனர்.

அத்துடன் பருத்தித்துறையில் அமைக்கப்படும் புதிய சந்தையின் கட்டட அபிவிருத்தி தொடர்பாகவும் ஆராய்ந்தனர்.

பிற்பகல் 2 மணியளவில் வலிகாமம் வடக்கில் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்ற இந்தக்குழு அங்கு நடைபெறும் அபிவிருத்திப் பணிகள் குறித்தும் ஆராய்ந்தது.

இதேவேளை வடமராட்சி கிழக்கு, வலிகாமம் வடக்கு ஆகிய பகுதிகளில் மீள்குடியமர்த்தப்பட்ட பிரதேசங்களில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த திட்ட முன்மொழிவுகள் அந்தந்தப் பிரதேச செயலர்களினால் இந்தக் குழுவினரிடம் சமர்ப்பிக்கப்பட்டன. (ம-9)

# சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் இரத்ததானம்



யாழ்ப்பாணம், மே 19

2600ஆம் ஆண்டு புத்த ஜெயந்தி தினத்தை முன்னிட்டு யாழ். சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் 25 பேர் நேற்று இரத்ததானம் செய்தனர்.

யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் திருமதி பவானி பசுபதிராஜா சிறைச்சாலை இரத்ததான நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகர் சந்தன எக்கநாயக்க தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவின், வைத்திய அதிகாரி திருமதி பி. கலைச்செல்வி மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ரி. ரவீந்திரன் ஆகியோர் செயற்பட்டு இரத்ததான சேகரிப்பில் ஈடுபட்டனர்.

சிறைச்சாலை அதிகாரிகள், சிறைக் காவலாளிகள் அலுவலக உத்தியோகத்தர்கள் இதன் போது இரத்ததானம் செய்தனர்.

இதேவேளை, வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ். பொது நூலகத்துக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள வெசாக் அலங்கார இடங்களைப் பார்வையிட வருபவர்களுக்கு மாலை வேளையில், பிஸ்கட், கோப்பி ஆகியவற்றையும் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் வழங்கினர்.

கடந்த இரண்டு தினங்களும் மாலை வேளையில் அவற்றைப் பொது மக்களுக்கு வழங்கியுள்ளனர்.

(ம-14-4)

# ஆலய திருவிழாவை முன்னிட்டு இரத்த தானத்துக்கு ஏற்பாடு

கொழும்புத்துறை, மே 19

குருநகர் புனித யாகப்பர் ஆலய 150 ஆவது ஆண்டு ஜூபிலி விழாவையொட்டி இரத்ததான நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாகப்பர் ஆலய இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாகப்பர் மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவினர் மண்டபத்தில் முகாமிட்டு குருதிக்கொடையாளிகளின் இரத்தத்தை சேகரிக்க உள்ளதாக இளைஞர் அமைப்பினர் தெரிவித்தனர். (ம-135)

# குற்றச் செயல்களைத் தடுக்கும் நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபாடு

கொழும்புத்துறை, மே 19

யாழ்ப்பாணத்தில் திருட்டுகள் மற்றும் குற்றச் செயல்களைத் தடுக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாக யாழ். குற்றத் தடுப்பு பிரிவினர் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

மீண்டும் கொள்ளைச் சம்பவங்கள் தலைதூக்கும் நிலை காணப்படுவதனால் மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தலை பொலிஸார் வழங்கி வருகின்றனர்.

இவ்வாரம் இடம்பெறும் வெசாக் கொண்டாட்டக் காட்சிகளைப் பார்வையிடும் போதும், திருவிழாக்களுக்குச் செல்லும் போதும் வீட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி ஒரு சிலரேனும் வீட்டில் இருப்பது பாதுகாப்புக்கு வழிகோலும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, வெளியில் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களுக்குச் செல்வோர் தங்க நகைகளை அணிவதைக் குறைத்துக்கொள்ள வேண்டும் எனவும் கூறப்பட்டது.

இவ்வாறான அறிவித்தல்களை யாழ். நகரிலுள்ள நகரை அண்டிய கிராமப்புறங்களிலும் யாழ். குற்றத்தடுப்புப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-135)

# வெளி மாவட்டங்களுக்குச் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பு





யாழ்ப்பாணம்,மே19

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்குப் பயணிகள் சேவையில் ஈடுபடும் தனியார் போக்குவரத்துப் பஸ் உரிமையாளர்கள் நேற்று ஒரு மணி நேரம் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் பயணிகள் சில மணி நேரம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

யாழ்.பஸ் நிலையத்தில் இருந்து பயணிகளை ஏற்றாமல் முற்றவெளி பஸ் தரிப்பிடத்தில் வைத்து ஏற்றுமாறு நேற்று போக்குவரத்துப் பொலிஸார் விடுத்த உத்தரவை அடுத்து அங்கு பஸ்களைக் கொண்டு சென்றனர்.

முற்றவெளியில் பஸ்களை நிறுத்தி விட்டு சேவையில் ஈடுபடாமல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்கு அங்கு கூடியிருந்த பயணிகள் நீண்ட நேரம் கால் கடுக்கக் காத்திருந்தனர்.

இதனையடுத்து அங்கு விரைந்த யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்ம தேவா பகிஷ்கரிப்பில் [illegible] கலந்துரையாடினார்.

அரச அதிபர், மாநகர முதல்வர் ஆகியோரைச் சந்தித்து சாதகமான முடிவைத் தருவதாக உறுதியளித்ததையடுத்து தனியார் பஸ் உரிமையாளர்கள் பகிஷ்கரிப்பைக் கைவிட்டு சேவையில் ஈடுபட்டனர்.

நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமான இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு பிற்பகல் ஒரு மணியளவில் கைவிடப்பட்டது.

(ம-9-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைநிறுத்தி வைக்கப்பட்ட ஓ.எல். பெறுபேறுகள் வந்தன

பருத்தித்துறை, மே 19

இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஜி.சீ.ஈ. சாதரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதரணதரப் பரீட்சையின்போது ஆயிரக் கணக்கான மாணவர்கள் ஆள் அடையாளத்தைப் பரீட்சை மண்டபத்தில் உறுதிப்படுத்துவதற்கான, பரீட்சைத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறி இருந்தனர். இதனால் அவர்களது பெறுபேறுகள் வெளியிடப்படாமல் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

அண்மையில் பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் மாவட்டங்கள் தோறும் நேரடியாகச் சென்று சம்பந்தப்பட்ட மாணவர்களைக் கடிதம் மூலம் அழைத்துப் பரிசீலனையையும் விசாரணையையும் மேற்கொண்டிருந்தார்கள். விசாரணையின் இறுதியில் பெறுபேறுகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் பாட சாலைகள் மூலமாகப் பெறுபேறுகள் வந்து சேர்ந்துள்ளன.

(த-190)

# களவாக மண் ஏற்றப்படுவதால் காக்கைதீவில் கடல்நீர் புகும் அபாயம்

நவாலி,மே 19

கல்லுண்டாய் காக்கைதீவு பகுதியில் களவாக மண் ஏற்றிச் செல்வதால் கடல் நீர் குடிமனைகளுக்குள்ளும் வயல் நிலங்களுக்குள்ளும் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் மண்ணை ஏற்றிச் செல்பவர்கள் அதிகாலை வேளையிலும் இரவுவேளையிலும் பிரதான வீதியூடாகச் செல்லாது குறுக்கு வீதிகளூடாகச் செல்கின்றனர்.

இவர்களுக்கு உதவியாக இவர்களது கையாள்கள் கைத்தொலைபேசியுடன் முக்கிய சந்திகளில் நின்று பொலிஸாரோ பாதுகாப்புப் படையினரோ வந்தால் தகவல்களைக் கொடுக்கின்றனர்.

இதனைவிட, யாருமற்ற வயல் காணிகளிலும் மண்ணை ஏற்றிச் செல்கின்றனர். இந்தப் பகுதி விவசாய சம்மேளனங்கள், பொது அமைப்புக்கள், கிராம சேவையாளர்கள் மற்றும் விவசாயிகள் ஒன்று சேர்ந்து இவற்றைத் தடுத்து நிறுத்த முன்வர வேண்டுமென்று மக்கள் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-100)

# வேலணை பிரதேச சபைப் பிரிவில் 80 வீத வீதிகள் திருத்தப்படவில்லை

## நிதியுதவி வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 19

வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட 456 வீதிகளில் 80 வீதமான வீதிகள் திருத்தப் படவில்லை என்று பிரதேச சபைச் செயலர் சுட்டிக்காட்டி உள்ளார்.

''எமது பிரதேச சபை வருமானங்கள் அற்ற பிரதேச சபையாகும். எனவே எமக்குப் பிரத்தியேக ஏற்பாட்டின்கீழ் நிதியை பெற்றுத் தாருங்கள்'' என்று செயலாளர் கெ.தவராசா கோரிக்கையும் விடுத்துள்ளார்.

வேலணைப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கையை விடுத்தார்.


இதேவேளை, இந்த வருடத்தில் பிரதேச சபையின் பங்களிப்பு மற்றும் மக்கள் பங்களிப்புடன் 'நெல்சிப்' திட்டத்தின் ஊடாக வேலணை இராசையா வீதி, புங்குடுதீவு சங்கத்தார்கேணி வீதி, நயினாதீவு பெருங்குள வீதி ஆகிய மூன்று வீதிகளும் 34 மில்லியன் ரூபா செலவில் மீள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இதற்காக பிரதேச சபையும் தனது நிதியை வழங்கவுள்ளது.

ஏனைய 80 வீதமான வீதிகளும் மேசமான நிலையில் இருப்பதால் அவற்றை மீள்புனரமைப்புச் செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அமைப்புகளும் உதவ வேண்டும் - என்றார்.

(ம-302)

பார்வையளித்தல்...



சேவைநோக்கு: மானிப்பாய் பொலிஸாரால் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடத்திய நடமாடும் சேவையில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எல்கோ மல்கம்பேத் கண்பரிசோதனை செய்யப்பட்ட பெண்ணொருவருக்கு மூக்குக் கண்ணாடி அணிவிக்கிறார். (100)

# அமைச்சர் செனவிரட்ன நாளை யாழ். வருகிறார்

## பல நிகழ்வுகளில் பங்கேற்பார்

வலி.வடக்கு, மே 19

யாழ். குடாநாட்டுக்கு வருகை தரவுள்ள பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன நாளையும் நாளை மறுதினமும் யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ள பல்வேறு நிகழ்வுகளில் பங்குபற்றவுள்ளார்.

பொது நிர்வாக அமைச்சருடன் அமைச்சின் 20 இற்கும் மேற்பட்ட அதிகாரிகளும் பங்குபற்றவுள்ளனர்.

யாழ். செயலகத்துக்கு முன்பாக உள்ள பழைய பூங்காவில் அமைந்துள்ள சுற்றுலா விடுதியை அமைச்சர் நாளை திறந்து வைப்பர்.

அதனையடுத்து உடுவில் பிரதேச செயலகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள செயலகத்தின் புதிய கட்டடத்தையும் திறந்து வைப்பார்.

யாழ். மாவட்டத்தில் அரச அலுவலர்கள் பொது மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்குதல் தொடர்பாக பிற்பகல் வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெறவுள்ள கலந்துரையாடலில் பங்கு பற்றுவார்.

நாளை மறுதினம் சனிக்கிழமை காலை வடமராட்சி செல்லும் அமைச்சரும் குழுவினரும் வடமராட்சி கிழக்கு குடத்தனையில் நிர்மாணிக்கப்பட்ட கிராம செயலகம், கற்கோவளத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கிராம செயலகம் ஆகியவற்றைத் திறந்து வைக்கவுள்ளனர்.

நண்பகலில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் விடுதியைத் திறந்து வைக்கவுள்ளனர். (ம-86)

# வேலணைப் பிரதேச பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

வேலணை, மே 19

வேலணைப் பிரதேசத்தில் பாடசாலை மாணவர்களின் வசதிகருதி பாடசாலை ஆரம்பிக்கும் நேரம், முடிவடையும் நேரம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு பஸ் சேவைகள் நடத்தப்பட வேண்டும் அல்லது பாடசாலை சேவைக்கென தனியான பஸ் சேவை நடத்தப்பட வேண்டும்.

- இவ்வாறு பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை காலை வேலணைப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், ஈ.சரவணபவன், ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சில் வேஸ்திரி அலன்ரின், பிரதேச செயலர் ந.நந்தகோபாலன் மற்றும் துறைசார்ந்த அரச அதிகாரிகள், பொலிஸ் கடற்படை அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

மேற்படி கோரிக்கை தொடர்பாக இலங்கைப் போக்குவரத்துச் சபையினருடன் கலந்துரையாடி விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

# இந்தியாவில் உள்ள கல்வி வசதி வாய்ப்பை அறிய குடாநாட்டில் அலுவலகம் வேண்டும்

## கேட்கிறார் யாழ். பல்கலை துணைவேந்தர்

யாழ்ப்பாணம், மே 19

இந்தியாவிலுள்ள உயர் கல்வி நிறுவனங்கள் வழங்கும் பட்டப் படிப்புக் கற்கை நெறிகள் தொடர்பான அனைத்து விடயங்களையும் அறிந்து கொள்வதற்கான அலுவலகம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் நிறுவவேண்டும். யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்தின் ஆதரவுடன் யாழ். பொது நூலகத்தில் இரண்டு நாள் கள் இடம்பெற்ற இந்தியக் கல்விக் கண்காட்சி நிகழ்வினை நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்துகையிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரக அதிகாரி வெ.மகாலிங்கம் தலைமையில் கண்காட்சி ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

அங்கு உரையாற்றிய துணை வேந்தர் தெரிவித்ததாவது:-

''இலங்கையில் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில் மிகக் குறைந்த எண்ணிக்கையான மாணவர்களே உயர் புள்ளிகள் அடிப்படையில் பல்கலைக் கழகங்களுக்கு உள்வாங்கப்படுகிறார்கள். ஏனைய மாணவர்கள் எங்கே, எந்தக் கற்றை நெறியை உயர் கல்விக்காகத் தெரிவு செய்வது என்று தெரியாமல் குழம்பிப்போயுள்ளனர்.

இவர்களுக்கான வழியைக் காட்டிக் கொடுக்கும் வகையில் இந்தியாவின் கல்விக் கண்காட்சி அமைந்துள்ளது. இவ்வாறு மாணவர்களுக்குப் பயன் தரக்கூடிய கல்விக் கண்காட்சிகள் தொடர்ந்தும் இடம்பெற வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் அலுவலகம் ஒன்றினைத் திறந்து அதிகாரி ஒருவரை நியமித்து இந்தியாவில் பெறக்கூடிய கல்வி வசதிகள் பற்றி விளக்கங்கள், ஆலோசனைகளை வழங்க இந்தியத் தூதர அதிகாரி ஏற்பாடு செய்ய வேண்டும் - என்றார். (எ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதி நிலவட்டும்...



சிறப்பான வெசாக் பண்டிகை: மன்னார் - மடு பிரதான வீதியில் அமைந்துள்ள சிறிமாபோதி விகாரையில் வெசாக் பண்டிகை நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறுகின்றன. (601)

# தரமான சணல் விதைகள் கிளிநொச்சியில் உற்பத்தி

கிளிநொச்சி, மே 19

கிளிநொச்சி விவசாய விதை ஆராய்ச்சிப் பண்ணையில் சணல் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிளிநொச்சி இரணைமடுச் சந்திப் பகுதியில் அமைந்துள்ள விவசாய விதை ஆராய்ச்சி நிலையத்தால் தற்போது ஆயிரத்து 500 கிலோ சணல் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இவற்றை விவசாயிகளுக்கு கிலோ ஒன்று 90 ரூபா வீதம் விற்பனை செய்யவுள்ளதாக விவசாய விதை ஆராய்ச்சி நிலையத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

1980 இல் ஆரம்பிக்கப்பட்ட விதை ஆராய்ச்சி நிலையத்தின் சில கட்டடங்கள் போரினால் அழிவடைந்தன. அழிவடைந்த கட்டடங்கள் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன எனவும் திணைக்கள நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

# வன்னியில் 'நேர்ப்' வீட்டுத் திட்ட பயனாளிகள் கடும் நெருக்கடியில்

கிளிநொச்சி, மே 19

கிளிநொச்சி மாவட்டத்தில் வடக்கின் அவசர மீள் எழுச்சித் திட்ட 'நேர்ப்' பயனாளிகள் தமது வீட்டு நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்வதில் என்றுமில்லாதவாறு சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

கடந்த 2006ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் நேர்ப் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளும் மீளக்குடியமர்வின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளும் தமது வீடுகளை அமைப் திலும் அதனைப் பூர்த்தி செய்வதிலும் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

2006 இல் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் அந்தக் காலப் பகுதியில் வீடுகளை அமைக்கும் பணியை மேற்கொண்டு வீடுகளின் 60 வீதமான வேலைகளை நிறைவு செய்துள்ளனர். அதன்பின்னர் இடம் பெயர்ந்து சென்றனர். அந்தக் காலப்பகுதியில் வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் வீட்டுத் திட்ட வேலைகளுக் கெனப் பயனாளிகளால் சேகரிக் கப்பட்ட மணல், கல் என்பன வு மீளக்குடியமர்வதற்கு முன்னர் சிலரால் களவாடப்பட்டுள்ளன.

தற்போது இந்தப் பயனாளிகளை உடனடியாக வீட்டுத் திட்டப் பணிகளைப் பூர்த்தி செய்யுமாறு திட்ட அதிகாரிகளால் நெருக்குதல்களுக்கு உள்ளாகின்றனர். தாங்கள் பொருளாதார ரீதியில் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளனர் எனவும் வீட்டுத் திட்டத்துக்கென தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை போதுமானதாக இல்லை எனவும் இவர்கள் கூறுகின்றனர். வீட்டுப் பணிகளைப் பூர்த்தி செய்ய மேலும் 2 லட்சம் ரூபா அளவில் நிதியைத் திரட்ட வேண்டுமென வும் பயனாளிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக 'நேர்ப்' திட்ட நிர்வாகத்தினரிடம் கேட்டபோது, கடந்த ஏப்ரல் மாதத்துக்குள் இந்தத் திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டிருக்க வேண்டுமென வும் அந்தக் காலப்பகுதிக்குள் வீடுகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் இருந்ததனால் ஏனைய திட்டங்களை செய்ய முடியாமல் இருந்ததாகவும் தெரிவித்தனர். இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் இந்தத் திட்டங் களை நிறைவு செய்ய வேண்டு மெனவும் இவர்கள் தெரிவித்துள்ளனர். (க-6)

# மாந்தை கிழக்கு பிரதேச சபையின் முதல் அமர்வு நடைபெற்றது

முல்லைத்தீவு, மே 19

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச சபையின் முதலாவது சபை அமர்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றுள்ளது.

இந்தச் செயலமர்வு கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12.30 மணிவரை நடைபெற்றது.

இந்த அமர்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாகத் தெரிவு செய்யப்பட்ட ஆறு உறுப்பினர்களும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பாகத் தெரிவு செய்யப்பட்ட மூன்று உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாகத் தெரிவு செய்யப்பட்ட சபையின் தவிசாளரும் ஓய்வு பெற்ற அதிபரும் சமாதான நீதிவானுமாகிய தனிநாயகம் தலைமையில் இடம்பெற்ற இந்த அமர்வு, மாந்தை கிழக்கு பிரதேச சபையின் கீழ் உள்ள வீதிகளைப் புனரமைப்பது தொடர்பாகவும் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஒட்டங்குளம் பொதுச் சந்தையைத் திறப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது. மேலும் பிரதேச சபை உறுப்பினரகளுக்கான வரவேற்பு நிகழ்வின் போது ஏற்பட்ட செலவினங்கள் தொடர்பான கணக்கறிக்கையும் சபையில் சமர்ப்பிக்கப் பட்டது. (க-6)

# மானிய அடிப்படையில் தென்னை நாற்றுக்கள்

கிளிநொச்சி, மே 19

தென்னை அபிவிருத்திச் சபையினூடாக 2 ஆயிரத்து 512 தென்னை நாற்றுக்கள் மானிய அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட தென்னை அபிவிருத்திச் சபையின் மூலம் தென்னை நாற்றுக்களை மானிய அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பித்தவர்களுக்குத் தென்னை நாற்றுக்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அதன்படி, கடந்த 3 ஆம் திகதி வரை கிளிநொச்சி மாவட்ட தென்னை அபிவிருத்திச் சபையினூடாக விண்ணப்பித்த பயனாளிகளுக்கு 2 ஆயிரத்து 512 தென்னை நாற்றுக்கள் மானிய அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதாகத் தென்னை அபிவிருத்திச் சபை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (க-6)

# உப திட்டக்குழுக்கள் புனரமைப்பு

கிளிநொச்சி, மே 12

இரணைமடுக் குளத்தின் கீழ் உள்ள உப திட்டக் குழுக்கள் புனரமைக்கப்படும் என்று நீர்ப்பாசனத் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் உள்ள 113 உபதிட்டக் குழுக்களில் சில திட்டக் குழுக்கள் தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளன எனவும் குறிப்பாக விவசாயிகளுக்கான உள்ளீடுகள் வழங்குவதில் பாரபட்சம் காட்டியதாகவும் பல்வேறு இடங்களிலும் விவசாயிகளால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

இதனால் குறிப்பிட்ட சில உப திட்டக் குழுக்களைப் புனரமைக்குமாறு விவசாயிகள் கோரியுள்ளனர். இது தொடர்பாக இரணைமடுக் குளத்தின் திட்டக் குழுத் தலைவர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது, இரணைமடுக் குளத்தின் கீழ் உள்ள உபதிட்டக் குழுக்களின் புனரமைப்புப் பணிகள் இடம் பெற்று வருகின்றன எனவும் திட்டக் குழுக்களும் இந்த மாதத்துக்குள் புனரமைப்புச் செய்யப்பட்டு விடும் எனவும் தெரிவித்துள்ளனர். (க-6)

**German Institute**

German Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகிறது. German Embassyல் கேட்கப்படும் A1 Certificate. க்கு ஏற்றவாறு. 10, Palaly Road, Jaffna. 077 160 4823.

**கடை வாடகைக்குண்டு**

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் சத்திரச் சந்திக்கும் கொட்டடிச் சந்திக்குமிடையில் 60 அடி நீளமும், 18 அடி அகலமுடைய கடை மூன்று மாத காலத்துக்கு வாடகைக்குண்டு. தொ.பே:- 0777283811

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

3 மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில By: ... 426 (302) K.K.S வீதி, யாழ்ப்பாணம். பிள்ளை வீதி சங்கானை.
T.P: 0776751649

## ஓராண்டு நினைவு அஞ்சலி

மண் மகிழ 04 ★ 04 ★ 1945

கண் நெகிழ 29 ★ 05 ★ 2010



**திருமதி கந்தையா பொன்னம்மா**

பாரினிலே வந்துதித்து
பாசப் பனி மலையாய்
எம்மை எல்லாம் நனைய வைத்தாய்!
கூற்றுவனிக் கொடு வினையால்
எமை விட்டுச் சென்றாயே!
ஓராண்டு ஆனாலும்
ஓயாது உம் நினைவு
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சரஸ்வதி வீதி,
புத்தூர் கிழக்கு,

(4340)

தகவல்:
குடும்பத்தினர்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**செல்வி பரமேஸ்வரன் அஸ்வினி**



தோற்றம் 07 ★ 10 ★ 1998

மறைவு 19 ★ 05 ★ 2009

ஈராண்டு சென்றும் உன் ஈர விழி மூடி - நீ
நீரோடு போராடி எமை நீங்கிய நினைவின்
கோரமின்னும் மாறவில்லை கண்ணே கண்மணியே
சீரோடு சிறப்பெய்த உன்னை வளர்க்க தினம் தினம்
பார்த்து அரும்பாடு பட்டு நின்றோம் ஆனாலும்
பாராமுகமாய் காலன் அழைத்தவுடன் சென்றாயே
ஆரமுதே அஸ்வினியே நீயெங்கு சென்றாய்
ஆதரவின்றித் தவிக்கின்றோம் உன் நினைவில்

சோனெழு,
கோப்பாய் மத்தி.

(சி/073)

அப்பா, அம்மா மற்றும்
உடன் பிறப்புகள்.

## மரண அறிவித்தல்

**திருமதி பரமேஸ்வரி** (ராசாத்தி)



வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் புரூணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி ஹென்றி கனகரட்ணம் புரூணையில் (16.05.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஹென்றி கனகரட்ணத்தின் மனைவியும் எட்வேர்ரட்ணம் (எரி) மேரிஆன் ஆகியோரின் அன்புத் தாயும் அன்னலட்சுமி (ராணி-லண்டன்) யின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் (21.05.2011) சனிக்கிழமை புரூணையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.02, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

(40-19-25)(4333)

தகவல்:
மலர் (சகோதரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிப் பத்திரங்களைத் தொலைத்தவர்கள் வீட்டுத் திட்டங்களைப் பெறமுடியாத நிலை

முல்லைத்தீவு,மே 19

முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தின்போது காணிகளுக்கான பத்திரங்களைத் தொலைத்தவர்கள் வீட்டுத் திட்டங்களைப் பெறமுடியாமல் திண்டாடி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தம் நடைபெற்றபோது முல்லைத்தீவு மாவட்டத்தில் அநேகமான மக்கள் தமது காணி அனுமதிப் பத்திரங்களைத் தவறவிட்டுள்ளனர். ஒரு சிலர் ஏற்கனவே தமது காணியில் ஒரு பகுதியைத் தமது திருமணமான பிள்ளைகளுக்கு வழங்கியுள்ளனர். ஆனால் காணி ஆவணங்கள் யாவும் தொலைந்த நிலையில் அவர்கள் தற்போது எதுவுமே செய்ய முடியாத நிலையிலுள்ளனர். அத்துடன் காணி உரிமைப் பத்திரங்கள் இல்லாத காரணத்தால் இவர்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்க முடியாதென உயர் அதிகாரிகள் கூறுகின்றனர்.

தற்போதைய நிலையில் கடன்பெறவோ அல்லது வீடு கட்டுவதற்கோ காணி உரிமைப் பத்திரங்கள் முக்கியமாகத் தேவைப்படுகின்றன.

ஆகவே மீள்குடியமர்ந்த மக்களின் நிலைமையைக் கருத்தில் கொண்டு காணி உரிமைப் பத்திரங்களை உரிய மக்களுக்கு வழங்குவதற்கு அரச அதிகாரிகள் ஆவன செய்யவேண்டுமெனப் பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்பார்க்கின்றனர். (க-500)

# சிறிமாபோதி விகாரையில் வெசாக் பண்டிகை நிகழ்வு

மன்னார், மே 19

2600 ஆவது புத்த ஜெயந்தி வெசாக் பண்டிகையினை முன்னிட்டு இராணுவத்தின் 54 ஆவது படைப்பிரிவினர் ஏற்பாடு செய்த வெசாக் பண்டிகை நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மன்னார் - மடு பிரதான வீதியில் அமைந்துள்ள சிறிமாபோதி விகாரையில் இடம்பெற்றது.

இராணுவத்தின் 54 ஆவது படைப்பிரிவின் அதிகாரி பிரிகேடியர் மைத்திரி டயஸின் வழிகாட்டலில் 542 ஆவது படைப்பிரிவின் கட்டளையிடும் அதிகாரி கேணல் விக்கும் லியனகே, இராணுவத்தின் சிவில் நிர்வாக அதிகாரி நலிந்த மகாவிதாரண ஆகியோரின் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

மேற்படி நிகழ்வில் மேஜர் ஜெனரல் சுமேத பெரேரா, மன்னார் மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன் ஆகியோரும் கலந்து கொண்டனர். தென்பகுதியினைச் சேர்ந்த 700 இற்கும் மேற்பட்ட பௌத்த சிங்கள மக்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (க-601)

# தமிழக மக்களின் அரசியல் சாதுரியத்தை எமது மக்களும் வெளிப்படுத்த வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் உரை

வவுனியா, மே 19

தமிழக மக்கள் சரியான நேரத்தில் தமது அரசியல் சாதுரியத்தை வெளிப்படுத்தியுள்ளனர். இவ்வாறான ஒரு நிலைக்கு எமது மக்களும் வரவேண்டும் என்று தெரிவித்திருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன்.

வவுனியா இந்து இளைஞர் மன்றத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற 'பெய்யெனப் பெய்யும் மழை' புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழக மக்கள் இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் குறித்துச் சிந்தித்துத் தீர்ப்பு வழங்கியுள்ளனர்.

ஐ.நா. வெளியிட்ட போர்க்குற்ற அறிக்கைக்கு எதிராக இங்கே கூக்குரல்கள் எழுந்துள்ளன.

ஐ.நா. அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதுபோன்று இங்குள்ள தமிழ் மக்கள்மீது எவ்வித போர்க்குற்றங்களும் இடம்பெறவில்லையெனவும் அந்த அறிக்கைமீது எவ்வித விசாரணைகளும் தேவையில்லையெனவும் கூறுபவர்களின் பின்னால் சில தமிழர்களும், இணைந்துள்ளனர். இது மிகவும் வருத்தமளிக்கும் விடயமாகும்.

இங்கும் எமது மக்களுக்குத் தீர்ப்பொன்றை வழங்குவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவுள்ளது. இதை அவர்கள் சரியாகப் பயன்படுத்துவார்களென நம்புகின்றேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-7)

# வெசாக்கன்று முசலியில் இந்து ஆலயம் திறப்பு

மன்னார், மே 19

மன்னார் முசலிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிலாபத்துறைக் கிராமத்தில் இந்து மக்களின் நலன் கருதி சிலாபத்துறைப் பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இந்து ஆலயம் ஒன்று வெசாக் தினமான நேற்று முன்தினம் மக்களின் வழிபாட்டுக்காகக் கையளிக்கப்பட்டுள்ளது.

சிலாபத்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஐ.பி. இரத்னாயக்கவின் ஆலோசனைக்கமைவாகவே குறித்த இந்து ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த கிராமத்தில் கத்தோலிக்க, முஸ்லிம் மக்களுக்கான வணக்கத் தலங்கள் காணப்படுகின்ற போதும் இந்துக்களுக்கான வணக்கத்தலம் இல்லாதிருந்தது.

இந்த நிலையிலேயே குறித்த ஆலயம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆலயத்தின் மூலம் சுமார் 52 குடும்பங்கள் தமது சமயக் கடமைகளை நிறைவேற்ற முடியும்.

மேற்படி ஆலயத் திறப்பு விழாவில் மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கொடித்துவக்கு, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எ.எஸ். ஆனந்த சமரசிங்க மற்றும் இந்து கலாசாரப் பேரவையின் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-601)

# ஸ்கந்தபுரத்தில் ஆலயம் நிர்மாணம்

அக்கராயன், மே 19

கிளிநொச்சி, ஸ்கந்தபுரத்தில் கண்ணன் ஆலயத்தை அமைப்பதற்கான முயற்சியில் நிர்வாகத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்த ஆலயம் கடந்த போரில் முற்றாக அழிவடைந்தது. முன்னர் ஆலயம் அமைந்திருந்த இடத்தில் புதிதாகக் கண்ணன் ஆலயத்தை அமைக்கும் முயற்சியிலேயே தற்போது ஆலய நிர்வாகத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்த ஆலயத்தை அமைப்பதற்கு அனைவரும் உதவ வேண்டுமெனவும் ஆலய நிர்வாகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-410)

# நண்பர்களுடன் இருந்தவரை பயமுறுத்திய பொலிஸார்

தமது வீட்டில் நண்பர்களுடன் சேர்ந்து மது அருந்திய போது சிவில் உடையில் வந்த பொலிஸார் தன்னை அடித்துப் பயமுறுத்தி விட்டுச் சமைத்து வைத்திருந்த இறைச்சி உள்ளிட்ட உணவை எடுத்துச் சென்று விட்டனர் என்று கற்சிலைமடுவைச் சேர்ந்த ஒருவர் முறையிட்டுள்ளார். எனினும் இக் குற்றச் சாட்டைப் பொலிஸார் மறுத்தனர்.

கற்சிலைமடுவைச் சேர்ந்த ப.சீவரத்தினம் என்பவர் ஒரு விடுமுறை நாளில் வெளிநாட்டிலிருந்து வந்த நண்பர்கள் மற்றும் உறவினர்களோடு தமது வீட்டில் மது அருந்தி மகிழ்ச்சியாக இருந்துள்ளார். அப்போது சிவில் உடையில் தம்மைப் பொலிஸார் என்று கூறிக் கொண்டு வந்த இருவர் அங்கிருந்த சாராயத்தையும், சமைத்து வைக்கப்பட்ட இறைச்சி வகைகளையும், தேங்காய் எண்ணெய் போத்தலையும் எடுத்த பின் தன்னை அடித்துப் பய முறுத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.அனுமதியின்றிச் சாராயம் விற்பனை செய்வதாகத் தகவல் கிடைத்தே தாம் அங்கு வந்தனர் என்று பொலிஸார் கூறியுள்ளனர். "நான் சாராய விற்பனையில் ஈடுபடவில்லை. வீட்டில் அப்படி ஏதும் தடயம் இருப்பின் என்னைக் கைது செய்யுமாறு கூறிய போதும் அப்படி எதனையும் செய்யாது சாராயத்தையும், இறைச்சி வகை களையும், சிகரெட்டுக் களையும் பொலிஸார் எடுத்துச் சென்றனர்'' - என்று சீவரத்னம் மேலும் கூறினார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இராணுவ அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டபோது தாம் பொலிஸ்மா அதிபருடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தமக்குத் தெரிவித்தனர் என்றும் பாதிக்கப்பட்டவர் கூறினார். (க-500)

## நாடகமே உலகம்...



பொருத்தமான வேடங்கள்: முல்லைத்தீவு, திருமுறிகண்டி இந்து வித்தியாலய ஆரம்பப் பிரிவு நாடகக் குழுவினர் துணுக்காய் கோட்ட நிகழ்வில் பங்கு கொண்ட பின்னர் அதிபர், ஆசிரியர்களுடன் காணப்படுகின்றனர். (410)

# கிளிநொச்சியில் மின் இணைப்புகள் வழங்குவதை துரிதப்படுத்தக் கோரிக்கை

கிளிநொச்சி, மே 19

மக்கள் மீள்குடியமர்ந்த கிளிநொச்சி மாவட்டத்தின் சகல பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு மின்சார சபை அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அரசு தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தலைமையிலான குழுவினர் கிளிநொச்சியில் பல கிராமங்களுக்குச் சென்று மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதா என்று ஆராய்ந்தனர்.

தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் மின்சார விநியோகத்துக்கான ஆரம்பக்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மின்சாரசபைப் பொறியியலாளர்களும் அப்போது உடனிருந்தனர்.

இதன் போது மின்சாரம் வழங்குவதற்கான வேலைத் திட்டத்தை மிகக் குறுகிய காலத்தினுள் நிறைவேற்றி முடிப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உருத்திரபுரம், செல்வாநகர், அம்பாள்குளம், உதயநகர், விவேகானந்தா நகர், திருவையாறு, இராமநாதபுரம் ஆகிய பகுதிகளுக்கே நாடாளுமன்ற உறுப்பினர் தலைமையிலான குழுவினர் சென்றிருந்தனர்.

இந்தக் குழுவில் மின்சார சபையின் வடக்கின் வசந்தம் திட்ட முகாமையாளர் குணசீலன், கிளிநொச்சி மின்அத்தியட்சகர் குகராஜ், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான மகாண்ப் பொறியியலாளர் பி.எம். பியசேன ஆகியோரும் அடங்கியிருந்தனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய போஷாக்கு மாதத்தை கிழக்கிலும் நடைமுறைப்படுத்துமாறு அறிவுறுத்து

மட்டக்களப்பு, மே 19

எதிர்வரும் ஜூன் மாதம் கல்வி அமைச்சினால் முன்னெடுக்கப்படவுள்ள தேசிய போஷாக்கு மாதத்தை கிழக்கு மாகாணப் பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்துமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ. நிசாம் பணிப்புரை வழங்கியுள்ளார்.

சுகாதார அமைச்சின் அனுசரணையில் மேற்கொள்ளப்படுகின்ற இந்தத் திட்டத்தின்படி பாடசாலை மாணவர்களின் போஷணை மட்டத்தை பிரதேச மருத்துவ அதிகாரிகளின் கண்காணிப்பில் எதிர்வரும் ஜூன் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அதிபர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் கட்டுரை, சுவரொட்டி ஆகிய போட்டி நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான சுற்றுநிருபமொன்று பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. "நமது போஷாக்கை நாமே பாதுகாப்போம்" எனும் தலைப் பிலேயே இந்தப்போட்டிகள் நடத்தப்படவுள்ளதாக மாகாணக் கல்விப் பணிப்பாளரின் சுற்றறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட தரங்களில் நடத்தப்படவுள்ள இப் போட்டிகளில் வெற்றிபெறும் மாணவர்கள் மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களில் பங்கு பற்றவுள்ளதாகவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பத்து லட்சம் பிளாஸ்ரிக் கூடைகளில் 3 லட்சம் நுவரெலியா மாவட்டத்துக்கு

நுவரெலியா, மே 19

காய்கறிகளைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்கும், அவற்றை வாகனங்களில் கொண்டு செல்லும்போது ஏற்படக்கூடிய பாதிப்புகளை தவிர்த்துக் கொள்வதற்கும் என முதற்கட்டமாக பத்து லட்சம் பிளாஸ்டிக் கூடைகள் தயாரிக்கப்படவுள்ளன என கூட்டுறவு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சின் செயலாளர் சுனில் சிறிசேன தெரிவித்தார்.

இக்கூடைகளில் நுவரெலியா மாவட்டத்திற்கு மாத்திரம் மூன்று லட்சம் கூடைகளை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அவர் கூறினார். இதன் மூலம், காய்கறிகள் பாதிப்படைவது தவிர்க்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

**திறப்பு...**



மருதமுனை பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கூட்டுறவு விற்பனை நிலையம் திறந்துவைக்கும் நிகழ்வு நேற்று புதன்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார மற்றும் கூட்டுறவு அமைச்சர் எம்.எஸ். சுபைர், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான கே.எம்.ஏ.ஜவாட் , எம்.எல்.துல்கர் நயீம் ஆகியோர்கள் கலந்து கொண்டு திறந்து வைக்கின்றனர்.

# கிழக்கு பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கு நூலகப் பணியாளர் ஒன்றியம் கடிதம்

திருகோணமலை,மே19

நூலகர் -111 இற்கான திறந்த மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தோற்ற வுள்ளவர்களின் நலன்கருதி மூன்று விடயங்களை நடைமுறைப்படுத்துமாறு கோரி கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு கிழக்கு மாகாண நூலகப் பணியாளர் ஒன்றியம் கடிதம் அனுப்பிவைத்துள்ளது.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

தங்களால் 2011.04.25 ஆம் திகதி பத்திரிகை விளம்பரத்தின் மூலம் கோரப்பட்ட இந்த நியமன விண்ணப்பம் தொடர்பாக எமது ஒன்றியம் உறுப்பினர்களின் நலன் கருதி மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு பின்வரும் விடயங்களை நடை முறைப்படுத்துமாறு வேண்டப்பட்டுள்ளது. ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையில் கோரப்பட்ட 5 திறமைச் சித்திகளை 03 ஆக குறைத்தல்,மட்டுப் படுத்தப்பட்ட பரீட்சார்த்திகளை உள்வாங்க வழங்கப்பட்ட 25 வீதத்தை 50 வீதமாக அதிகரித்தல், தற்காலிக நியமனக் காலத்தையும் 10 வருட சேவையில் சேர்த்துக் கொள்ளல். போன்ற விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில் ஓய்வூதிய வயதை அடையவுள்ள பல ஊழியர்களுக்கு அது நிவாரணமாக அமையும்.

கடந்த 2000 ஆம் ஆண்டும் இந்தக் கோரிக்கைகள் நிறை வேற்றப்பட்டுள்ளதாகவும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிண்ணியாவில் அறிவியல் கண்காட்சி

திருகோணமலை,மே19

கிண்ணியாவில் இடம்பெறவுள்ள கிழக்கின் அறிவியல் கண் காட்சிக்கான ஏற்பாடுகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம். ஹாசீம் தெரிவித்தார்.

இந்தக் கண்காட்சி எதிர்வரும் 23ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை காலை 9மணி தொடக்கம் மாலை 6 மணி வரை கிண்ணியா மத்திய கல்லூரி, அல்-அக்ஸா கல்லூரி, அல்ஹிறா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயம், அப்துல் மஜீது வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இடம்பெறவுள்ளது.

கிழக்கு மாகாண தவிசாளர் எச்.எம். எம். பாயிஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில், முதலமைச்சர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொள்வர். (ச)

**கிளிநொச்சியில் வீடு வாடகைக்குண்டு**

கிளிநொச்சி நகரில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு:- 077 204 1262.

# ரிதிதென்ன கிராமத்துக்கு அடிப்படை வசதிகளை வழங்குமாறு கோரிக்கை

மட்டக்களப்பு,மே19

மட்டக்களப்புக்குட்பட்ட ரிதிதென்ன பிரதேசத்துக்கு குடிதண்ணீர் மற்றும் மின்சார வசதி இல்லையென இந்தப் பகுதி வாழ் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். ரிதிதென்ன பிரதேசம் சுமார் இருபத்தைந்து வருடங்கள் பழமை வாய்ந்த மகாவலித் திட்டத்துக்குட்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் குடியேற்றக் கிராமமாகும். ரிதிதென்ன கிராமத்தை ஊடறுத்து மட்டக்களப்பு மாவட்டத்துக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ள போதிலும் இந்தப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படாதுள்ளமை துரதிஷ்ட வசமானது.

இதனால் இரவு வேளைகளில் மாணவர்கள் குப்பிவிளக்கின் உதவியுடனேயே கல்வியைத் தொடர வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அத்துடன் குப்பி விளக்கினால் தீ விபத்துக்களும் இடம்பெறுகின்றன. விவசாயத்தை வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்ட மக்கள் வாழும் ரிதிதென்ன கிராமத்துக்கு மின்சார வசதியின்மையால் காட்டு யானைகளின் அட்டகாசமும் அதிகரித்துள்ளது.

எமது தேவைகள் குறித்து அரசியல் வாதிகளிடம் எடுத்துக் கூறியுள்ள போதிலும் எமது நிலை குறித்து அவர்கள் கவனம் செலுத்துவதில்லை. ஆகவே ரிதிதென்ன கிராமத்தின் அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு இந்தப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

சுழிபுரம் – பறாளாய்

ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்



**நவோத்தர சகஜ மகா சங்காபிஷேகம்**

முருகன் அடியார்களே,

20.05.2011 வெள்ளிக்கிழமை வைகாசி மாதம் 6 ஆம் நாள் காலை 7.00 மணிமுதல் முருகப்பெருமானுக்கு 1009 சங்குகளினால் சங்காபிஷேகமும், சண்முகப் பெருமானுக்கு 109 சங்குகளினால் சங்காபிஷேகமும், தொடர்ந்து சண்முகா அர்ச்சனையும் இடம்பெறும்.

நண்பகல் 12.30 மணிக்கு அடியார்களுக்கு மாகேஸ்வர பூஜை நடைபெறும்.

மாலை 5.00 மணிக்கு விசேட பூசை, மேளக் கச்சேரி நடைபெற்று சுவாமி வீதியுலாக் காட்சி இடம்பெறும்.

அடியார்கள் அனைவரும் வருகைதந்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

பறாளாய்,
சுழிபுரம்.

சங்காபிஷேக சபை

அகவை 60 இல் வாழ்த்துகின்றோம்

19.05.2011



**திரு.திருமதி ரஞ்சன் தம்பதிகள்**

அன்பெனும் பூக்களால்
கோர்த்த ஓர் மாலைதான்
இல்லறம்
ஆங்கதனை நல்லறமாக
பேணி 60 அகவையை
பூர்த்தி செய்யும் எம்
இனிய பெற்றோர்கள்

வாழ்வாங்கு வாழ
வாழ்த்தி நிற்கும்:

பிள்ளைகள்

19/1,
பி.ஏ.தம்பி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(3996)(48,19,24)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது சங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று சிறப்பாகச் செயற்பட்டு பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்திவரும் எமது சங்கத் தலைவர்

**லயன் B.R.ரஞ்சன்**

அவர்களது அறுபதாவது அகவையை முன்னிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் எமது சங்கத்தில் தொடர்ந்து தலைவராக இருந்து சேவையாற்றிச் சங்கத்தை நல்ல முறையில் கட்டியெழுப்ப எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணியாளர்கள்,

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

(49,19,21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை வடக்கு - கிழக்கில் அரசு கைவிட வேண்டும்

## சுமுக பேச்சுக்கு இது வழிவகுக்கும் என்கிறார் மாவை

அம்பாறை, மே 19

''ஒரு புறம் வடக்கு, கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை அரசு மேற்கொண்ட படியே வருகிறது. மறு புறம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு பேசி வருகிறது. பேச்சுகள் சுமுகமாக நடைபெற வேண்டுமானால் இத்தகைய திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை உடனடியாக நிறுத்த வேண்டும்''.

-இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நாவிதன்வெளிப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தனது உரையில் அவர் தெரிவித்ததாவது:

போர் முடிந்து சகல இடங்களிலும் இராணுவம் பிரசன்னமாகி இருக்கும் இத்தருணத்தைப் பாவித்து அரசு முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு வருகிறது. அந்த நிலை பொத்துவில் பிரதேசத்திலும் காணப்படுகிறது.

இவ்வாறான நெருக்கடியான நிலைமைகளை எதிர்கொண்டவாறே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் பேச்சுகளை நடத்தி வருகிறது.

போர் காரணமாக தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து வசிக்கையில் அந்த இடங்களில் தற்போது சிங்களவர்கள் குடியேற்றப்பட்டிருக்கிறார்கள். இதனை நாம் ஆதாரபூர்வமாக உறுதிப்படுத் தியிருக்கிறோம்.

பிரச்சினையைத் தீர்ப்பதற்கென பேச்சுகளை நடத்தும் அரசு பிரச்சினையின் மூலகாரணமான திட்டமிட்ட குடியேற்றங்களைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டங்களில் வெளியில் தெரியாத வகையில் மிக இரகசியமான



முறையில் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன- என்றார்.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன். செல்வராசா, பா.அரியநேத்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தோமஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.(ச)

## ஆசிரியர் பற்றாக்குறை; மாணவர்கள் பெரும் சிரமம்

திருகோணமலை,மே19

மூதூர் மத்திய கல்லூரியில் உயர்தர விஞ்ஞான பாடப் பிரிவுக்கான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதனால் மாணவர்கள் தமது விஞ்ஞானக் கல்வியை பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் மாணவர்கள் வேறு பாடசாலைகளை நாடிச் செல்வதாகவும் இதற்காக பல ரூபாவைச் செலவு செய்யவேண்டியுள்ளதாகவும் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

விஞ்ஞானப் பிரிவில் உள்ள உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல் இணைந்த கணிதம் முதலான பாடங்களுக்கு ஆசிரியர்கள் போதியளவு இல்லை எனவும் கூறப்படுகின்றது.

(ச)

## வரவேற்பு.....



இலங்கை அங்கிலிக்கன் திருச்சபையின் பேராயராக நியமிக்கப்பட்டுள்ள டிலோராஜ் ரஞ்சித் கனகசபையை வரவேற்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர முதல்வர் திருமதி சிவகீத்தா பிரபாகரன், பிரதி முதல்வர் ஜோர்ஜ் பிள்ளை உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச)

## பெரும்தொகை பால்மா திருட்டு முயற்சி கட்டுகஸ்தோட்டையில் முறியடிப்பு

கட்டுகஸ்தோட்டை,மே19

கட்டுகஸ்தோட்டை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பால்மா பைக்கற்றுகளை திருடுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. பால்மா பைக்கற்றுக்களை வானொன்றில் ஏற்றிக்கொண்டிருந்த சமயம் அங்கு வந்த பொலிஸாரைக் கண்டதும் திருடர்கள் தப்பியோடினர். எனினும் அவர்களில் ஒருவரைப் பொலிஸார் துரத்திப் பிடித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை சம்பவம் இடம்பெற்றது. விற்பனை நிலையத்தின் முன்கதவை உடைத்துத் திறந்து கொண்டு உள்ளே புகுந்த இருவர் திருட்டில் ஈடுபட்டுள்ளனர்.

அப்போது அந்தப்பகுதியால் ரோந்து வந்த பொலிஸார் இதனைக் கண்டுவிட்டனர்.

பொலிஸாரைக் கண்டதும் இருவரும் ஓடிப்போய் மகாவலி கங்கையில் குதித்தனர். அதனையடுத்து, பொலிஸார் விரைந்து செயற்பட்டு ஆற்றின் மறுகரையில் வைத்து ஒருவரைக் கைது செய்தனர். மற்றவர் தப்பிச் சென்றுவிட்டார்.

தப்பியோடிய நபரைக் கைதுசெய்ய தேடுதல் மேற் கொள்ளப்பட்டுள்ளன என கட்டுகஸ் தோட்டைப் பொலிஸ் பொறுப்பதிகாரி தேசப்பிரிய ஜயதிலக தெரிவித்தார். (ச)

# தகவல் தொழில்நுட்ப அறிவு இனி மத்திய மாகாணத்தில் மேம்படும்

கம்பளை, மே 19

மத்திய மாகாணப் பாடசாலை மாணவர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவை மேம் படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

கம்பளை சாஹிரா கல்லூரியில் நடைபெற்ற மத்திய மாகாண மீலாத் போட்டி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

''2015 ஆம் ஆண்டளவில் மாகாணத்திலுள்ள சகல பாடசாலைகளும் சகல வசதிகளையுமுடைய கணினிப் பிரிவுகளைப் பெற்றுக் கொள்ளும். தற்போது 653 பாடசாலைகள் கணனிப் பிரிவுகளைப் பெற்றுக் கொண்டுள்ளன.

பாடசா லைகளுக்கு கணனி வசதிகளையும் பெற்றுக் கொடுப்பதன் மூலம் தகவல் தொழில்நுட்ப அறிவை விருத்தி செய்ய முடியும் என்று நம்புகிறோம்'' என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## தனியார் ஓய்வூதியத் திட்டத்தில் கவனம் செலுத்தப்படவில்லை இப்படித் தெரிவிக்கின்றது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பான கூட்டு ஒப்பந்தத்தில் முழுக்கவனத்தையும் செலுத்தியுள்ளதால் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தனியார் துறை ஊழியருக்கான ஓய்வூதியத்திட்டம் குறித்துக் கவனத்தை செலுத்தவில்லை.

''நாம் ஓய்வூதியத்திட்டம் பற்றி கருத்துத் தெரிவிக்க விரும்பினால் அதை நாடாளுமன்றத்தில் அல்லது தேசிய தொழிலாளர் ஆலோசனை கவுன்ஸிலில்தான் தெரிவிப்போம்'' என இ.தொ.கா. தெரிவித்துள்ளது.

இருப்பினும் தனியார்துறைக்கான ஓய்வூதியத்திட்டம் தோட்டத் தொழிலாளர்களையும் பாதிக்கக்கூடியது. இதற்காக ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றுக்கு தொழிலாளர்கள் சம்பளத்தின் இரண்டு சதவீதத்தை மேலதிகமாகச் செலுத்த வேண்டி வருமென்று இ.தொ.கா.சந்தேகம் தெரிவித்துள்ளது.

தொழிலாளர்களுக்குக் கிடைக்கவுள்ள பணிக்கொடையில் 10 சதவீதத்தையும் ஓய்வூதிய நிதியத்துக்கு கொடுக்க வேண்டும் என்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது. (ச)

# 'நெல்சிப்' அபிவிருத்தித் திட்டத்தில் தமிழ்ப் பகுதிகள் புறக்கணிப்பா?

அம்பாறை, மே 19

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நடைமுறைப் படுத்தப்படவுள்ள வடக்கு கிழக்கு உள்ளூர் சேவைகள் அபிவிருத்தித் திட்டம் (நெல்சிப்) திட்டத்தின்கீழ் கல்முனை மாநகர சபைப் பிரிவில் தமிழ்ப் பிரதேசங்களுக்குப் போதுமான நிதி ஒதுக்கப்பட்டவில்லையெனக் குற்றச்சாட்டு எழுப்பப்பட்டுள்ளது.

கல்முனை மாநகரசபை தமிழரசுக்கட்சி உறுப்பினர் ஏ.அமிர்தலிங்கம் இந்த விடயம் தொடர்பாக தமது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளார்.

'நெல்சிப்' திட்டத்தின்கீழ் கல்முனை மாநகர சபைப் பிரிவில் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத் திட்டங்களுக்கென 310 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபைப் பிரிவில் பின்தங்கிய தமிழ்க் கிராமங்கள் பல இருந்தும் துரவந்திய மேடு கிராம வீதி அபி விருத்தி திட்டத்துக்கு மட்டும் 70 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

'நெல்சிப்' திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் மூன்றிலொரு பங்கு தமிழ்ப் பிரதேசங்களுக்கு வழங்கப்படவேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது விடயம் தொடர்பாக உறுப்பினர் அமிர்தலிங்கம் கல்முனை மாநகர முதல்வரிடம் ஆட்சேபனை தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவின் கவனத்துக்கும் இதனைக்கொண்டு வந்துள்ளார். (ச-30)

## கர்ப்பிணிகளை வெளியேற்றிய டாக்டர்கள் மீது நடவடிக்கை

### பிரதியமைச்சர் கருணா கோரிக்கை

மட்டக்களப்பு,மே19

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடந்த 6 ஆம் திகதி பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட இரு கர்ப்பிணித் தாய்மாரை வைத்தியசாலையில் இருந்து மருத்துவர் ஒருவர் வெளியேற்றினார் என்று கூறப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பாக சுகாதார அமைச் சர் மைத்திரிபால சிறிசேனவிடம் மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை இடம்பெறுவதாகவும், விசாரணையின் பின்பு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சுகாதார அமைச்சர் முரளிதரனுக்கு உறுதியளித்துள்ளார் என்று கூறப்பட்டது. இதேவேளை, மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் சி.சரவணனை யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றுவதற்கான உத்தரவை இரத்துச்செய்யப்பட வேண்டும் என சுகாதார அமைச்சரிடம் பிரதியமைச்சர் கேட்டுக்கொண்டார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சண் ஜெயா உணவகம்

புதுப்பொலிவுடன் புதிய நிர்வாகத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்ட உணவகத்தின் அனைத்து வேலைகளுக்கும் வேலையாள்கள் தேவை.

உடன் தொடர்பு கொள்ளவும்:
**Sunjeya Food Land,**
414, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (பஸ் நிலையம் முன்பாக)
(4315)

## சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் வருடாந்த வைகாசிப் பெருவிழா- 2011

இடம்: சந்நிதியான் ஆச்சிரமம்
காலம்: நாளை (20.05.2011) வெள்ளிக்கிழமை
நேரம்: முற்பகல் 10 மணி

வாழ்த்துரை: ''ஞான பண்டித சேவா சுரபி''
வைத்திய கலாநிதி
**சி.கதிரைவேற்பிள்ளை**

சிறப்பு நிகழ்வு: வயலின் இசை
வாராந்த நிகழ்வு: சொற்பொழிவு - தேவிபாகவதம் (தொடர்)
வழங்குபவர்: **அ.குமாரவேல்** (சிரேஷ்ட விரிவுரையாளர்).

குறிப்பு:
ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமுதாயப் பணிகளின் வகையில் மாணவி ஒருவருக்குத் துவிச்சக்கரவண்டி வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

வழமைபோல் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இடம்பெறும் விசேட அபிஷேக பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து மேற்படி நிகழ்வுகள் யாவும் இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செல்வச்சந்நிதி, தொண்டமானாறு.
பேரவையினர், சந்நிதியான் ஆச்சிரமம்.
(சி/064) (38-19-21)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்த போடப்பட்ட சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள்,சேவல் குஞ்சுகள், புறோயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (21.05.2011) காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

★ சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு - 0776904590
★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி - 0774656377
★ நல்லூர் பாம் சென்ரர், பிரதான வீதி, பருத்தித்துறை - 0771392593

இறைச்சிக் கோழிகள் திருப்பிக் கொள்வனவு செய்யப்படும்.
நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர்,
தொ.பே இல:- 021 222 6944.

## இன்று சபிண்டீகரணம்



இன்று (19.05.2011) வியாழக்கிழமை சபிண்டீகரணம் நிறைவெய்தி வைதரண்ய நதியைக் கடந்து பிதிருலோகம் புறப்படும்
பிரம்மஸ்ரீ **யோ.பிரபாகரேஸ்வரக் குருக்களை**
அவரது பிதிருக்கள் வரவேற்று ஆசீர்வதிப்பார்களாக.

சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்
காயத்திரிபீடம், இணுவில்.
(48,19,21)

# ஆன்மீகச் சுற்றுலா

யாழ்ப்பாணம்,மே 19

முழங்காவில் ஸ்ரீ கிருஷ்ணா அறநெறிப் பாடசாலை மாணவர்கள் ஆன்மீகச் சுற்றுலாவை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்துள்ளார்கள்.

இரண்டுநாள் விஜயத்தை மேற்கொண்டு வருகை தந்துள்ள இந்த மாணவர்கள் யாழ்.மாவட்டத்தில் உள்ள ஆலயங்களுக்கும், சமய நிறுவனங்களுக்கும் தமது பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

சுமார் 120 மாணவர்களைக் கொண்ட இந்தக் குழுவினர் நல்லை ஆதீன சுவாமி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளைச் சந்தித்து ஆசி பெற்றுச் சென்றுள்ளனர்.

இந்தச் சுற்றுலாவில் கலந்து கொண்ட மாணவர்கள் அனைவரும் எமது கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் ஆடைகளை அணிந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-9)

# சம்பந்தர் குருபூசை

யாழ்ப்பாணம்,மே 19

யாழ்.சைவபரிபாலன சபையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருஞான சம்பந்தர் குருபூசை தினம் நாளை வெள்ளிக்கிழமை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆர்வலர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். (ற)

## காணி விற்பனைக்கு உண்டு

தெல்லிப்பழை வீதியில் உள்ள சிறுவிளானில் மெயின்றோட் அருகில் 34 பரப்புக் காணி வெட்டுக் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: மத்தேசு அருளப்பு
பெரியவிளான், ஆத்தியோலை. T.P.No: 0779459186

## வீடு வாடகைக்கு

512, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் (ஜின்னா சந்தி) என்னும் முகவரியில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள், றெஸ்ரோறன்ஸ் தேவைகளுக்கு உகந்தது.
குறிப்பு: தனி அறைகளும் வாடகைக்கு விடப்படும் (வெளிமாவட்ட மாணவர்களுக்கு)
தொடர்பு : 0750457817 (அரியராஜ்)

## கிருஷ்ணா பாம்

ஒரு நாள் பைரகா பாம் புறொயிலர் குஞ்சு வெள்ளிக்கிழமைகளிலும் ஒரு நாள் சிவப்பு (NEL FRAM) நெல்பாம் பேட்டுக் குஞ்சு சனிக்கிழமைகளிலும் சகல விதமான மாஸ், மருந்துகளும் கீழ்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

1. S.கிருஷ்ணகுமார், மானிப்பாய் - 0772338084
2. ஐங்கரன் களஞ்சியம், மத்திய சந்தை, மானிப்பாய் - 0212255544
3. நகுலன் மாஸ்கடை, தும்பளை - 0774727332
4. மணியம் ரேடஸ், No.16, சந்தை தெற்கு வீதி, சுன்னாகம் - 0779352658
5. கௌசி களஞ்சியம், அரசடி, தொண்டமானாறு - 0771133216
6. ஸ்டான்லி பாம் - 0776144030
7. ரஞ்சிதன், மாலுசந்தி - 0776280153
8. திருமகள் கொமினிகேசன், (யாழ். இந்துக் கல்லூரி அருகில்) - 0754985692
9. பிள்ளையார் கால்நடைத்தீவனம் (கொமர்ஷல் வங்கி முன்பாக, நெல்லியடி) - 0771271164

# தீவுப் பகுதியில் மீட்கப்பட்ட 3 சடலங்கள்

யாழ்ப்பாணம், மே 19

தீவகத்திலிருந்து 3 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இவற்றில் இரண்டு ஆண்களின் சடலங்கள், மற்றையது பெண்ணின் சடலம்.

நாரந்தனையில் கடந்த திங்கட்கிழமை சாந்தி ஹெக்ரர் (வயது-48) என்ற பெண் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப் பட்டார்.

குறித்த பெண் அவரது கணவர் கொடுமைப்படுத்தியதால் இந்த முடிவுக்கு வந்ததாகக் கூறப்பட்டது.

நெடுந்தீவு, முதலாம் வட்டாரத்தில்தூக்கில்தொங்கியநிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. ஸ்ரீதரன் (வயது-36) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குடும்பத் தகராறு காரணமாகத் தனது மனைவியை கத்தியால் வெட்டிய பின்னர் தூக்கில் தொங்கி இவர் மரணமானார் என்று தெரிவிக்கப் பட்டது.

நெடுந்தீவு 13 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளைபரமலிங்கம்(வயது-51) என்பவர் நேற்றுமுன்தினம் காலை 7.30 மணியளவில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நெடுந்தீவு பிரதேச சபையின் பாதுகாவல் கடமையில் ஈடுபட்டு வருபவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் இவர் பயந்த சுபாவம் உடையவர் என்றும் உறவினர்கள் குறிப்பிட்டனர். இவர் தூக்கில் தொங்கியமைக்கான காரணம் இதுவரை அறியப்படவில்லை.

இந்த மூன்று சம்பவ இடங்களுக்கும் விஜயம் செய்த ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி ஜோய் மகிழ் மகாதேவா மற்றும் யாழ் போதனா வைத்திசாலையின் சட்ட வைத்திய அதிகாரி எஸ். சிவரூபன் ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டனர். ( ஒ-15)

# மோ. சைக்கிள் மோதி சிறுமி காயம்

தென்மராட்சி,மே 19

வீதியைக் கடக்க முயன்ற 10 வயதுச் சிறுமி வேகமாக வந்த மோட்டார் சைக்கிளால் மோதுண்டு காயமடைந்தார்.

பஸ்ஸிலிருந்து இறங்கி வீதியைக் கடக்க முற்பட்ட வேளையிலேயே மோட்டார் சைக்கிள் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் இடம்பெற்றது.

உடுத்துறை வடக்கைச் சேர்ந்த வின்சன் கேமலதாஸ் சாரிகா (வயது- 10) என்னும் சிறுமி காயமடைந்த நிலையில் மருதங்கேணி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்குக் கொண்டுவரப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-207-131)

## மரண அறிவித்தல்

### திருமதி பரிமளகாந்தி சிவபாலசுந்தரம்
(வல்வெட்டித்துறை)



வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், கெக்கிராவையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரிமளகாந்தி சிவபாலசுந்தரம் கடந்த 13.05.2011வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெங்கடாசலம் - நவரெத்தினம்மாள் தம்பதியரின் ஏக புதல்வியும் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி - செல்லம்மா தம்பதியரின் மருமகளும் கலாவதி, நந்தாவதி, வனிதாவதி, சத்தியவதி, காலஞ்சென்ற கருணாகரன் மற்றும் மனோகரன் ஆகியோரின் அன்புத் தாயும் சபாரத்தினம் திருநாவுக்கரசு, ஸ்ரீபதி, யோகலிங்கம், பவதாரிணி ஆகியோரின் அன்பு மாமியும், சுகன்யா, தாரிணி, தீபன், சஞ்சித், துவாரகன், துளசி ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (14.05.2011) சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு கெக்கிராவை யில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(1070) தகவல்:
தீருவில் ஒழுங்கை, வல்வெட்டித்துறை. குடும்பத்தினர்.

## நினைவலைகள்

| 29 ஆம் ஆண்டு நினைவு தினம் | 8 ஆம் ஆண்டு நினைவு தினம் | 7 ஆம் ஆண்டு நினைவு தினம் |
|---|---|---|
| தோற்றம்: 10.06.1927 | தோற்றம்: 01.01.1933 | தோற்றம்: 04.02.1938 |
|  |  |  |
| மறைவு: 08.06.1982 | மறைவு: 06.10.2003 | மறைவு: 17.11.2004 |
| சின்னத்தம்பி சிவஞானரத்தினம் [சின்னராஜா S.S.R] | திருமதி சிவஞானரத்தினம் இரத்தினம் [பூமணி] | திருமதி சுந்தரலிங்கம் பரிமளகாந்தி [பவளம்] |
| திதி: 19.05.2011 | | |

அன்புதனை அருவியாக்கி பண்புதனை சிகரமாக்கி
பார் போற்ற வாழ வைத்த அன்பு தெய்வங்களை நினைவு கூருகின்றோம்

'முருகன் அருள்'
நீதிராசா வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
(48,27)

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குத்து வைரவர் தேவஸ்தானம்



### வருடாந்த விசாகப் பொங்கல் உற்சவம்

(கர வருஷம் 20.05.2011)


கைதடி குத்து வைரவர் கோயில்
பிள்ளையார் கோயில்வீதி,
கைதடி கிழக்கு.

வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அபிஷேக ஆராதனையும், அன்னதானமும் நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து சனிக்கிழமை காலை 4.00- 7.30 மணிவரை வைரவப் பெருமானுக்கு விஷேட பொங்கலும் வேள்வியும் நடைபெறும்.

அன்பர்கள், அடியார்கள் உற்சவத்தில் பங்கு கொண்டு எம் பெருமான் திருவருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

கோயில் நிர்வாகம்,
கைதடிகிழக்கு, கைதடி.



உரும்பிராய் கற்பக விநாயகர் ஆலய கும்பாபிஷேக விழாவில் நல்லை ஆதீன சுவாமிகள் ஆசியுரை வழங்குகிறார். இந்திய தூதுவராலய யாழ்.பிராந்திய பணிப்பாளர் மகாலிங்கம் அருகில் உள்ளார்.

# உள்ளூர் உற்பத்தியை ஏற்றுமதி செய்வதில் குடாநாட்டு வர்த்தகர்களின் கவனம் தேவை

யாழ்ப்பாணம், மே 19

யாழ்.குடாநாட்டில் கிடைக்கும் உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்வதில் இங்குள்ள தொழில் முயற்சியாளர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் எஸ்.சுமணசிறி.

அச்சுவேலி இலங்கை வங்கிக் கிளையில் வாடிக்கையாளர்கள் மற்றும் வங்கியின் உயர் அதிகாரிகளுடனான கலந்துரையாடலில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அவரது உரையில் தெரிவிக்கப்பட்டதாவது:-

யாழ். மாவட்ட மக்களின் தொழில் அபிவிருத்தி மற்றும் உற்பத்தி முயற்சிகளைத் துரிதப்படுத்த வேண்டும். இந்த நோக்கிலேயே இலங்கை வங்கி தனது சேவையை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளது.

இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்கள் கூடிய பயன்பெற வேண்டும்.

விவசாயிகளுக்கும் ஏனைய தொழில் முயற்சியாளர்களுக்கும் இலகுகடன் உள்ளடங்கலாக ஏனைய வசதிகளை வழங்குவதற்கு இலங்கை வங்கி தயாராக உள்ளது.

அத்துடன் புதிய தொழில் முயற்சியாளர்களும் வங்கியின் இத்தகைய திட்டங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். சிறியளவிலான முயற்சிகள் தான் எதிர்காலத்தில் சிறந்த முயற்சியாளர்களை உருவாக்கும்.

கிடைக்கும் உற்பத்திப் பொருள்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய வகையில் இங்குள்ள தொழில் முயற்சியாளர்கள் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும்.

தொழில் முயற்சியார்களுக்கு சிறந்த ஆலோ சனைகளையும் வழிகாட்டுதல் களையும் வழங்கவும் வங்கி தயாராக உள்ளது.- என்றார். (ம-313-11)

# மனித வளத்தைச் சிறப்பாகப் பயன்படுத்தினால் வடக்கில் கூடியளவு பயன்களைப் பெறமுடியும்

## பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை கருத்து

யாழ்ப்பாணம், மே 19

வடமாகாணத்தில் விவசாயத்துக்கு ஏற்ற வளச் சூழலும் சிறந்த காலநிலையும் காணப்படுகின்றது.

எனவே மனித வளத்தைப் பயன்படுத்துவதன் மூலம் இங்கிருந்து கூடியளவு பய னைப் பெறமுடியும்.

இவ்வாறு தெரிவித்தார் வாழ்நாள் பேராசிரியர் பொ. பால சுந்தரம் பிள்ளை.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற ''மனைப்பொருளாதார வாழ்வாதாரத் திட்டத்தை மேம்படுத்தல்'' தொடர்பான கலந்துரையாடலில் சிறப்புரை வழங்கும் போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் தெரிவித்ததாவது:-

மனைப்பொருளாதாரத் திட்டமானது சிறந்ததொரு தொழில் வாய்ப்பைப் பெற்றுத் தருவதுடன் அதிக இலாபத்தையும் பெற்றுத் தரும்.

இதன் பயனாளிகள் வறியவர்களாக இருந்தால் திட்டம் நிச்சயம் வெற்றியளிக்கும்.

எனவே பயனாளிகளைத் தெரிவு செய்யும்போது ஏற்பாட்டாளர்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும். வடமாகாணத்தில் யாழ். மாவட்டம் இயற்கையாகவே சிறந்த நிலவளத்தையும் ஏனைய சூழல்களையும் தன்னகத்தே கொண்டது.

யாழ்.மாவட்டத்தில் யாழ்.பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிரதேசம் வாழை மரங்கள் மூலம் அதிகளவு வருமானத்தைப் பெற்று வருகின்றது.

இதுபோன்று ஏனைய பிரதேசங்களிலும் மா, பலா, தென்னை போன்ற மரங்களைப் பயிர் செய்வதன் மூலம் பொருளாதார ரீதியாக அதிகளவு பயன் பெறமுடியும்.

குறிப்பாகப் பப்பாசிப் பழத்தின் சந்தை வாய்ப்பு தற்போது அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. இதற்குக் காரணம் பப்பாசிச் செய்கையாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து விட்டது.

இத்தகைய பொருளாதார உற்பத்திகளைத் தெரிவு செய் தால் பயனாளிகள் அதிக லாபத்தைப் பெற முடியும் - என்றார்.(ம-313)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு மேலும் ஒரு மருத்துவர்

தென்மராட்சி, மே 19

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மேலும் ஒரு மருத்துவர் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றி வந்த பொது மருத்துவரான பரணிதரன் என்பவர் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (ம-207)

# குடிதண்ணீர் தாங்கி அமைப்பு

தென்மராட்சி, மே 19

சாவகச்சேரி பொதுச்சந்தையில் 'யுனிலீவர்' நிறுவனத்தினர் சந்தைக்குள் குடிதண்ணீர்த் தாங்கியை அமைத்துள்ளதுடன் 3 குடிதண்ணீர் குழாய்களையும் பொருத்தியுள்ளனர்.

சந்தைக்குள் உள்ள கிணற்றுக்கு அருகில் தாங்கியையும் குழாய்களையும் பொருத்தியுள்ளனர்.

அங்குள்ள வர்த்தகர்கள் மற்றும் சந்தைக்கு வரும் பொதுமக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்குடன் இவை அமைக்கப்பட்டுள்ளன.

சலவைப் பவுடர் ஒன்றின் விளம்பரமாக இவை அமைக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ம-207)

# சிறப்புச் சொற்பொழிவு

நாவற்குழி, மே 19

கைதடி, நவபுரம் துர்க்கை அம்மனின் மண்டலாபிசேக நிகழ்வை முன்னிட்டு நாளாந்தம் சிறப்புச் சொற்பொழிவுகள் நடைபெற்று வருகின்றன.

இதன் அங்கமாக இன்று வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளர் ச.லலீசனின் சொற்பொழிவு நடைபெறவுள்ளது. (ம-121)

# பருத்தித்துறைக் கோட்டத் தமிழ் தினப் போட்டி முடிவுகள்

வடமராட்சி, மே 19

**இசையும் அசைவும்- பிரிவு-1**

தயாபரன் தனுஜா- தும்பளை சிவப்பிர.ம.வி, பூபாலசிங்கம் நிருஜா- புற்றளை மகா வித்தி, யோகராசா பிரியங்கா- கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலை.

**பாவோதல்- பிரிவு- 1**

நாகேஸ்வரி விபுகா- வட இந்து மகளிர் கல்லூரி, க.கஜனி- தொண்டமானாறு வீ.ம.வித்தி, பானுஜா தரணிதரன்- தும்பளை சிவப்பிர.ம. வித்தி.

**வாசிப்பு- பிரிவு- 1**

ரட்ணகுமார் ஹம்சிகா- மேலைப்புலோலி சைவப். வித்தி, பிரியதர்சினி பாலச்சந்திரன்- வல்வை சிவகுரு வித்தி, புருசோத்தமன் குணரத்தினம் - தம்பசிட்டி மெ.மி. த.க.பாடசாலை.

**ஆக்கத்திறன் வெளிப்பாடு- (கதைகூறல்) பிரிவு- 1**

மேகவண்ணன் சாரங்கன்- தும்பளை சிவப்பிர.ம.வித்தி, ர.விதுஷன்- அல்வாய் வடக்கு றோ.க.த.க.பா, பிரணவன் சுபேந்திரன்- தம்பசிட்டி மெ.மி. த.க.பாடசாலை.

**பேச்சு -பிரிவு- 1**

ஜெயராஜா சர்மினி- வட இந்து மகளிர் கல்லூரி, உதயரூபன் லதுசோபன்- சிதம்பரக் கல்லூரி, பலதாரணி ஈஸ்வரன்- தும்பளை சிவப்பிர.ம.வித்தி.

**வாசிப்பு- பிரிவு - 2**

கோபாலகிருஷ்ணன் அருட்செல்வி- மெதடிஸ்த பெ.உ.பாடசாலை, நடராஜா துவாரகா- வட இந்து மகளிர் கல்லூரி, வின்சன் உதயகுமார் உதயநிலா- பொலிகண்டி இ.த.க.பாடசாலை.

**பா ஓதல்- பிரிவு -2**

ஜெயராஜா யதுர்சனா- மெதடிஸ்த பெ.உ.பாடசாலை, புவனேஸ்வரன் பிரியங்கா- வல்வை சிவகுரு வித்தி, இரஞ்சகுமார் தர்சன்- ஹாட்லிக் கல்லூரி.

**பேச்சு- பிரிவு- 2**

வைஷ்ணவி சிவபாலன்- மெதடிஸ்த பெ.உ.பாடசாலை, சிவசண்முகமூர்த்தி சிவதர்சன் - ஹாட்லிக் கல்லூரி, அ.மரியநிலோசா- அல்வாய் வடக்கு றோ.க.த.க.பாடசாலை.

**இசை தனி- பிரிவு- 2**

ரவிச்சந்திரன் அனுசாந்- ஹாட்லிக் கல்லூரி, றொசானா வின்சன் மரியதாஸ்- சென். தோமஸ் றோ.க.பெ.பாடசாலை, திருச்செல்வம் சுபாஸ் - பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தி.

**நடனம் தனி- பிரிவு- 2**

புஸ்பராசா புகழினி- மெதடிஸ்த பெ.உ.பாடசாலை, எஸ். சஜீதா- தொண்டமானாறு வீ.ம.வித்தி, சுந்தரமூர்த்தி நித்தியபூபதி- வட இந்து மகளிர் கல்லூரி.

**பேச்சு- பிரிவு- 3**

சௌமியா பாஸ்கரன்- மெதடிஸ்த பெ.உ.பாடசாலை, பாஸ்கரன் விநோசன்- ஹாட்லிக் கல்லூரி, சிறிஸ்கந்தராசா [illegible] வட இந்து மகளிர் ம.வித்தி.

**பா ஓதல்- பிரிவு- 3**

பாலச்சந்திரன் நர்மதா- வட இந்து மகளிர் கல்லூரி, இந்திரதாஸ் சுபாசினி- வல்வை சிவகுரு வித்தி, தபேந்திரராசா சஜீவன்- ஹாட்லிக் கல்லூரி.

**இசை தனி- பிரிவு- 3**

திருவாகரன் ஆரணியன்- ஹாட்லிக் கல்லூரி, ஜெகநாதன் கிசோதா- மெதடிஸ்த பெ.உ. பாடசாலை, ஜெ.சங்கீதா- தொண்டமானாறு வீ.ம. வித்தி.

**நடனம் தனி- பிரிவு- 3**

சற்குணராசா சரண்யா- மெதடிஸ்த பெ.உ. பாடசாலை, எஸ்.சிவாம்பிகை- தொண்டமானாறு வீ.ம.வித்தி, வதனரூபன் மாதுமை- வட இந்து மகளிர் கல்லூரி.

**பேச்சு - பிரிவு- 4**

தனபாலசிங்கம் கோகுலன்- ஹாட்லிக் கல்லூரி, ராசேந்திரன் திவாகர்- சிதம்பரக் கல்லூரி, சதீஸ்குமார் தரணியா- புற்றளை மகா வித்தி.

**பா ஓதல் பிரிவு- 4**

நாகேந்திரன் துஷிகா- வட இந்து மகளிர் கல்லூரி. கணேசலிங்கம் கேசவி- வல்வை சிவகுரு வித்தி, ஞானேஸ்வரன் குவேந்திரன்- பொலிகண்டி இ.த.க.பாடசாலை.

**இசை தனி- பிரிவு- 4**

சோதிலிங்கம் ரஜீந்தராஜ்- ஹாட்லிக் கல்லூரி, மகேந்திரராசா மதுஷா- மெதடிஸ்த பெ. உ.பாடசாலை, அன்ரன் புதுமைராசா அனுசியா- பொலிகண்டி இ.த.க.பாடசாலை.

**நடனம் தனி- பிரிவு- 4**

கமலநாதன் நிரோசினா- மெதடிஸ்த பெ.உ. பாடசாலை, முரளி வெண்ணிலா- வட இந்து மகளிர் கல்லூரி, இரத்தினசோதி [illegible]- வல்வை மகளிர் ம.வித்தி.

**இசை குழு- 1**

ஹாட்லிக் கல்லூரி, பொலிகண்டி இ.த.க.பாடசாலை, மெதடிஸ்த பெ.உ.பாடசாலை.

**நடனம் குழு- 1**

மெதடிஸ்த பெ.உ.பாடசாலை, புற்றளை மகா வித்தி, தொண்டமானாறு வீ.ம.வித்தி. (ம-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
உற்சாகம், தெம்பு குறையும் நாள். பிரியமான சிலரிடம் யோசித்து பேசும் நிலைமை உருவாகும். எப்படியும் முடிந்து விடும் என நினைத்த வேலை ஒன்று முடியாமல் போகலாம். பெரிய மனிதர்கள் சிலர் உங்களின் மனம் நோகும் வகையில் பேசலாம். மறதியால் அவதிகள், தண்டச் செலவுகளுக்கு ஆள்படலாம்.

**இடபம்:**
சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். தேக ஆரோக்கியத்திற்காக சில செலவுகளைச் செய்வீர்கள். பொது விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். கோபம், பதற்றம் நீங்கி மனதில் உற்சாகம் குடிகொள்ளும். வரவேண்டிய கடன் மிகுதி ஒன்றை கேட்டு வாங்குவீர்கள். ஆடம்பரமான விடயங்களில் நாட்டம் செல்லும். கூட்டு முயற்சி வெற்றி தரும்.

**மிதுனம்:**
உறவு பெரியவர்களின் பாராட்டு, அன்பைப் பெறுவீர்கள். தொழிலில் சிறப்பான நிலைமை காணப்படும். பணப்பற்றாக்குறை தீரும் வகையில் புதிய வரவுகள் வந்து சேரும். கடந்த கால அனுபவங்களை நினைத்துப் பார்த்து, புதிய முயற்சிகளில் இறங்குவீர்கள். நீண்ட நாள்களாக உங்களுடன் பேசாத ஒருவர் திடீரென தொலைபேசியில்பேசலாம்.

**கடகம்:**
சிறிய பிரச்சினை ஒன்றை நினைத்து பெரியளவில் கவலைப்படுவீர்கள். அயலாரின் அதிருப்திக்கு ஆள்படலாம். உறவினர் ஒருவரிடம் மனம் விட்டுப் பேசும் சூழ்நிலை உருவாகலாம். வெளியூர்களில் இருந்து முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். பொதுவாழ்வில் உள்ளோருக்கு அலைச்சல் கூடும். தர்ம காரியம் செய்வீர்கள்.

**சிங்கம்:**
பண வசூலிப்பு முயற்சிகள் பலன் தரும். உடன் பிறப்புகள் அனுசரணையாக நடந்து கொள்வர். நண்பர்களை நம்பி உங்களின் வேலை ஒன்றை ஒப்படைப்பீர்கள். நீண்ட நாள்களாக பார்க்காத உறவினர் ஒருவரைப் பார்க்க நேரிடலாம். திட்டமிட்ட காரியம் ஒன்றில் மாற்றங்களைச் செய்யலாம். எதிர்பாராத செலவுகள் நேரும்.

**கன்னி:**
மனதில் உற்சாகம் குடிகொள்ளும் நாள். கடிதங்கள் மூலம் சுபச் செய்திகள் வரலாம். நண்பர்கள் சிலர் ஆதாயம் பெற நீங்கள் உதவிகரமாக இருப்பீர்கள். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். வழக்கமான பணிகள் தங்கு, தடையின்றி நடைபெறும். புதிய முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு.

**துலாம்:**
வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டிய நாள். பணியில் இருப்போர் மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாகலாம். தொழில் ரீதியாக மறைமுக போட்டிகளை சந்திக்கலாம். வீட்டு தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். சிலர் உங்களிடம் பணம் கடனாக வாங்கலாம். மாமன், மைத்துனர் உதவி கிட்டும். சோர்வு, சோம்பல் கூடும்.

**விருச்சிகம்:**
சொல்வாக்கைக் காப்பாற்றி செல்வாக்குப் பெறுவீர்கள். சகோதரர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். கடன் மிகுதி ஒன்றை மாற்றி அமைக்க முற்படுவீர்கள். உங்களுக்குப் பிடித்தமான பொருள் ஒன்றை உறவினர்கள் கொடுக்கலாம். வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்த ஒருவரை சந்திப்பீர்கள். சிலரால் உங்களுக்கு கோபம், பதற்றம் உண்டாகும்.

**தனுசு:**
தொழில் ரீதியாக சிலர் உங்களின் உதவி நாடி வரலாம். மனதை விட்டு அகலாத நிகழ்ச்சிகள் நடக்கலாம். நோய் உபாதைகளைத் தவிர்க்க உணவில் கவனம் அவசியம். சிலர் உங்களுக்கு உதவி செய்ய முன்வந்தும் நீங்கள் அதை மறுத்து விடுவீர்கள். பழைய விடயங்களை நினைத்துப் பார்த்து புதிய முயற்சிகளில் இறங்குவீர்கள். குடும்பத்தினருடன் சச்சரவு ஏற்படும்.

**மகரம்:**
குடும்ப உறுப்பினர்கள் உங்களின் மனம் போல் நடந்து கொள்வர். நினைத்த காரியங்கள் குறித்த நேரத்தில் நடந்து சந்தோஷம் அடைவீர்கள். பிள்ளைகளின் சின்ன சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். நீண்ட நாள்களாக வராத உறவினர் ஒருவர் உங்களின் வீட்டிற்கு வரலாம்.

**கும்பம்:**
அவசரமாக முடிக்க வேண்டிய வேலை ஒன்றால் அவதிகளுக்கு ஆள்படலாம். நீண்ட நாள் விருப்பங்கள் நிறைவேறலாம். தொழில் முன்னேற்றம் தொடர்பான ஆலோசனைகளில் ஈடுபடுவீர்கள். மாற்று இனத்தவர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம்.

**மீனம்:**
நண்பர்களுக்காக வெளியிடங்களில் காத்திருக்கலாம். சிறிய செலவு ஒன்றுக்கு யோசித்த நீங்கள், ஒரு காரியத்திற்காக பெரியளவில் செலவு செய்யலாம். தற்செயலாக நடக்கும் சம்பவங்களால் உங்களின் மனதில் சந்தோஷம் குடிகொள்ளும். வயிறு, வாயு உபாதைகளால் பிரச்சினைகளுக்கு ஆள்படலாம். எதிர்பாராத நிகழ்ச்சிகள் நடக்கலாம்.

# மக்கள் மனங்களில் மறைந்து கிடப்பது என்ன....?



**வடக்குக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெகான் பெரேரா வடக்கு மக்களின் மனோநிலை தொடர்பாக எழுதியுள்ள கட்டுரையின் தழிழாக்கம்**

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக இலங்கை மீதான விமர்சனங்கள் துரிதமடைந்திருக்கும் அதேவேளை, போரின் இறுதிக் கட்டத்தில் ஆள்கள் காணாமற் போனமை தொடர்பாகக் கடந்த வாரம் திருகோணமலையில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடந்திருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன. இந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஜே.வி.பி. ஆதரவு வழங்கியிருக்கிறது. வேடிக்கை என்னவென்றால் கடந்த காலத்தில் இந்த அமைப்பு இரண்டு தடவைகள் இது போன்ற சம்பவங்களில் சம்பந்தப்பட்டுள்ளது. செயற்பட்டவர்களாகவும் பாதிக்கப்பட்டவர்களாகவும் அது அப்போது இருந்துள்ளது.

1971 மற்றும் 1988- 89 காலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் காணாமற் போனார்கள் அல்லது கொல்லப்பட்டார்கள்.

தெற்கிலிருந்து வந்து சிங்களவர்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டமையால் கிழக்கிலங்கை மக்களுக்கு ஊக்கம் பிறந்திருக்கலாம், அவர்கள் துணிச்சலுடன் வெளியில் வந்து தமக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்று போராட்டம் நடத்தியிருக்கிறார்கள்.

போரின் இறுதிக்கட்டச் சம்பவங்கள் மீது கவனம் செலுத்தப்படுவது குறிப்பாக அரசுக்கும் பெரும்பான்மை மக்கள் கருத்துக்கும் ஏற்புடையதாக இல்லை. அதனால் ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ள மனித உரிமை மீறல்கள் தொடர்பாகப் பழிவாங்கல் இடம்பெறாது என்ற தைரியத்தில் கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்கள்.

மாறாக ஐ.நா.நிபுணர் குழு அறிக்கை ஒரு தலைப்பட்சமானது- உண்மைக்கு மாறானது என்ற வகையில் அதை முற்றாக நிராகரிப்பதற்கு மாறாக வெளிப்படையாகக் கருத்துத் தெரிவிப்பது தேசத்துரோகம் என்று குற்றஞ்சாட்டப்பட மட்டுமல்ல, சர்வதேச சதித்திட்டத்தின் பங்காளிகள் என்றும் குறை கூறப்படுவதற்கான ஆபத்து இருக்கின்றது.

தென்னிலங்கையில் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாகப் பகிரங்கமாக மாற்றுக் கருத்துக்களை வெளியிட்டமைக்குப் பல்வேறு நிர்வாக இடையூறுகளுக்கு உட்பட்டதாகவும் அவர் தொடர்பாகப் பல அவதூறு துண்டுப் பிரசுரங்கள் வெளிவந்ததாகவும் பத்திரிகைகளில் செய்தி வந்தது.

போரின் இறுதிக் கட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் நடந்து கொண்ட விதம் தொடர்பாக நிபுணர்குழு தமது அறிக்கையில் கணிசமான அளவு கனதியும் விவரமும் கொடுத்திருக்கிறது. புலிகளின் செயற்பாடுகள் எவ்வாறு பெருமளவில் பொதுமக்களின் அழிவுக்குக் காரணமாயிற்று என்பதையும் அது விளக்கியுள்ளது.

எதுவானாலும் போரின் இறுதிக் கட்ட நிகழ்வுகளை மட்டுமே ஆராய்வதற்கு ஆணைக்குழுவுக்கு வரையறை வழங்கப்பட்டிருந்ததால் அதற்கு முன்னர் புலிகள் மேற்கொண்டிருந்த செயற்பாடுகள் மற்றும் முன்னைய அரசுகள் மற்றும் இந்திய அமைதி காக்கும் படைகள் மேற்கொண்டிருந்த அட்டூழியங்கள் அறிக்கையில் இடம்பெறாமல் போய்விட்டன.

இதுவரை புலிகளுக்கு ஊக்கமளித்து அவர்களின் அட்டூழியங்களை நியாயப்படுத்திக் கொண்டிருந்தவர்கள் தம்மை நோக்கிய ஆய்வுகளைத் திருப்பாமல் இருந்து வருகிறார்கள். இது இன்றைய அரசுக்கு அதிகமான கோபத்தைத் தூண்டிவிட்டிருக் கின்றது.

புலிகளின் அழிவையடுத்து இந்த அரசையே சர்வதேசம் சகல விடயங்களிலும் குறிவைப்பதாக அது கருதுகின்றது.

ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கையில் என்னதான் குறைகள் இருந்தாலும் அதனைச் சிலாகித்துப் பேசுகின்ற இன்னுமொரு சாரார் இருக்கவே செய்கிறார்கள்.



ஜெகான் பெரேரா

கடந்த வாரம் நான் யாழ்ப்பாணத்தில் இருந்த போது, சந்தித்த பலர் போரின் இறுதிக் காலத்தில் என்ன நடந்தேறியது என்பது இன்று உலகம் முழுவதுக்கும் தெரிய வந்துவிட்டது என்று கூறித் திருப்திப்பட்டார்கள்.

அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னர் போரில் ஏராளமானவர்கள் கொல்லப்பட்டார்கள் அல்லது காயப்பட்டார்கள் என்பதைத் தொடர்ச்சியாக மறுத்து வந்த அரசின் நிலைப்பாட்டில் அவர்கள் விரக்தியுற்றிருந்தனர். அதனை மறுப்பது தாங்களும் காணாமற் போவதற்கு ஏதுவாகி விடும் என்று அவர்கள் பயந்திருந்தார்கள்.

போர் முடிவுற்ற நிலையில் மக்கள் மத்தியில் ஒரு தளர்வு மனப்பான்மையும் அதிகாரமில்லாத உணர்வும் அடிமனங்களில் இழையோடிக் கொண்டிருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் சுறுசுறுப்பான வியாபார சந்தடியில் அங்கு எப்போதாவது வருகை தரும் பயணிகளுக்கு வெளிப்படை யாகத் தெரியாமல் போகலாம்.

### சர்வதேசம் ஏன் தலையிடக்கூடாது?

யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தபோது பல சமயங்களைச் சேர்ந்த ஒரு குழுவினரை நான் சந்தித்தேன். ஐ.நா. அறிக்கையை நான் விவாதித்த போது அமைதியைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு நிறுவனத்தின் உறுப்பினர் என்ற முறையில் நான் கூறினேன், வெளிச் சக்திகளினால் மேற்கொள்ளப்படுவதான தண்டனைதான் எமது குறிக்கோளாக இருக்க முடியாது. உள்ளக சமுதாய மாற்றங்களின் மூலமான இணக்கப்பாடே குறிக்கோளாக இருக்க வேண்டும் என்றேன்.

எனது இந்தக் கருத்து இரண்டு முக்கிய கேள்விகளின் மூலம் எதிர்க்கப்பட்டது. முதலாவது இவ்வளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




துன்பங்களை ஏற்படுத்தியவர்களை ஏன் தண்டிக்கக் கூடாது? இவ்வளவு காலமும் மிக மோசமாக உள்ளக செயற்பாடுகள் தோல்வி கண்டுவிட்ட நிலையில் சர்வதேசம் ஏன் தலையிடக்கூடாது என்பதாகும்.

பல்வேறு விதமான கருத்துக்கள் யாழ்ப்பாணத்தில் தெரிவிக்கப்பட்டன. சிலர் அரசு வலுவுடன் செயற்படுவதாகக் கூறினார்கள். நான் கொழும்பு திரும்பிய பின்னர் யாழ்ப்பாணத்தில் நான் சந்தித்த சமய சார்பு குழுவின் மத்தியில் தெரிவித்திருந்த கருத்துக்கள் அவர்களில் சிலரால் ஏற்றுக்கொள்ளப் படவில்லை என்று கூறப்பட்டது.

ஆனால் அந்தச் சந்திப்புக் கூட்டத்தில் எவரும் என்னை எதிர்த்துக் கூறவில்லை. ஒரு சிலர் தான் கருத்து வெளியிட்டார்கள். அவர்கள் ஒருவேளை சில சமயத் தலைவர்களுக்கு ஏற்கனவே நடந்திருந்த சம்பவங்களை மனதில் வைத்திருந்திருப்பார்கள். அந்தத் தலைவர்கள் தெற்கிலிருந்து வருகை தந்திருந்த உயர்மட்ட சமயத் தலைவர்கள் மத்தியில் ஏற்கனவே துணிச்சலுடன் சில கருத்துக்களை வெளியிட்டிருந்தார்கள். இவர்கள் இரவு நேரத்தில் ஆயுதம் தரித்த சில கும்பல்களால் எதிர்கொள்ளப்பட்டு சாணம் மற்றும் கழிவுப் பொருள்கள் எறிந்து அகௌரவப்படுத்தப்பட்டிருந்தார்கள்.

பத்திரிகைச் செய்திகளில் ஒருவர் மட்டுமே இவ்வாறு அகௌரவப்படுத்தப்பட்டதாக இருந்தது. ஆனால் இவ்வாறு மூவர் அகௌரவப்படுத்தப்பட்டதாக நான் கேள்விப்பட்டேன். இருவர் தாம் தாக்கப்பட்டமை தொடர்பாகப் பகிரங்கப்படுத்திக் கொள்ள விரும்ப வில்லை என்று தெரிந்தது.

**வெளியில் தெரியாத யதார்த்த நிலை**


...ரேரா

வெசாக் பண்டிகைக் காலத்தில் யாழ்ப்பாணத்துக்கு அனேகர் யாத்திரை மேற்கொள்வார்கள். இவர்களில் அனேகர் புனித நாகதீபத்துக்கு (நயினாதீவு) செல்வார் கள். கடந்த இரண்டு ஆண்டுகளாக யாழ்ப்பாணத்தவர்களின் விரும்தோம்பல் பொருளாதாரம் சிறப்பாக வளர்ச்சி கண்டு வருகின்றது. உல்லாசப் பயணிகள் பெரும்பாலும் தெற்கிலிருந்தே வருகின்றார்கள். வெளிப்படையாகப் பொருளாதார வளர்ச்சி தென்பட்டாலும் வீதிகளில் சந்தடிகள் அதிகரித்திருந்தா லும் மக்கள் மத்தியில் வெளியில் தெரியாத துன்பங்கள் இருக்கவே செய்கின்றன. இவைபற்றி வெகுவாகப் பேசப்படுவதில்லை. இதற்கான மூல காரணம் அரசியல் கொந்தளிப்புக்கு வழி வகுத்த அரசியல் அமைதி யின்மை, பிரிவினை மற்றும் ஆயுதப் போராட்டம் என்பனவாகும்.

இதுதான் இன்றைய யதார்த்தம். வடக்கில் வாழும் மக்களின் நாளாந்த வாழ்வைப் பாதிக்கின்ற தீர்மானங்கள் வடக்குக்கு வெளியிலுள்ள ஆள்களால் எடுக்கப்படுகின்றன. தமிழர்களையே பெரும்பாலராகக் கொண்ட ஒரு பிரதேசத்தின் மீது சிங்கள ஆட்சி நடைபெறுகின்றது.

இந்தச் சிங்கள ஆட்சியின் தற்போதைய கருவியாக இருப்பது இலங்கை இராணுவம். இதுவே எதிர்ப்பு எண்ணங்களுக்கான காரணம். திருகோணமலையில் போல் அல்ல, அங்கு இராணுவ அனுமதியின்றி பகிரங்க ஆர்ப்பாட்டங்கள் நடத்த முடியும். யாழ்ப்பாணத்தில் இது முடியாது. மக்களின் கலந்துறவாடும் மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் மீதான இந்த விதமான கட்டுப்பாடுகள் ஏற்றுக்கொள்ள முடியாதவையாகும்.

> **வடக்கில் வாழும் மக்களின் நாளாந்த வாழ்வைப் பாதிக்கின்ற தீர்மானங்கள் வடக்குக்கு வெளியிலுள்ள ஆள்களால் எடுக்கப்படுகின்றன. தமிழர்களையே பெரும்பாலராகக் கொண்ட ஒரு பிரதேசத்தின் மீது சிங்கள ஆட்சி நடைபெறுகின்றது.**

நான் கலந்துகொண்ட சமயத் தலைவர் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் ஒரு குருவானவர் தமது பங்கில் உள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் நிபுணர்குழுவின் அறிக்கை தண்டிப்பதற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்துவதில் அக்கறை காட்டவில்லை என்று கூறினர்.

ஓர் உதாரணத்துடன் அவர் விளக்கினார். ஆளுநரின் ஆள்கள் சிலர் தமது அநாதைகள் மடத்துக்கு வந்து அந்தக் கட்டடம் ஏன் திருத்தப்படாமல் இருக்கிறது மற்றும் நூலகம் ஏன் அமைக்கப்படவில்லை என்றெல்லாம் விசாரித்தார்கள். அவற்றைச் செய்யும்படி அவர்கள் அறிவுறுத்தினார்கள். அதற்குத் தாம் இணங்க வேண்டியிருந்தது. ஆனால் அங்கிருந்த பிள்ளைகளுக்கு உணவளிப்பதும் பள்ளிக்கு அனுப்புவதுமே தமக்குப் பெரும் சவாலாக இருந்தது- என்றார்.

இராணுவத்தினரின் இம்மாதிரி மேம்பட்ட நடத்தையும் கவனிக்கப்படுகின்றது. முன்னாள் யாழ்ப்பாண இராணுவத் தளபதியும் இப்போதைய யாழ். மாகாண ஆளுநருமான ஓய்வுபெற்ற ஜெனரல் சந்திரசிறியின் திறமை மெச்சப்படுகின்றது. போர் முடிந்து இரண்டு ஆண்டுகள் கடந்த பின்னரும் இதையல்ல யாழ்ப்பாண மக்கள் விரும்புவது.

இராணுவ ஆட்சி திறமானதாகவும் உதவி புரிவதாகவும் இருந்தபோதிலும் அவர்கள் இராணுவ ஆட்சியையன்று விரும்புவது.

மாறாகத் தங்கள் சொந்த சமூகத்திலிருந்து தங்களால் தெரிவு செய்யப்பட்டவர்களால் ஆளப்படுவதையே விரும்புகிறார்கள். அதுவே ஜனநாயகம் என்பதின் கருத்து. அதனையே இலங்கை எங்கும் வாழும் மக்களும் விரும்புகின்ற விடயம். தற்பொழுது இராணுவ அனுமதி அல்லது அவர்களின் ஈடுபாடு எதுவும் இல்லாமல் எதையும் செய்ய முடியாது என்று மக்கள் கருதுகிறார்கள்.

இராணுவத்தின் பிரசன்னத்தைக் குறைக்க வேண்டிய தேவை மற்றும் மக்கள் நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

வடபகுதி மக்களைக் கட்டுப்படுத்தி அவர்கள் மீது போர் வெற்றியாளரின் தீர்மானத்தை திணிக்கும் நடைமுறையானது மனிதாபிமான இராணுவ நடவடிக்கை [illegible] வந்து விட்டதாக ஜனாதிபதி ராஜபக்ஷ கூறிக்கொள்வதை சிதைக்கும் செயற்பாடாகவே அமையும்.(ப)

**தமிழில்: ரம்யன்**

# அவர் வருவாரா?



பக்தி வளர்கிறது ஆன்மீகம் அதிகரிக்கிறது என்று கோயில்களில் அலைமோதும் கூட்டத்தை வைத்து நாம் வாய்கிழியப் பேசலாம். ஆனால் அபத்தமானதும் அற்பத்தனமானதுமான - ஆபத்தான பல விஷயங்கள் ஆன்மீகம் என்ற பெயரில் எங்கு நோக்கினும் புளபளக்கின்றன.

பரம்பரை பரம்பரையாக வணங்கப்பட்ட பழைய கடவுளர்கள் பூமிக்குப் போதவில்லை - போலும் புதிய புதிய சுவாமிகள் தோன்றுகின்றனர். பழைய வழிபாட்டில் கீழிடத்தில் இருந்து சிறு தெய்வங்கள் சில சாமியார்களில் சகாஸங்களால் பெரிதுபடுத்தப்படுகின்றன. அழுக்குத் துணியுடன் கோவில் மூலையில் இருந்த சனி சிவனை விட திருமாலை விடப்பெரிய கடவுளாகி பெரிய பெரிய யாகங் களைப் பெற்று மக்களால் வணங்கப்படுகிற அவலம் அரங் கேறி விட்டது.

பாடல் பெற்ற சிவாலயங்கள்களில் உள்ள மூலமூர்த்திகள் பதவியிழந்த அரசியல்வாதிகள் போலக் கவனிப்பாரற்றுக் கிடக்க அந்தச் சிவாலயங்களின் தூண்களில் சிற்பிகளின் சிஷ்யர்களால் பயிற்சிக்காகச் செதுக்கப்பட்ட சின்னச் சின்னப் புடைச் சிற்பங்கள் பாலாபிஷேகம் காணும் பைத்தியக் காரத்தனம் நடக்கிறது.

பல நூறு சிறு தெய்வங்களைக் கும்பிட்டு சிதறிக்கிடந்த பாரத சமூகத்தை மீட்டெடுக்க ஆறு பெருந்தெய்வ வழிபாட்டுக்கு ஆற்றுப்படுத்திய ஆதிசங்கரரைத் தோற்கடிக்கும் முயற்சி இன்று நடைபெறுகிறது. இந்த ஆபத்திலிருந்து இந்து மதத்தை மீட்டெடுக்க மீண்டும் ஓர் ஆதி சங்கரர் அவசியம் என்றே நினைக்கிறேன். அவர் வருவாரா?

சக்தி வழிபாட்டில் பிரதான தேவதைகள் லலிதா திரிபுர சுந்தரி என்ற ஸ்ரீ இராஜராஜேஸ்வரி. அவளது வழியில் தோன்றியவர்கள்தான் வராகி, பிரத்யங்கரா போன்ற இதர தேவதைகள். இன்றைக்கு இந்தத் தேவதைகளுக்கு பிரமாண்டமான பெரிய கோயில்கள் தோன்றிவிட்டன.

இராஜகோபுரம் அமையும் தகுதி இல்லாத சிறு தேவதைகளுக்குச் சிவாலயங்களைவிடப் பெரிய பெரிய இராஜகோபுரம் கட்டுவது பிழையானது. அதனால்தான் இன்று நாட்டில் சான்றோர்களாகிய பெரியோர்கள் கருத்தை விட கீழான மனிதர்களின் சொல் ஏற்கப்படுகின்றது. பெரிய மனிதர்களாகிய தர்மவான்கள் வாயடைத்துக் கிடக்க சிறிய மனிதர்கள் ஆட்டம் போட முடிகிறது. சமய நெறிமுறைப் பிறழ்வால் நடக்கும் சமூகச் சீரழிவு குறித்து சமயத் தலைவர்கள் கண்டு கொள்ளாமல் இருப்பது கண்டிக்கத் தக்கது.

திருமால் கோயிலில் நவக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்யும் பழக்கமில்லை. ஆனால் சிவாலயங்களில் எப்படியோ அந்தப்பழக்கம் வந்துவிட்டது. இதனால் அண்மைக்காலமாக நவக்கிரக வழிபாடு சிவவழிபாட்டைப் பின்னுக்குத் தள்ளிவிட்டது. சனி சிவபெருமானைவிடப் பெரிய கடவுளாக சோதிடர் பட்டம் சூட்டப்பட்டார். பெரும்பாலான மக்கள் சனியைக் கும்பிடவே இன்று கோயிலுக்கு வருகிறார்கள்.

தன் மகன் கடும்நோயுற்று சாகக் கிடப்பதாகவும் மருத்துவம் பலன்தரவில்லை என்றதும் காந்தியடிகள் மகாத்மா என்பதால் அவரது பாதகங்களைக் கழுவி அந்த நீரைத் தன் மகனுக்குக் கொடுத்தால் மகன் பிழைக்கக் கூடும் என்று வாதாடினான் ஓர் ஏழைத் தந்தை. பாதம் கழுவிய அழுக்கு நீரில் நோய்க் கிருமிகள் இருக்கக் கூடும் என்று சாந்தமாக அறிவுறுத்திய காந்தி முடிவில் அவன் பிடிவாதம் அதிகமானபோது குவளையைப் பறித்து நீரை ஊற்றிவிட்டு கோபமாக அவனைக் கடிந்து கொண்டார். இத்தகைய மூடத் தனத்திலிருந்து விடுதலை அடையும்படி வற்புறுத் தினார்.

அந்தக் காந்தியைக் கடவுள் மீண்டும் அனுப்பியாவது இந்து மதத்தில் நிகழும் மூடத்தனங்களை மாற்றி அருள வேண்டும். அவர் வருவாரா? இறைவா! அவர் வருவாரா? உண்மை ஆன்மீகத்தை உருவாக்க சங்கரர், காந்தி, சம்பந்தர், திருவள்ளுவர் ஏன் கடவுளே வந்தால் தான் முடியும்.

சுகி.சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இளைஞர், யுவதிகளே!**

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

*'இளவல்கள் வட்டம்',*
*'உதயன்',*
*361, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பெயர் :-..........................................
முகவரி :-..........................................
..........................................
.................. திகதி
.................. கையொப்பம்

## இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

**இளம் சமுதாயத்தின் தற்கொலை அதிகரிப்புக்குக் காரணம்**

| தவறான வழிகாட்டலா? | ☐ | தன்னிச்சையான தீர்மானங்களா? | ☐ |
|---|---|---|---|

பெயர்: ..........................................
முகவரி: ..........................................
..........................................
அடையாள அட்டை இல. ..........................................

**உங்கள் தீர்ப்புக்களை 26.05.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.**

## இளம் சமுதாயத்தின் தற்கொலை அதிகரிப்புக்குக் காரணம்




### தவறான வழிகாட்டல்

விஞ்ஞான வளர்ச்சி வளர வளர இளம் சமுதாயத்தின் சிந்தனைகளும் மிகவும் வேகமாக வளர்ந்து வருகின்றது. சிந்தனைகள் வளர்வது வரவேற்க வேண்டிய ஒன்று தான். ஆனால் அதுவே அவர்களைத் தவறான வழிகாட்டலுக்கு இட்டுச் செல்வது வேதனை தரும் விடயம் ஆகும்.

குடும்பத்தில் பெற்றோர் பிள்ளைகளை மிகவும் கண்காணிப்புடனும் கண்டிப்புடனும் வளர்க்க வேண்டும். பெற்றோர் இருவரும் வேலைக்குச் செல்பவராக இருந்தால் நிச்சயம் அவர்களால் பிள்ளைகளை சரிவரக் கவனிக்க முடியாது போய்விடும். என்னதான் பெற்றோர்களுக்கு வேலை இருந்தாலும் பிள்ளைகளுக்காக சில மணித்தியாலங்கள் ஒதுக்க வேண்டும். அவர்களுக்கு நல்ல நல்ல விடயங்களைக் கற்றுக் கொடுக்கவேண்டும்.

அவ்வாறு இல்லையெனில் பிள்ளைகள் தமக்குள்ள பிரச்சினைகளைத் தமக்குள்ளே போட்டு மறைத்து அதனால் மனம் சோர்வடைந்து வாழ்வில் ஒரு பிடிப்பு இல்லாமல் வாழ நேரிடும். இதுவே காலப்போக்கில் அவர்களை மன அழுத்தத்துக்கு ஆளாக்குகின்றது. கடைசியில் தற்கொலை எனும் முடிவை எடுத்து விடுகின்றனர். குடும்பத்தில் பிள்ளைகள் மேல் பெற்றோர்கள் எப்போதும் கவனிப்புடன் இருக்க வேண்டும்.

இன்றைய விஞ்ஞான வளர்ச்சியில் கையடக்கத் தொலை பேசி, இணையம் என்பனவற்றின் தீவிர வளர்ச்சி, அதனைப் பயன்படுத்தும் இளம் சமுதாயத்தவரின் எல்லைமீறிய தன்மையும் இளம் சமுதாயத்தினரின் தற்கொலைக்கு வழிகாட்டல்களாக இருக்கின்றன.

**தி.துவாரகா**

### தன்னிச்சையான தீர்மானங்கள்

நிகழ்காலத்தின் அருமை உணர்ந்தவர்கள்தான் அடுத்த முறை ஜெயிப்பேன் என்ற உறுதியோடு இன்றைய நாளில் தங்கள் கடமை எதுவோ அதனை முழுநிறைவுடனும் முழு முயற்சியுடனும் செய்து முடிப்பார்கள். ஆனால் இன்று இளைய சமுதாயம் அவ்வாறா வாழ்கின்றது. இல்லவே இல்லை தறிகெட்டு ஓடும் மனதிற்கு கடிவாளம் இடமுடியாமல், இட விரும்பாமல் மனம் போனபடி நல்லது எது கெட்டது எது என ஆராயாமல் தம் வாழ்வைத் தீர்மானித்து விடுகின்றனர்.

தன்னிச்சையாக எடுத்த தீர்மானங்கள் பொய்த்துப் போகும் போது அந்த ஏமாற்றத்தைத் தாங்க முடியாமல் தற்கொலை வரை சென்று விடுகின்றனர். ''நிகழ்காலத்தை நீ கவனித்துக் கொண்டால் போதும் உன் வருங்காலத்துக்கு நான் பொறுப்பு என்கிறார் இறைவன்'' வாழ்வில் சாதிக்க வேண்டியவை ஏராளம் இருக்கின்றன. அதனை விட்டுத் தவறான தீர்மானங்களால் இனிமை தரும் வாழ்வை தொலைப்பதுதான் ஏனோ?

எத்தனை முறை தோல்வி அடைந்தாலும் வாழ்க்கை அழகானது. துன்பமான நேரங்கள் எப்போதும் நிலைத்திருப்பதில்லை. உறுதியான உள்ளங்கள் அவற்றை வெற்றி கொள்ளும். அந்த உறுதியான உள்ளம் எம் இளம் சமுதாயத்துக்குத் தோன்றுவது எப்போது? அப்போதுதான் எமது சமுதாயத்தில் இடம்பெறும் விரும்பத்தகாத தற்கொலைகள் குறையும்.

**ஆ.வதனா**
கரவெட்டி

## அங்கவீனர்களான நாமும் சாதனை படைப்போம்

*இயற்கை அழகு நிறைந்த பூமிப் பந்தினிலே*
*நாம் அங்கவீனர்களாகப் பிறந்து விட்டோம்*
*அல்லது அங்கவீனர்களாக உருவாக்கப்படுகின்றோம்*
*இது காலத்தின் கோலமோ -அல்லது*
*விதியின் விளையாட்டாகவோ இருக்கலாம்*
*இதை எண்ணி நாம் கவலைப்படலாமா? -இல்லையேல்*
*சும்மாதான் மூலையில் இருக்கலாமா?*
*எமக்குப் பல திறமைகள் உண்டு - அதை*
*வெளிக்கொண்டு வர முயல்வோம்*
*சாதனையாக உருமாற்றி சரித்திரம் படைப்போம்*

*ஒலிம்பிக் விளையாட்டிலும் அவயங்களை இழந்தவர்கள்*
*உலக சாதனை நிகழ்த்தியுள்ளார்கள்*
*ஏன் கிரிக்கெட் விளையாட்டிலும், கார் ஓட்டப் போட்டியிலும்*
*கணினி கையாள்வதிலும் கண் பார்வையற்றவர்கள்*
*தங்கள் திறமையைக் காட்டியுள்ளார்கள்*
*இரு கைகளும் இரு கால்களும் இல்லாவர் கூட*
*வாயால் பென்சில் பிடித்து ஓவியம் வரைந்து*
*தன் திறமையை சாதனையாக்கியுள்ளார்*
*கால்களாலும் சித்திரம், சிற்பம், எழுதும் திறமைகளை*
*வெளிக் காட்டியுள்ளார்கள்*

*இச்சாதனைகளை விட எங்களால் இன்னும்*
*மாபெரும் சாதனைகள் படைக்க முடியும்*
*மண்ணிலும், விண்ணிலும், விமானத்திலும், கப்பலிலும்,*
*கடல் அடியிலும், மலை உச்சியிலும், புதிய புதிய*
*விஞ்ஞான மெஞ்ஞான கண்டு பிடிப்புக்களாலும்*
*காலத்தால் அழிக்க முடியாத அரிய பெரிய சாதனைகளை*
*எல்லோரும் வியக்கும் வண்ணம் உருவாக்க முடியும்*
*எமது அங்கக் குறைபாடுகளை எண்ணிக் கவலைப்படாமல்*
*திடகாத்திரமான மன உறுதியுடனும் முயற்சியுடனும்*
*சாதனைகள் நிகழ்த்தி வாழ்வில் வெற்றி அடைவோம்*

**கிருஸ்ணசாமி துர்க்காம்பிகை,**
மானிப்பாய்.

## தொலைபேசிப் பாவனையின் சாதகமும் பாதகமும்...!

*(சென்ற வாரத்தொடர்ச்சி)*

பெற்றோரும் தம் பிள்ளைகளின் தேவைக்கென தொலைபேசியை வாங்கிக் கொடுத்தால் அவர்களின் தொலைபேசிப் பாவனையில் அதிகூடிய கவனமெடுக்க வேண்டும். அவர்கள் யாருடன் உரையாடுகின்றார்கள். எவ்வகையான அழைப்புக்களை அதனூடாக மேற்கொள்கின்றார்கள் என்பதைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு உள்ளது. ஒரு நாளைக்கு சாதாரணமாக எவ்வளவு பணம் தொலைபேசிப் பாவனையால் செலவாகின்றது என்பதையும் பிள்ளைகளிடம் கேட்டு அறிந்து கொள்ளவேண்டும். அவ்வாறான கண்காணிப்பை சிறுவயதில் இருந்தே பிள்ளைகள் மத்தியில் பழக்கத்தில் கொண்டு வர வேண்டும். பாடசாலை செல்லும் பிள்ளைகளிடம் கற்றல் நேரங்களில் தொலைபேசிப் பாவனை உகந்தது அல்ல என்ற நிலைப்பாட்டில் கடுகளவும் தளர்வினை ஏற்படுத்தக் கூடாது. அதே போல் பாடசாலை நிர்வாகமும் இறுக்கமாக நிலைப்பாட்டைக் கொண்டு வந்துள்ள போதும் அதற்கு உறுதுணையாக பெற்றோரும் செயற்பட வேண்டும். இப்போதெல்லாம் எம்மவர்களின் சிறு குழந்தைகள் நித்திரை கொள்வதற்கு கையடக்கத் தொலைபேசியில் பாடல் போட வேண்டுமாம். அல்லது பிள்ளை நித்திரை கொள்ளாதாம். இது எம்மில் சிலரின் புதுமொழி. ஆனால் முன்பெல்லாம் பல்லு வீழ்ந்த பாட்டி தன் மடியில் போட்டு நிலாப் பாட்டுப் பாடி தலாட்டுப் பாடி நித்திரையாக்கும் போது பாட்டியின் பொக்கை வாயைப் பார்த்த மழலை அந்தத் தாலாட்டு இசையை ரசித்தபடியே நித்திரை கொள்ளும். ஆனால் இப்போதைய நிலை தலைகீழாகவுள்ளது. மூதாட்டியின் தாலாட்டுப் பாட்டுக்குப் பதிலாகத் தொலைபேசியில் பாட்டு. சரி இதுவும் ஒரு நிலை விஞ்ஞான ரீதியான வளர்ச்சிப் போக்குத்தான். பெரியவர்களை விட சிறியவர்களே அதிகம் தொலைபேசிகளை கையாள்வார்கள். அவர்களின் மூளைத்திறன் வளர்ச்சியா? அல்லது அதன் மீதான அதிக பரீட்சார்த்தமா? எது எப்படியோ அவற்றுக்குப் பிள்ளைகள் அடிமையாகி விடாமல் கவனித்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கு அதிகம் உண்டு.

தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையங்களில், முகவர் நிலையங்களில் 'சிம்கார்ட்'' வழங்கப்படும் போது பெற்றுக் கொள்பவரின் ஆள் அடையாள அட்டை இலக்கம், அவரின் சுய விவரம் என்பன பெறப்படுவது மிகவும் நல்லதொரு விடயம். இதை அறியாத சில நபர்கள் தொலைபேசியைப் பயன்படுத்த முற்பட்டு பின்னர் அந்த இலக்கத்தை யாருடையது என்று பரீட்சித்து நீதியின் முன் நிறுத்தப்பட்டு தண்டனை பெற்ற பலரும் இருக்கத் தான் செய்கிறார்கள். இது தொலைபேசி தொடர்பான பூரண தெளிவின்மையே காரணம்.


அத்தோடு யாருடைய பாவனையில் இருந்த தொலைபேசியாக இருந்தாலும் அது களவாடப்பட்டாலோ? அல்லது கை தவறினாலோ? உடனடியாக முறைப்பாடு ஒன்றினைப் பதிவு செய்துவிட்டு அதன் பாவனையில் உள்ள தொலைபேசி இலக்கம் பெறப்பட்ட பரிவர்த்தனை நிலையத்துக்கு இந்த இலக்கம் எனது பாவனையில் இருந்து தவறிவிட்டது என்ற தகவலை உடன் அறிவிப்பதன் ஊடாக எடுத்தவர்கள் யாரும் அந்தத் தொலைபேசியைப் பாவனையில் வைத்திருந்தாலும் அதனுள் உள்ள 'சிம்கார்ட்டை' தேவையுள்ள சமூகவிரோதச் செயலுக்குப் பயன்படுத்த முடியாது.

இவ்வாறான நடவடிக்கையை தொலைத்தவர் மேற்கொள்ளாது விட்டால் அவரது 'சிம் கார்ட்' பாவிப்பவர் மேற்கொள்ளும் எவ்வகையான செயற்பாட்டுக்கும் இவரது சுய விவரமே பதிவாகும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவேதான் தொலைபேசி பாவிப்பவர்களும் அதனைக் கைமாறும் பலரும் அது தொடர்பான பூரணமான அறிவைப் பெற்றிருப்பதோடு பிறருக்கும் அதனைத் தெளிவுப்படுத்தி எம் யாழ்.குடா நாட்டில் நடைபெறும் மிரட்டல் போன்றவற்றுக்கும் தீய செயல்களுக்கும் முற்றுப் புள்ளி வைக்க அனைவரும் முனைய வேண்டும் என்பது தற்போதைய காலத்தின் அவசரப் பணியாகும். ★

**து.திலக்,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையுடன் இணைந்து அருள்பாலிக்கும் நீர்வேலி சப்த கன்னியர் ஆலயம்



மிகப்பெரிய ஆலமரத்தின் கீழ் எளிமையான ஆலயத்தில் வீற்றிருந்து அருளாட்சி செய்யும் நீர்வேலி வடக்கு பன்னாலை சப்த கன்னிய ஆலயத்தின் அமைவிடமோ அற்புதம் வாய்ந்தது. ஆலயத்தின் தோற்றமோ அதனிலும் அதியற்புதம்.

மிகப் பெரியதும் பரந்த கிளை அமைப்பைக் கொண்டதுமான ஆல மரத்தின் அடிமரப்பரப்பே ஆலயத்தின் பின் பக்கச் சுவராக உள்ளது. இரண்டு பக்கச் சுவரிலும் கூரை முன் பக்கம் கம்பியால் அமைக்கப்பட்ட கதவுகள், இரண்டு மண்டபங்கள் சப்த கன்னியர்களின் திருவுருவ விக்கிரகங்கள் வரிசையாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

ஆலயத்தை வழிபடச் செல்லும் அடியவர்களை குளிர்மையான கூடாரம் போல் பச்சைப் பசேல் என ஆலயத்தை மூடி நிற்கும் பெரு விருட்சமான ஆலமரமும் ஆலமரத்தில் அமர்ந்திருந்து அமைதியாக வாழும் பல நூற்றுக்கணக்கான பறவைகள் எழுப்பும் இயற்கை ஒலியும் அனைவரையும் மெய் மறக்கச் செய்யும். ஆலயத்தின் முதல் மண்டபத்தில் பிராண்மி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகினி, இந்திராணி, சாமுண்டி ஆகிய சப்த கன்னியரும் சமச்சீராகப் பீடத்தில் வீற்றிருப்பது அவர்களுக்கு நாளாந்தம் பூசை வழிபாட்டின்போது அலங்காரம் செய்து மாலை சார்த்தி இருப்பதும் தனியழகு.

ஆலயம் தொடர்பான வரலாறே நீண்ட கால பூர்வீக வரலாறு. சுமார் 350 வருடங்களுக்கு முன்னர் முதலியார் என்பவரால் ஸ்தாபிதம் செய்யப்பட்ட அம்மன் ஆலயம் என்பதால் முதலியம்மன் ஆலயம் என்று அழைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் நீர்வேலிச் சந்தியில் இருந்து கிழக்குத் திசையாகச் செல்லும் ஒழுங்கையில் 500 மீற்றர் தூரத்தில் சப்த கன்னியர் ஆலயம் அமைந்துள்ளது. ஆலய ஸ்தாபகர் தனது நிலத்தில் 15 பரப்பை ஆலயத்துக்கென ஒதுக்கி விட்டுள்ளார். ஆலயமும் ஆலயத்தை மூடிய நிலையில் நிற்கும் ஆலமரமும் அற்புதமான காட்சியாகும். மிகப்பெரிய அடிமரம் அத்துடன் 51 விழுதுகள் கொப்புக்களை தாங்கி பெரிய மரங்களாகக் காணப்படுகின்றன.

ஆலயத்தின் பூர்வீக வரலாறு தொடர்பாக தற்போது பரிபாலனம் செய்யும் கந்தையா வேலாயுதபிள்ளையும், சின்னத்துரை நடனசிவராசாவும் பின்வருமாறு கூறுகின்றனர். முதலியாரின் மாடுகளை மேய்ப்பதற்கு நீர்வேலி தரவை வெளிக்குக் கொண்டு செல்லும் வாலிபன் - தரவையில் வழிமாறி நீண்ட தூரம் அலைந்து திரிந்த வேளையில் கன்னிப் பெண் ஒருத்தி அவனை முதலியாரின் மாட்டுப் பட்டிக்கு அழைத்து வந்து விட்டு மறைந்துள்ளார்.

பின்னர் முதலியார் கனவில் தோன்றி குறித்த இடத்தில் தனக்கு ஆலயம் அமைத்து வழிபாடு செய்யுமாறு வேண்டியதால் அந்த இடத்தில் அம்மனுக்கு ஆலயம் அமைத்து பூசை வழிபாடு செய்யப்பட்டது. ஆண்டு தோறும் கார்த்திகை ரோகினியில் பொங்கல் வழிபாடு செய்து வந்ததாகவும் கூறப்படுகின்றது.

ஆரம்பத்தில் முதலிஅம்மன் கோயில் என அழைக்கப்பட்டது. ஐந்து, ஆறு தலைமுறைக்கு முந்தியது. முதலியாரின் சந்ததியினர் ஆலயத்தைப் பராமரித்துப் பூசை வழிபாடுகள் சந்ததிப் பூசகர்களால் நடத்தப்பட்டு வந்தன. கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் அம்மனின் வேண்டுதலுக்கு ஏற்ப முதலியாரின் சந்ததியினர் சப்த கன்னிகளை பிரதிஷ்டை செய்து 12 தினங்கள் திருவிழாச் செய்து பொங்கல் மடை வைத்து வழிபடுவதாகவும் ஆலயத்தில் இறுதிப் பொங்கலின் போது முதலியார் சந்ததியைச் சேர்ந்த ஒருவரில் உரு வந்து ஆடி அருள்வாக்கு கூறுவார்.

உருவந்து அருள்வாக்குக் கூறுவதை ஏளனம் செய்யும் வகையில் மது போதையில் உருவாடிய உறவினர் ஒருவர் அந்த இடத்திலேயே மயங்கி விழுந்து இரத்தம் கொப்பளிக்க அந்த இடத்திலேயே மரணமானதாகக் கூறினார்.

ஆலமர அடியில் நாகபாம்புகள் குடியிருக்கின்றன. யாருக்கும் எந்தக் கெடுதலையும் செய்வதில்லை அம்மன். அடியவர்களுக்கு காட்சி கொடுத்து மறைகின்றன. ஆலமரத்தில் யாரும் குழை வெட்டுவதில்லை. கட்டுப்பாட்டை மீறி வெட்டுபவர்கள் அம்மனால் தண்டிக்கப்படுவர் என்ற நம்பிக்கை நிலவுகின்றது. ஆடு மாடுகள் நிலமட்டத்தில் உள்ள ஆல மரத்தின் கொப்புக்களை மேய்கின்றன. ஆலயச் சூழலில் தவறுக்கு இடமே இல்லை.

(தொடரும்)

தொகுப்பு- ஞானஆதவன்

# இந்துக் கல்விப் பாரம்பரியத்தை 85 ஆண்டுகளாக வளர்த்து வரும் இடைக்காடு மகாவித்தியாலயம்

வலி. கிழக்கில் உள்ள நான்கு வண் ஏ.பி தரக் கல்லூரிகளில் பௌதீக வளத்தாலும் கல்வி அடைவு மற்றும் பரீட்சைப் பெறுபேறுகளினாலும் முதல் நிலையில் விளங்கும் இடைக்காடு மகா வித்தியாலயம் 30 வருட யுத்த வடுக்களைத் தாங்கி மீண்டும் மிடுக்குடன் வளர்ந்து வருகின்றது.

கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் வண் ஏ.பி கல்லூரிகள் மட்டத்திலும் 1-13 தரம் வரையிலான வகுப்புகளைக் கொண்ட பாடசாலைகள் மட்டத்திலும் முன்னணியில் விளங்குகிறது.

பாடசாலைச் சமூகத்தின் ஒத்துழைப்புக்கு எடுத்துக் காட்டாக துலங்குகிறது. கல்லூரிக்காக சமூகமும் சமூகத்துக்காக கல்லூரியும் என்ற ஒன்றிப்புடன் உள்ளூர் ஆசிரியர்களே விரும்பிப் பணியாற்ற முன்வரும் கல்விக் கூடமாக விளங்குகிறது.

அமெரிக்க மிசன் மற்றும் கிறிஸ்தவ பாதிரிமாரின் கல்விப்பணியை நம்பி வாழ்ந்த காலப்பகுதியில் இந்துமரபுக் கல்வியும் சமயநெறியும் பின்தங்கி விடக் கூடாது என்ற உயர் நோக்குடன் 1925 ஆம் ஆண்டு சேர். பொன். இராமநாதனை இடைக்காட்டுக் கிராமத்துக்கு அழைத்து ஊர் பிரமுகர்கள், பெரியோர்கள் உள்ளடங்கிய உயர் சபையில் கல்வி பற்றிய கருத்துக்கள் பரிமாறப்பட்டன. குறித்த கலந்துரையாடலின் விளைவாக உருவாகியதே புவனேஸ்வரி அம்மனின் பெயர் விளக்கிய புவனேஸ்வரி அம்மன் தமிழ்ப் பள்ளிக்கூடம்.

புவனேஸ்வரி அம்மன் தமிழ்ப் பாடசாலை, சைவ வித்தியாலயம், இடைக்காடு இந்துக்கல்லூரி எனப் பெயர் மாற்றம் பெற்று 1961 ஆம் ஆண்டு அரசு பாடசாலைகளைப் பொறுப்பேற்ற வேளையில் அந்தக் காலகட்டத்தில் உயர் பாடசாலைக் கட்டமைப்பான மகா வித்தியாலயம் என்பதை உள்ளடக்கி இடைக்காடு மகாவித்தியாலயம் என்ற நாமத்துடன் உயர் கல்விப் பணி ஆற்றி வருகின்றது.

1925 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இடைக்காட்டில் உள்ள க.முருகுப்பிள்ளை என்பவரின் வீட்டில் 30 மாணவர்களுடன் திண்ணைப் பள்ளியாக ஆரம்பிக்கப்பட்டது.

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் வழிப்படுத்தலுடன் வித்தியாலயத்தை ஆரம்பிப்பதில் ஆறுமுகம் வேலுப்பிள்ளை, அ.கந்தையா, ஞா.சுப்பிரமணியம், வீ. கணபதிப்பிள்ளை கை.செல்லமுத்து, க. இராமசாமி ஆகியோர் முன்னின்று உழைத்தனர்.

ஆரம்பத்தில் பாடசாலையின் அதிபராக பண்டிதர் க. இராமசாமி பொறுப்பேற்றுக் கொண்டார். பொது மக்களின் ஏகோபித்த ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கப்பட்ட வித்தியாலயத்தில் 1926 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மாணவர் எண்ணிக்கை நூறைத் தாண்டியது.

ஆரம்ப காலத்தில் ஆசிரியர்களாக சு.நாராயணபிள்ளை, கை.செல்லமுத்து, வி. கணபதிப்பிள்ளை, மு. கந்தையா, செல்வி வீ. சரஸ்வதி ஆகியோர் கடமையாற்றினர். பாடசாலையில் ஆரம்ப காலத்தில் 8 ஆம் வகுப்பு வரை கல்வி புகட்டப்பட்டது. [illegible] யான நிலத்தை [illegible] உள்ளூர் பிரமுகர்களும் நன்கொடையாக வழங்கி உதவினர்.



காலச் சூழலைக் கருத்தில் கொண்டு பாடசாலைச் சமூகத்தில் கருத்தொருமித்த உடன்பாட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட கல்லூரியின் வளர்ச்சி ஏனைய பாடசாலைகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது.

கல்வி அடைவு மட்டத்தில் காணப்பட்ட முன்னேற்றம் வளலாய், இடைக்காடுப் பகுதி மாணவர்களைக் தன்னீர்ப்பு செய்யச் செய்ததுடன் பலாலி, மயிலிட்டி உள்ளிட்ட வலிகாமம் பெரு நிலப்பரப்பில் தொண்டமானாறு உள்ளிட்ட வடமராட்சிப் பகுதியில் இருந்தும் பெருமளவு மாணவர்கள் கல்லூரியில் சேர்ந்து கல்வி பயின்றனர்.

உள்ளூர் மாணவர்கள் வெளியிடங்களில் உள்ள பாடசாலையை நோக்கிச் செல்கின்றதை உயர்வாக நினைத்த காலப்பகுதியில் இடைக்காடு - வளலாய் உள்ளூர் மாணவர் முழுமையாகக் கல்லூரியில் இணைந்து கற்பதைப் பெருமையாக நினைத்துக் கல்வி பயின்றனர். பொதுப் பரீட்சைக்கு பாடசாலை ஊடாகவே தோற்றினர். இதனால் கல்லூரியால் பெருமை பெற்றனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதயன் வெளியீடான
கல்விச்சுடர்
தரம் 05 மாணவர்களை இறுதிப்பரீட்சைக்கு தயார்படுத்துவதற்கான விசேட தொடர் வெளியீடு



ஆசிரியர்
திரு.யு.எல்.எம்.சாஜித்
பரீட்சை இலக்கம்: 02

# தரம் 05 புலமைப் பரிசில் படிமுறைப் பரீட்சை - 2011

பெயர்/சுட்டெண்:........................ | **வினாத்தாள்-11** | நேரம்: 45 நிமிடங்கள்

* பின்வரும் பாடலைக்கொண்டு கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.

(1)
சத்தம் தொடர்ந்து போட்டிடுமே
நித்தம் வெளியில் காட்டிடுமே
தத்தித் தத்திச் சென்றிடுமே
தண்ணீர் என்றால் ஒன்றிடுமே.

(2)
பாம்பைக் கண்டால் நடுங்கிடுமே
பாய்ந்தே ஓடி ஒடுங்கிடுமே
வீம்பாய் கத்திக் கெட்டிடுமே
விரோதி கண்ணில் பட்டிடுமே.

(3)
நதியில் நீச்சல் அடித்திடுமே
நாக்கால் பூச்சி பிடித்திடுமே
அதிகம் பேசி ஆடிடுமே
அழிவை அதுவே தேடிடுமே.

01. 1. இங்கே குறிப்பிடப்படும் பிராணி எது?
..........................................................................
2. மேற்படி பிராணி எச்சந்தர்ப்பத்தில் உரத்துச் சத்தமிடும்?
..........................................................................
3. இங்கு வந்துள்ள அடுக்கு மொழிச்சொல் எது?
..........................................................................
4. தண்ணீர் என்பதற்கு எதிர்க்கருத்துச் சொல் என்ன?
..........................................................................
5. வீம்பாய் கத்துதல் என்பதன் கருத்து என்ன?
..........................................................................
6. ''கண்ணில்'' என்பதனை பன்மையில் எழுதுக ?
..........................................................................
7. இங்குள்ள அஃறிணை, எதிர்கால வினைச்சொல் எது?
..........................................................................
8. மேற்குறிப்பிடப்பட்ட பிராணி ஒருடக வழியா? ஈருடக வழியா?
..........................................................................
9. ஒத்த கருத்து தருக.
அ) நதி ..........................................
ஆ) பாம்பு ..........................................

02. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வசனம் ஆக்குக.
1) சுட்ட/ருசியானது/தோசை/அம்மா
..........................................................................
2) அலைந்து/மக்கள்/பண்டைக்/காடுகளில்/வாழ்ந்த/திரிந்தனர்/காலத்தில்
..........................................................................

03. பின்வரும் வசனங்களை எழுவாய்க்குப் பொருத்தமாக மாற்றி எழுதுக.
1) அவர்கள் நேற்று பாடசாலைக்கு வரவில்லை.
நான் ..........................................................................
2) புறாக்கள் வானில் பறந்து சென்றன.
கிளி ..........................................................................

04. 1) பின்வரும் பழமொழி/மேற்கோள்கள் குறித்துநிற்கும் தொழிலை எழுதுக,
* சீரைத் தேடின் ஏரைத் தேடு.
* தன்கையே தனக்கு உதவி.
* உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை..........................................
2) முயற்சி திருவினையாக்கும் என்பது உணர்த்தும் கருத்துக்கு பொருத்தமாகக் கூறக்கூடிய உயிரினம் எது?
..........................................................................

05. பொருத்தமான சொற்களை கொண்டு இடைவெளிகளை நிரப்புக,
1) சுற்றுலாப்பயணி ஒருவர் கண்டிக்குச் செல்லும் .................................. எதுவெனக் கேட்டார்?
(வலி, வளி, வழி)
2) .................................. பார்த்தவன் நகரக் காவலரால் பிடிக்கப்பட்டான்.
(உலவு, உளவு, உழவு)

06. பின்வரும் தமிழ்ச் சொற்களுக்கான சிங்கள உச்சரிப்பைத் தமிழில் எழுதுக,
1) துள்ளிப் பாயுங்கள் ..........................................
2) கண்களை மூடுங்கள் ..........................................
3) எனக்கு தேநீர் தாருங்கள் ..........................................

07. பின்வரும் சிங்களச் சொற்களுக்கான கருத்தை எழுதுக,
1) அப்பே பவுள ..........................................
2) மட்ட வத்துர டிகக் தென்ன ..........................................

08. பின்வரும் தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலப்பதத்தினை எழுதுக,
1) நடத்தை ..........................................
2) நான் வெளியே போய்க் கொண்டிருக்கிறேன் ..........................................
3) ஒடை ..........................................

09. பின்வரும் ஆங்கிலப்பதத்தின் கருத்தை எழுதுக.
1) Green ..........................................
2) Don't Shout Please ..........................................

10. மிகச்சரியான விடையின் கீழ்க்கோடிடுக.
1) காடுகள் தீப்பற்றினால் தொடர்புகொண்டு அறிவிக்கவேண்டிய தொலைபேசி இலக்கம்
1) 1919 2) 1991 3) 218 4) 9999

2) நீரில் கரையும்போது நீரின் நிறத்தை மாற்றக்கூடிய பொருள்,
1) சீனி 2) கருப்பட்டி 3) உப்பு 4) வினாகிரி

3) பயிர்ச்சாடிகளில் மண்ணை நிரப்பும் சரியான முறை,
1) சாடியின் அரைவாசிவரை மண்ணிடல்.
2) சாடியின் மேல்வாய் வரை மண்ணிடல்.
3) சாடியின் மேல்வாயிலிருந்து 5 cm அளவு குறைவான அளவு மண்ணிடல்.
4) சாடியின் கால்வாசி வரைக்கும் மண்ணிடல்.

4) பின்வரும் பூக்களில் எட்டு இதழ்களை உடைய பூ,
1) மயிர்க்கொன்றை. 2) கரணைப் பூ.
3) சீனியாஸ். 4) திருவார்த்திப் பூ.

5) முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து, பாலூட்டும் விலங்கு,
1) பிளாற்றிப்பசு. 2) சுறா.
3) வௌவால். 4) கிவி.

6) உற்பத்தியின் போது உணவின் போசணைப்பெறுமானம் இழக்கப்படும் சந்தர்ப்பம் எது?
1) அறுவடை செய்யப்பட்டு நீண்டகாலம் வயலில் குவித்து வைக்கப்படல்.
2) நீண்டகாலம் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
3) நீண்ட நேரம் அவித்தல்.
4) உணவுப் பொருட்கள் நசுங்குதல்.

7) பின்வருவனவற்றில் கலப்பட உணவு அல்லாதது,
1) பாலில் நீரைக்கலத்தல்.
2) மிளகில் பப்பாசி விதை கலத்தல்.
3) பாற்சோற்றில் பயறு சேர்த்தல்.
4) மஞ்சள் தூளில் கோதுமை மா கலத்தல்.

8) இலங்கையின் அழகிய காடுகளில் படகமுவ வனம் அமைந்திருப்பது,
1) முல்லைத்தீவில். 2) குருநாகலில்.
3) இரத்தினபுரியில். 4) பாணமயில்.

9) அண்மையில் உலகை அச்சுறுத்திய பன்றிக்காய்ச்சலுக்கு காரணமான நுண்ணங்கி,
1) பற்றீரியா. 2) பங்கஸ். 3) வைரஸ். 4) எலி.

10) இலங்கையில் அதிகளவு சனத்தொகை கொண்ட மாவட்டம்,
1) கொழும்பு. 2) கம்பஹா. 3) கண்டி. 4) அநுராதபுரம்.

11) சிலந்தி வலைபின்னப் பயன்படுத்தும் பொருள் உற்பத்தியாவது அதன் எப்பகுதியில் இருந்து,
1) வாய். 2) பல். 3) வயிறு. 4) உணர்கொம்பு

12) உலகில் அதிகளவான மக்கள் சீனமொழியான மண்டரின் மொழியை பேசுகின்றனர். உலகில் பொருளாதாரத்துறையில் அதிக வளர்ச்சியை சீனா காட்டி வருகிறது. இதன் நாணயம்,
1) யென். 2) டொலர். 3) யூரோ. 4) யுவான்.

13) தடித்தகாட்போட்டில் வெட்டி எடுக்கப்பட்ட துவாரங்களின் ஊடாக மையைப்பூசுவதன் மூலம் ஆக்கப்படும் சித்திரம்,
1) கிறபிக் அச்சுப்பதித்தல். 2) ஸ்ரென்சில் அச்சுப்பதித்தல்.
3) ரெம்ளற் அச்சுப்பதித்தல். 4) லித்தோ அச்சுப்பதித்தல்.

14) சூரியகாந்தி வித்தின் நிறம்,
1) கருமை. 2) சிவப்பு.
3) மஞ்சள். 4) கபிலம்.

குறிப்பு: இவ்வினாத்தாளுக்குரிய விடைகள் நாளை வெள்ளிக்கிழமை வெளிவரும்.

15) இந்தச் சித்திரம் காணப்படுவது,
1) தலதா மாளிகையில்.
2) மிகிந்தலையில்.
3) ருவான் வெலிசாயவில்.
4) சீகிரியாவில்.



16) இந்தக் கொண்ணிலைக்குரிய கட்டளைச் சொல் யாது?
1) ஆயத்தம் செய்.
2) செல்க.
3) குறிப்பிற்குச் செல்க.
4) வெடியோசை.



17) யோகாசனம் மூலம் தடுக்கப்படும் நோய் அல்லாதது,
1) நீரிழிவு. 2) இதய நோய்கள்.
3) சிக்குன் குனியா. 4) ஆஸ்த்துமா.

18) அச்சு ஊடகம் பற்றிய பிழையான தகவல்,
1) இது எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டது.
2) எழுத, வாசிக்கத் தெரிந்தவர்களே இதன் மூலம் தகவல்களைப் பெறலாம்.
3) பத்திரிகைகள், சுவரொட்டிகள் என்பன அச்சு ஊடகமாகும்.
4) இன்று உலகில் உள்ள மிகவும் சக்தி வாய்ந்த ஊடகமாகும்.

11. தரப்படும் சொற்களைக்கொண்டு இடைவெளி நிரப்புக,
ஜப்பான், சீனா, வடகீழ் பருவக்காற்று, நவம்பர்-பெப்ரவரி, இந்தியா, மிகிந்தலை, மஸ்ஜித், பொலன்னறுவை, தென்மேல் பருவக்காற்று, மே-செப்ரெம்பர்.
1) கண்டி, அநுராதபுரம் .................................. என்பன கலாசார முக்கோண பிரதேசங்களாகும்.
2) தென்மேல் பருவக்காற்று .................................. காலப் பகுதியில் வீசும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொடிகாமத்தில் உள்ள எனது நண்பனின் அப்பாவின் ஆண்டுத் திவசத்துக்குச் சென்று விட்டு மோட்டார் சைக்கிளில் திரும்பிக் கொண்டிருந்தேன். ஒருபோன் வருகிறது. உடனே வீதி ஓரமாக மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டுப் போனை எனது சேட் பொக்கெற்றிலிருந்து எடுத்து யார் என்று கதைக்க ஆரம்பித்தேன்.

எங்கே நிற்கிறாய்? ஒரு பெண் குரல்... யார் என்று கேட்டேன் நான்தான் தம்பி உனது பெரியம்மா எனச் சொல்ல, ஓ... என்ன விசயம் என்று கேட்க, ஒருக்கால் வீட்டை வந்து போயேன் என்று சொன்னா. என்ன விசயம் என்று மறு படியும் கேட்டேன். நேரில் வா சொல்கிறேன் என்று சொல்லிப் போனை பெரியம்மா துண்டித்து விட்டா.

கொடிகாமத்தில் இருந்து வந்த களைப்பைப் பாராமல் வலிகாமம் பகுதியில் இருக்கும் பெரியம்மா வீட்டுக்குச் சென்றேன். என்னைக் கண்டதும் அங்கே நின்ற எல்லோரின் கண்ணில் இருந்தும் கண்ணீர் வந்து கொண்டிருந்தது.

என்ன நடந்தது என்று கேட்டேன். பெரியம்மா உடனே உள்ளே வாவன் என்று அக்கம் பக்கம் பார்த்துச் சொல்லிவிட நானும் உள்ளே பதற்றத்துடன் சென்றேன்.

இதைப் பாரண்டா, பெரியப்பாவின் மண்டையை பக்கத்து வீட்டுப் பெடியன் கொட்டனாலே அடித்து உடைத்து விட்டான். இப்ப ஆஸ்பத்திரியிலே மறிச்சுப் போட்டாங்கள். ஏன் என்ன நடந்தது என்று கேட்க... வேறு என்ன என்ர மகள் கம்பசில படிக்கப் போய் பேஸ் புக்கில தனது படத்தையும் விலாசத்தையும் போன் நம்பரையும் கொடுத்து வைத்ததாலே பிரச்சினை வந்திட்டுதடா - என்றார். பிரச்சினை என்ன என்று கேட்க பிரச்சினையோ... வெளிநாட்டில் வேலை பார்க்கிற ஒருவன் இவளது பேஸ்புக்கில் இவளைத் தொடர்பு கொண்டு தன்னைத் திருமணம் செய்து கொள்ளுமாறு வலுக்கட்டாயப்படுத்தி வருகிறான்.

அவன் யாரென்றும் தெரியாது. இவளது போன் நம்பரில கதைக்கிறான். பக்கத்து வீட்டுப் பெடியனுக்கு அவனைத் தெரியும். ஆதலால் பக்கத்து வீட்டுப் பெடியனுடன் அவன் கதைத்து என்ர மகளோடு பேசும்படியும் சொல்லியிருக்கிறான். அவனும் அடிக்கடி என்ற மகளை வீதியில் மறிக்கிறதும் அவனைத் திருமணம் செய்யும்படியும் வற்புறுத்துகிறதும் நாளுக்குநாள் கூடிக் கொண்டே செல்கிறது.

இதனைக் கண்ட என்ர அவர் போய்க் கேட்டதும் என்ன ஏது என்று சொல்லாமல் தலையில் கொட்டனால் அடித்துவிட்டான்.

நீங்கள் ஏன் பொலிஸுக்குப் போகவில்லை என்று கேட்க... பொலிஸுக்குப் போகப் பயமாக இருக்கிறது. பொலிஸுக்கு முறைப்பாடு செய்தால் என்ன நடக்கும் என்று தெரியுமோ என்று வெருட்டுகிறான். என்ன நீங்கள் எந்த உலகத்திலே இருக்கிறியள். பேஸ் புக்கில் பிரச்சினைகள்வரும் என்று தெரியாதா என்றேன். எனக்கு என்னடா விளங்கும். பேஸ்புக் என்றால் ஏதோ ஒரு படிக்கிற புத்தகம் என்று நினைத்தேன். பிறகுதான் தெரிந்தது. அது இணையத்தள வசதி என்று. படிச்ச இவளுக்கு என்ன தெரியும். இப்படி மாட்டுப்பட்டுப் போய் இருக்கிறாள்.

சரி சரி நடந்தது நடந்து போச்சு. மகளிட்ட போனைக் கொடுக்காதேங்கோ. இனி ஏதாவது நடந்தால் பார்ப்பம் என்று சொல்லிவிட்டு பெரியம்மா வீட்டை விட்டு வெளிக்கிட்டுச் சென்றேன். அந்தப் பக்கத்து வீட்டுப் பெடியன் வீட்டு போட்டிக் கோவில் நின்று கொண்டு என்னைப் பார்த்துக் கொண்டு நின்றான். எனக்குப் பயமாக இருந்தது. அவன் ஏதோ தன்னைக் கட்டுப்படுத்த வந்தனான்போல என்னைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

அவனைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் மோட்டார் சைக்கிளை வேகமாகஎடுத்துக்கொண்டு வந்தேன். பார்த்தியளோ உந்த பேஸ் புக்காலை வந்த வினையை. இது உலகத்திலை பேசுகிற ஒரு விடயம். பேஸ்புக் சம்பந்தமாக எத்தனை குற்றங்கள் நடந்திருக்கின்றன என்பது நாளுக்கு நாள் அதிகரித்துக் காணப்படுகிறது. பேஸ்புக்கைப் பயன்படுத்துபவர்களுக்குத் தெரியவில்லையா ஆழம் தெரிந்தும் காலை விட்டு விட்டு எடுக்க முடியாமல் அவஸ்தைப்படுகிறவர்களில் கூடுதலானவர்கள் பெண்கள்தான்.

ஆகவே, பெண்கள்தான் இந்த பேஸ்புக்கைப் பயன்படுத்தும் போது கவனமாக இருக்க வேண்டும் என்று எனக்குள்ளே சொல்லிக் கொண்டு மோட்டார் சைக்கிளின் வேகத்தைக் கூட்டிக் கொண்டு கொக்குவில் பகுதிக்கு வரும்போது அங்கே இருந்த நெற்கபேயில் இருந்து பல இளம் பெண்கள் வெளியேறிக் கொண்டிருந்த தைப் பார்த்துக் கொண்டு வந்தேன்.

# உடுவில் பிரதேச செயலக கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், மே 19

உடுவில் பிரதேச செயலகக் கட்டடத் திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

உடுவில் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாகப் பொதுநிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் டபிள்யூ.டி. ஜோன் செனவிரத்ன, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்துகொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, பொதுநிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் பிரதி அமைச்சர் விஜய தகநாயக்க, அமைச்சின் செயலாளர் பி.அபயக்கோன், மேலதிக செயலாளரும் 'ஸ்கப்' திட்டத்தின் பணிப்பாளருமான ஜே.டடல்லகே, யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோரும் கலந்து கொள்வர். (ற)

# உரிமை கோரப்படாத சைக்கிள்கள்

யாழ்ப்பாணம், மே 19

உரிமைகோரப்படாத 13 சைக்கிள்கள் ஏ.ஆர்.-209-11 இலக்க வழக்கின் மூலம் சுன்னாகம் பொலிஸாரினால் மல்லாம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன என மல்லாகம் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

இந்தச் சைக்கிள்களின் உரிமையாளர்கள் உரிய ஆவணங்களைக் காண்பித்து மல்லாகம் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகத்தில் இவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

# 'யுனிசெவ்' நிதியுதவித் திட்டங்கள் பயனாளிகள் தெரிவு மும்முரம்

நாவற்குழி, மே 19

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் 'யுனிசெவ்' அமைப்புடன் இணைந்து யாழ். மாவட்டத்தின் பிரதேச செயலர் பிரிவுகளில் மேற்கொள்ளும் திட்டங்களுக்கான பயனாளிகள் தெரியப்பட்டு வருகின்றனர்.

எதிர்வரும் 25 ஆம் திகதியுடன் பயனாளிகள் தெரிவு நிறைவு செய்யப்படவுள்ளது.

பிரதேச செயலர்களின் அறிவுறுத்தலின் பேரில் சமூக சேவைகள் அதிகாரிகள், சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள், தலைமைப்பீட நிர்வாக கிராம அலுவலர்கள் ஆகியோர் இணைந்து பயனாளிகளைத் தெரிவு செய்து வருகின்றனர்.

சுயதொழில் மானியக் கொடுப்பனவு 25 ஆயிரம் ரூபா, மாற்று வலுவுள்ளோர் முச்சக்கரவண்டி, சக்கரநாற்காலிகள் ஆகியவற்றுக்கு 15 ஆயிரம் ரூபா மாற்று வலுவுள்ளோர் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்குச் சென்று வருவதற்கு ஆயிரத்தி 500 ரூபா ஆகியன இந்தத் திட்டங்களில் வழங்கப்படவுள்ளன.

(ம-121)

---

3) உலகில் மக்கள் தொகை அதிகமாக உள்ள நாடு .............................. ஆகும்.

4) இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தை அமைக்க .............................. உதவி செய்த நாடாகும்.

12. பின்வரும் பூக்களின் பெயர்களை எழுதுக.




(......................) (......................) (......................) (......................)

13. மிகச்சரியான விடையினை எழுதுக.

1) 9, 2, 1, 8 ஐக் கொண்டு உருவாக்கப்படும் ஆயிரமாமிடத்தில் 2 வரக் கூடிய நான்கிலக்க எண் ஒன்று தருக? ..............................

2) ஹம்தியிடம் 402 ரூபாவும், பஸ்மியிடம் 296 ரூபாவும் உண்டு. ஹம்தி எவ்வளவு பணத்தொகையை பஸ்மிக்கு கொடுத்தால் இருவரிடமும் உள்ள தொகை சமனாகும்? ..............................


3) 3 மணித்தியாலம் 45 நிமிடம் எத்தனை நிமிடம் ? ..............................

4) பிற்பகல் 6 கழித்து 45 நிமிடம் என்பதை நியம நேரத்தில் குறித்துக்காட்டுக.


☐☐ ☐☐


5) 2.5l கொண்ட பானம் 250ml கொண்ட பாத்திரத்தில் ஊற்றப்பட்டது எனின், அது எத்தனை பாத்திரத்தில் ஊற்றப்படலாம்? ..............................

6) 0.4, 0.8, 1.2, 1.6, ☐ பெட்டிக்குள் வரவேண்டிய தசம எண்ணை எழுதுக. ..............................

7)



சுற்றளவைக் காண்க, ..............................

8)

இங்கு பெறக்கூடிய முக்கோணங்கள் எத்தனை?
..............................

9) இங்கு பெறக்கூடிய சதுரங்கள் எத்தனை?

..............................

10) அப்ரானின் வீட்டிலிருந்து பாடசாலைக்குள்ள தூரம் 2 km 800 m ஆகும். அவன் 900m நடந்தும் மீதியை பேருந்து வண்டியிலும் வருவான் எனின், அவன் பேருந்து வண்டியில் பயணம் செய்ததூரம் எவ்வளவு?
..............................

11) 12×3 | 18+9 | 9×1 | 96/12

என்பதை இறங்கு வரிசைப்படுத்துக.
..............................

12) தேர்தல் ஒன்றில் A,B,C,D என்ற 4 அபேட்சகர்கள் பெற்ற வாக்குகள் பின்வருமாறு:

| அபேட்சகர்கள் | பெற்ற வாக்கு |
|---|---|
| A | 8438 |
| B | 7904 |
| C | 4357 |
| D | 4081 |

13) A அபேட்சகர் பெற்ற வாக்கு எந்த இரு அபேட்சகர் பெற்ற வாக்குகளுக்கு சமனாகும்?
..............................

14) A, B அபேட்சகர்கள் பெற்ற வாக்குகளிடையேயான வித்தியாசம் எத்தனை?
..............................

15) 4 அபேட்சகர்களும் பெற்ற மொத்த வாக்குகள் யாது?
..............................

15. "நாம் சென்ற கல்விச்சுற்றுலா" எனும் தலைப்பில் நான்கு சொற்களுக்கு குறையாத கருத்துள்ள ஆறு வசனம் எழுதுக? (இவ்வினாவிற்கான விடையினை வேறுதாளில் எழுதவும்)

முற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலிபான்களுடன் அமைதிப் பேச்சு அமெரிக்கா காட்டும் முனைப்பு

காபூல், மே 19

ஆப்கானிஸ்தானில் பன்னாட்டுப் படைகளுக்கு பெரும் சவால்களை எழுப்பி வரும் தலிபான் தீவிரவாதிகளுடன் அமெரிக்கா நேருக்கு நேர் அமைதிப்பேச்சு நடத்தி சுமுக தீர்வு காண முடிவு செய்துள்ளது.

இந்த மே மாதம் 2ஆம் திகதி பாகிஸ்தானின் அபோதாபாத் நகரில் அல்குவைதா தீவிரவாதத் தலைவர் ஒசாமா பின்லேடன் அமெரிக்க கமண்டோக்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். உலக நாடுகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்திய பின்லேடன் மறைவுக்கு பின்னர் தலிபான்களுடன் அமைதிப் பேச்சு வார்த்தை நடத்துவதில் அமெரிக்கா முனைப்புக் காட்டியுள்ளது.

தலிபான்களின் தலைவர் முல்லா ஓமருக்கு நெருக்கமான நபர்களுடன் கத்தார் மற்றும் ஜேர்மனியில் 3 அமைதி பேச்சுக்களுக்கு அமெரிக்கா ஏற்பாடு செய்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்லேடன் மறைவால் தலிபான்கள் அமைதிப்பேச்சு அதிக உத்வேகத்தை தந்துள்ளதாக பிரிட்டன் மற்றும் அமெரிக்க அதிகாரிகள் நம்புகிறார் கள். ஆப்கானிஸ்தானில் வருகிற ஜூன் மாதம் முதல் அமெரிக்கப் படைகள் குறைக்கப்படவிருக்கின்றன.

ஆப்கானிஸ்தானில் உள்ள [illegible] வரையிலான அமெரிக்கப் படை வீரர்கள் திரும்பி அழைக்கப்படுகின்றனர். ஆப்கானிஸ் தானில் 10 ஆயிரம் பிரிட்டன் வீரர்கள் உள்ளனர். இந்த வீரர்கள் மத்திய மற்றும் தெற்கு ஹெல்மாண்ட் பகுதியில் இருக்கிறார்கள்.

தலிபான்களுடன் நடைபெறும் பேச்சு குறித்து அமெரிக்க அதிகாரிகள் கூறுகையில், ''அமைதிப்பேச்சு தொடக்க நிலையிலேயே உள்ளது'' என்றனர். இந்த ஆண்டு அமெரிக்க கொள்கையில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இதனால் தலிபான்களுடன் அமெரிக்கா நேரடித் தொடர்பு மேற்கொள்கிறது என காபூலில் உள்ள மேற்கத்திய அதிகாரி உறுதி படத் தெரிவித்தார். குவாண்டனமோ சிறையில் உள்ள 20 முக்கிய தலிபான் தலைவர்களை அமெரிக்கா விடுவிக்க வேண்டும் எனத் தலிபான்கள் வலியுறுத்துகிறார்கள்.

அதே நேரத்தில் ஆப்கானிஸ்தானில் ஜனாதிபதி ஹமீத் கர்சாய்க்கு எதிரானவர்கள் அமெரிக்க நடவடிக்கையை கடுமையாக விமர்சிக்கிறார்கள்



அமெரிக்கா வந்திருந்த ஜோர்தான் மன்னர் இரண்டாம் அப்துல்லா வாஷிங்டனில் உள்ள ஜனாதிபதி மாளிகையான ரோஸ் மாளிகையில் ஜனாதிபதி பராக் ஒபாமாவைச் சந்தித்துப் பேசினார்.

# லிபியத் தூதரக அதிகாரிகளை வெளியேற்ற கனடாவில் போராட்டம்

ஒட்டாவா, மே 19

கனடாவின் ஒட்டாவா நகரில் உள்ள 5 லிபிய தூதரக அதிகாரிகளை வெளியேற்றப் போவதாக கனடா அறிவித்தது. கனடா ஒட்டாவா நகரில் லிபியா தூதரகம் உள்ளது.

இந்த தூதரகச் செயற்பாடு திருப்திகரமான நிலையில் இல்லை. லிபியாவில் அப்பாவி மக்களை கேணல் கடாபி கொன்று வரும் நிலையில் அந்த தூதரகம் கனடாவில் செயற்படுவது சரியானதாக இல்லை என கனேடிய அரசு கருதுகிறது.

எனவே தங்கள் நகரில் உள்ள லிபியத் தூதரக அதிகாரிகளை வெளியேற்றும் முடிவுக்கு வந்துள்ளதாக அரசு இணையத் தளத்தில் அறிக்கை வெளியிட்டுள்ளது. லிபியத் தலைநகர் திரிபோலியுடன் கனடா ஏற்கனவே தனது செயற்பாடுகளை நிறுத்திவிட்டது.

# அல்குவைதாவின் தற்காலிகத் தலைவர்

இஸ்லாமபாத், மே 19

அல்குவைதா பயங்கரவாத இயக்கத்தின் தற்காலிக தலைவராக எகிப்து நாட்டு முன்னாள் சிறப்பு படை அதிகாரி சைபல் ஆதல் தேர்வு செய்யப்பட்டுள்ளார். முன்னாள் பொலிஸ் அதிகாரி பயங்கரவாத கும்பலுக்கு தலைவராகி இருப்பது சலசலப்பை எற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானின் அபோதாபாத் மாளிகையில் பதுங்கியிருந்த அல்குவைதாத் தலைவர் ஒசாமா பின்லேடன் அமெரிக்க படைகளின் அதிரடி வேட்டையால் கடந்த 2 ஆம் திகதி தேதி சுட்டுக் கொல்லப்பட்டார். இதனையடுத்து சைபல் ஆதல் தற்காலிக தலைவராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அல்குவைதாவின் அடுத்த தலைவராக ஜவாஹிருல்லா தான் தேர்வு செய்யப்படுவார் எனப் பரவலாக பேசப்பட்டது. இந்த நிலையில் சைபல் தற்காலிகமாக தேர்வு செய்யப்பட்டுள்ளார். ஒசாமா பலியான பிறகு, துபாயில் இருந்து வெளியாகிய பத்திரிகை ஒன்றில் ஒசாமா மறைவிடம் குறித்து அமெரிக்காவுக்கு ஜவாஹிருல்லா தகவல் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் ஒசாமா - ஜவாஹிருல்லா இடையே யார் தலைவராக இருப்பது என்பது தொடர்பாக போட்டி நிலவியதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஜவாஹிருல்லாவுக்கு பதிலாக சைபல் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

# பாகிஸ்தானில் தீவிரவாதிகள் தாக்குதல்

பெஷாவர், மே 19

பாகிஸ்தானில் பெஷாவர் நகரின் புறநகர் பகுதியில் பாதுகாப்பு படை வீரர்கள் சோதனை செய்து கொண் டிருந்தனர். சோதனை நிலையத்தினுள் அதிரடியாக நுழைந்த ஆயுதம் தாங்கிய 70 க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள், பாதுகாப்பு வீரர்கள் மீது சரமாரியாக துப்பாக்கித் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 2 பாதுகாப்புப் படை வீரர்கள் பலியானார்கள். மேலும் 5 பேர் படுகாயம் அடைந்தனர்.


# மரண அறிவித்தல்



*சீவரட்ணம் சீவரஞ்சன் (ரஞ்சன்)*

**(உரிமையாளர்- றெஜி றெஸ்ட்டோரன்ட், இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி)**

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சீவரட்ணம் சீவரஞ்சன் (ரஞ்சன்) 17.05.2011 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இந்திராவின் அன்புக் கணவர் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தகவல்:**
**இந்திரா (மனைவி).**

**இராமலிங்கம் வீதி,**
**திருநெல்வேலி.**

(48,19,24)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபியாவில் தொடர் குண்டு மழை இரு அமைச்சகங்கள் தீக்கிரை

திரிபோலி, மே 19
லிபியாவின் தலைநகர் திரிபோலி மீதான நேட்டோ விமானப் படைகளின் குண்டு வீச்சு வலுத்துள்ளது. கடாபி குடியிருப்பு வளாகத்தின் அருகில் உள்ள இரு அமைச்சகங்கள், குண்டு வீச்சில் தீக்கிரையாகின.

இந்நிலையில் கடாபி அமைச்சரவையின் எண்ணெய் வளத்துறை அமைச்சர் தனது பதவியில் இருந்துவிலகி, எதிர்த் தரப்பில் சேர்ந்து கொண்டார்.

லிபியாவில் கடாபி ராணுவத்தின் தாக்குதலைத் தடுக்கும் வகையில், நேட்டோ தனது தாக்குதலை விரிவுபடுத்த வேண்டும் என்று சமீபத்தில் பிரிட்டன் கேட்டுக் கொண்டது. இதையடுத்து கடந்த இரு நாள்களாக, தலைநகர் திரிபோலியின் பல பகுதிகளிலும் நேட்டோ விமானப் படைகள் குண்டுகளை வீசித் தாக்கி வருகின்றன.

இந்நிலையில், நேற்று கடாபி குடியிருப்பு வளாகத்தின் அருகில் உள்ள ஊழல் தடுப்பு அமைச்சகம் மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சகம் ஆகியவற்றின் மீது நேட்டோ குண்டுகளை வீசியதில், இரு அமைச்சகங்களும் தீக்கிரையாகின.

இச்சம்பவத்தில் ஊழியர்கள் சிலர் காயம் அடைந்ததாகத் தெரிவித்துள்ள லிபிய அரசு, எதிர்த்தரப்புதான் நேட்டோவுக்குத் தவறான வழிகாட்டி வருவதாகக் குற்றம் சாட்டியுள்ளது. இதற்கிடையில், லிபியாவின் தேசிய எண்ணெய் கோர்ப்பிரேஷன் துறை அமைச்சர் ஷாக்ரி கனேம் நேற்று முன்தினம் தனது பதவியில் இருந்து விலகி, எதிர்த்தரப்பில் சேர்ந்து விட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவில் படித்த இவர், எண்ணெய் வளக் கூட்டமைப்பு நாடுகளின் கூட்டத்தில் லிபியா சார்பில் கலந்து கொண்டவர்.

அவர் தற்போது எங்கிருக்கிறார் எனத் தெரியவில்லை என்று எதிர்த்தரப்பு தெரிவித்துள்ளது. அவர் டுனீசியாவுக்குச் சென்றிருக்கக் கூடும் என்று தகவல்கள் கூறுகின்றன.

அதேநேரம், ரஷ்யத் தலைநகர் மாஸ்கோவில் நேற்று லிபிய அரசின் பிரதிநிதிகளுடன், ரஷ்ய அதிகாரிகள் பேச்சு நடத்தினர். அதைத் தொடர்ந்து பெங் காசியில் உள்ள எதிர்த் தரப்புப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தினர்.

## ஒசாமாவைக் கொல்ல உதவிய ஹெலியின் பாகங்களை ஒப்படைக்க பாக். சம்மதம்

இஸ்லாமாபாத், மே 19
பின்லேடனுக்கு எதிரான நடவடிக்கையின் போது சேதமடைந்த அமெரிக்க ஹெலிகொப்டரின் வால் பகுதியை மீண்டும் ஒப்படைக்க பாகிஸ்தான் சம்மதித்துள்ளது.

இத்தகவலை தற்போது பாகிஸ்தான் சென்றுள்ள அமெரிக்க செனட்டர் ஜான் கெர்ரி கூறியதாக அமெரிக்க ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

மே 2ஆம் திகதி இஸ்லாமாபாத் அருகேயுள்ள அபோதாபாத்தில் தங்கியிருந்த பின்லேடன் மீது தாக்குதல் நடத்த அமெரிக்க அதிரடிப் படையின் வீரர்கள் ஹெலிகொப்டர்களில் வந்தனர்.

பின்லேடனை சுட்டுக்கொன்ற பின்னர் திரும்பிச் செல்லும் போது அவர்கள் வந்த ஹெலிகொப்டர்களில் ஒன்று செயல்படவில்லை. இதையடுத்து அந்த ஹெலிகொப்டரின் அதிநவீன தொழில்நுட்பம் மற்ற நாடுகளுக்குத் தெரிந்துவிடக் கூடாது என்பதால் அதை அமெரிக்க வீரர்கள் வெடிக்கச் செய்தனர் என்று கூறப்படுகிறது.

இதில் அதன் வால் பகுதி மட்டும் பின்லேடன் தங்கியிருந்த வீட்டின் சுற்றுச்சுவரில் தொங்கியபடி கிடந்தது. இந்நிலையில் ஹெலிகொப்டரின் அந்த உடைந்த பகுதியை தங்களிடம் ஒப்படைக்குமாறு பாகிஸ்தானிடம் அமெரிக்கா கேட்டுக்கொண்டது.

அதை சீனாவிடம் பாகிஸ்தான் வழங்கிவிடும் என்ற அச்சத்தின் காரணமாகவே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. தற்போது அதை அமெரிக்காவிடம் ஒப்படைக்க பாகிஸ்தான் சம்மதித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## பிரிட்டிஷ் மகாராணியை இலக்கு வைத்து குண்டு

டப்ளின், மே 19
மகாராணி எலிசபெத் வருகைக்கு முன்னதாக அயர்லாந்தில் பஸ் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த வெடி குண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் அதி காலை 2 மணியளவில் டப்ளின் அருகேயுள்ள கில்டேர் கவுண்டிக்கு உட்பட்ட மேநூத் புற நகர்ப்பகுதியில் ஒரு பஸ்ஸுக்குள் வைக்கப்பட்டிருந்த வெடி குண்டே உரிய நேரத்தில் கண்டு பிடிக்கப்பட்டதாக அயர்லாந்து ராணுவம் தெரிவித்துள்ளது.

ஹோட்டல் ஒன்றுக்கு அருகே நிறுத்தப்பட்டிருந்த பேருந்தில் இந்த வெடிகுண்டு இருந்ததாகவும், பின்னர் அது பாதுகாப்பாக எடுத்துச் செல்லப்பட்டு, செயலிழக்கச் செய்யப்பட்டதாகவும் ராணுவத்தின் செய்தித் தொடர்பாளர் கூறினார்.

மகாராணி எலிசபெத் 4 நாள் சுற்றுப்பயணமாக அயர்லாந்து வந்துள்ளார். இந்நிலையில் அவரது வருகைக்கு முன்னதாக அங்கு வெடிகுண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

## மத்திய கிழக்கு நாடுகளில் அரசியல் மறுசீரமைப்பு

மத்தியகிழக்கு நாடுகளில் வன்முறைக்கு எதிராக மாற்றம் கொண்டு வருவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவித்தார்.

குறிப்பாக, மனித உரிமைகள், அரசியல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு குறித்து தேவையான நடவடிக்கைகள் எடுக்க தீவிர முயற்சி செய்ய உள்ளதாக வெள்ளை மாளிகையில் நடந்த நிகழ்ச்சியில் அதிபர் ஒபாமா கூறினார்.

இது குறித்து வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் கார்னீ பத்திரிகையாளர்களிடம் அளித்த பேட்டியில் தீவிரவாதம், வன்முறை இவற்றைகளையும் அதற்கான எல்லா சாதகமான நடவடிக்கைகள் மேற்கொள்ள உள்ளதாகவும் முக்கியமாக அரசியல், மனிதஉரிமைகள் ஆகியவற்றில் மறுசீரமைப்பு ஏற்படுத் தப்படும் எனவும் தெரிவித்தார்.

சிறப்பான கௌரவிப்பு...



அயர்லாந்து நாட்டுக்கு முதன் முதலாக அரசு முறைப் பயணமாக வந்திருந்த இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத்தை (வலது) அந்த நாட்டு ஜனாதிபதி மெர்ரி மெக்கலஸி, ஆன் உச்டிராயின் நகரில் வரவேற்றார்.

# சொத்து முழுவதையும் நாட்டுக்கே வழங்க எகிப்து ஜனாதிபதி முபாரக் இணக்கம்

கெய்ரோ, மே 19
''மக்களுக்கு நான் எந்தத் தீங்கு செய்திருந்தாலும், என்னை மன்னிக்க வேண்டும். என் சொத்துக்கள் முழுவதையும் நாட்டுக்குத் தந்து விடுகிறேன்'' என எகிப்தின் முன்னாள் அதிபர் ஹோஸ்னி முபாரக், அந்நாட்டின் ராணுவ ஆட்சியாளரிடம் கோரியிருக்கிறார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

எகிப்து அதிபராக முபாரக் இருந்தபோது அவரும், அவரது குடும்பத்தாரும், சட்ட விரோதமாக கோடிக்கணக்கில் சம்பாதித்தனர். மக்கள் புரட்சிக்குப் பின், அவர் மீதான பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் முபாரக், அவரது மனைவி சன்னே முபாரக், அவரது மகன்கள், கமால் மற்றும் அலா ஆகிய நான்குபேரும் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களில் முபாரக்கும் அவரது மனைவியும், சினாய் தீபகற்பத்தில் உள்ள ஷரம் எல் ஷேக் என்ற நகரில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், இதுவரை மக்களுக்கு நான் செய்த தீங்குகளுக்கு என் அதிகாரிகள் எனக்குத் தந்த தவறான தகவல்களே காரணம்; நான் பொறுப்பல்ல. அதனால் எனக்குப் பொது மன்னிப்பு வழங்க வேண்டும். அதற்கு ஈடாக என் சொத்துக்கள் அனைத்தையும், நாட்டுக்குத் தந்து விடுகின்றேன் என்று ராணுவ ஆட்சியாளரிடம் முபாரக் கோரியிருப்பதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

அதேநேரம் சமீபத்தில் கைதாகி, தற்போது சிகிச்சை பெற்று வரும் முபாரக்கின் மனைவி சுசன்னே முபாரக் கும், தனது சொத்துக்களை நாட் டுக்குத் தந்து விடுவதாகக் கூறியுள்ளார்.

முபாரக் ஆட்சியில், ஊழலில் ஈடுபட்ட அமைச்சர்கள் பலர் மீதான குற்றச்சாட்டுகள், விசாரிக்கப்பட்டு அவர்களுக்கு சிறைத் தண்டனை வழங்கப் பட்டு வருகின்றது.

முபாரக்கின் மீதான ஊழல் மற்றும் மக்கள் புரட்சியின் போது பொலிஸாரை ஏவி மக்களைக் கொன்றது ஆகிய குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால், அவருக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை கிடைக்கும் என்று கூறப்படுகிறது.

அதேவேளை இதில் இருந்து தப்பிப்பதற்கே, முபாரக் இது போன்று நாடகம் ஆடுகிறார் என்ற கருத்து, தற்போது எகிப்தில் பரவலாகக் காணப்படுகிறது.

பொது மன்னிப்பு குறித்த முபாரக்கின் கடிதங்கள் விரைவில் வெளியாகும் எனவும் பொது மன்னிப்பு வழங்கப்பட்டால், அவருக்கும் அவரது மனைவிக்கும் மட்டுமே கிடைக் கும் ... பில்லை எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பாக் - இந்தியா இடையே அணு ஆயுத சண்டை நடக்காது

விஞ்ஞானி கருத்து

நியூயோர்க், மே 19
இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே அணு ஆயுத சண்டை நடப்பதற்கு வாய்ப்பேயில்லை என, பாகிஸ்தான் அணு விஞ்ஞானி ஏ.கியூ.கான் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் அணு விஞ்ஞானி ஏ.கியூ.கான், ஈரான், லிபியா, சிரியா போன்ற நாடுகளுக்கு அணு ஆயுத ரகசியங்களை விற்றதாக குற்றம் சாட்டப்பட்டது. முன்னாள் அதிபர் முஷாரப்பால் மன்னிப்பு அளிக்கப்பட்ட கான் தெரிவித்ததாவது:

கடந்த 1974 இல், இந்திய அணுகுண்டுச் சோதனை நடத்தியது. இச்சோதனையை வைத்து பாகிஸ்தானை இந்தியா தாக்கக் கூடும் செய்யும் என்பதால் தான், பாகிஸ்தானும் அணு குண்டு சோதனை நடத்த தொடங்கியது. பாகிஸ்தானை அழிக்க வேண்டுமென்றால், ஐந்து அணு குண்டுகள் போதுமானது. அதே போல நாங்கள் இந்தியாவுக்கு பதிலடி கொடுக்க, 10 அணு குண்டுகள் போதுமானது. இந் நிலை ஏற்பட்டு விடக்கூடாது என்பதால் தான், இருநாட்டுக் கிடையே கடந்த 40 ஆண்டு களாக போர் நடக்காமல் உள் ளது.

இந்தியாவின் அணு குண்டு அச்சுறுத்தலை எதிர்கொள்ளவே பாகிஸ்தான் அணு சோதனைக்கு முதலீடு செய்கிறது. தங் கள் படை பலத்தை நிரூபிக்க இரு நாடுகள் முயற்சிக் கின்றனவே தவிர, இருநாடு களுக்கிடையே ஒருபோதும் அணு ஆயுத சண்டை நடக்க வாய்ப்பில்லை. இருநாட்டுக் கிடையே உள்ள முரண்பாடு கள் களையப்படும் வரை அமைதி ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. ஒரு காலத் தில் விரோதிகளாக இருந்த பிரான்சும், ஜெர்மனியும் இன்று நட்பு நாடுகளாக இருக்கும் போது, பாகிஸ்தானும், இந்தியாவும் நட்பு நாடுகளாக மாறும் என்ற நம்பிக்கை உள்ளது - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிளென்டி பூட்ஸ் நிறுவனத்தின் நவீன வசதி கொண்ட உணவு பதனிடும் தொழிற்சாலை

சிலோன் பிஸ்கட்ஸ் லிமிட்டெட் நிறு வனத்தின் ஓரங்கமான பிளென்டி பூட்ஸ் நிறுவனம் தனது நவீன வசதிகள் கொண்ட உணவு பதப்படுத்தும் தொழிற்சாலையை கண்டி பள்ளேகல பகுதியில் அங்குரார்ப்பணம் செய்துள்ளது. இந்தத் தொழிற்சாலை கம்பனியின் முக்கிய பிரமுகர்கள் முன்னிலையில் வைபவ ரீதி யாக திறந்து வைக்கப்பட்டது.

சமபோஷ, சமாயு, நியுட்ரிலைன் மற்றும் ஒன் த கோ போன்ற தயாரிப்புகளை தயாரிக்கும் நிறுவனமான பிளென்டி பூட்ஸ், விவசாயத்துறைக்கு முக்கியத்துவம் வழங்கும் நிறுவனமாகும். உள்நாட்டு விவசாயிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளும் மூலப் பொருள்களைக் கொண்டு உயர் போஷாக்கு நிறைந்த உணவுப் பொருள்களை தயாரிக்கும் நடவடிக்கைகளில் பிளென்டி பூட்ஸ் நிறுவனம் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு உள்நாட்டு விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யும் மூலப் பொருள்களுக்கு உயர் பெறுமதியை வழங்குவதன் மூலம் அவர்களின் ஜீவனோபாயத்திற்கும் பிளென்டி பூட்ஸ் பக்கபலமாக அமைந்துள்ளது.

இந்தப் புதிய பள்ளேகல தொழிற்சாலையில் இப்பிரதேசத்தை அண்மித்த பகுதியைச் சேர்ந்த சுமார் 12 ஆயிரத்துக்கு அதிகமான விவசாயிகளிடமிருந்து பெறப்படும் பயறு, சோயா, அரிசி மற்றும் சோளம் போன்றவற்றைக் கொண்டு அதியுயர் போஷாக்கு நிறைந்த உணவுப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. மேலும், உற்பத்தி மற்றும் பொதியிடல் போன்ற அனைத்து தயாரிப்பு நடவடிக்கைகளும் இயந்திரம் மூலம் நடைபெறும் ஒரே தயாரிப்பு தொழிற்சாலையாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் உயர்தர தொழில்நுட்பம் மற்றும் உயர் தரங்கள் கைக்கொள்ளப்படுவதனால் இந்தத் தயாரிப்புகளுக்கு SLS தரச் சான்றிதழ் வழங்கப் படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் துறைசார் வல்லுநர் ஒருவர் உரையாற்றுகையில், ''சர்வதேச நிதிநெருக்கடியிலிருந்து உலக நாடுகள் இன்னும் முழுமையாக மீட்சியடையாத நிலையிலும்; எதிர்காலத்தில் சர்வதேச நாடுகள் எதிர்நோக்கவுள்ள உணவுத்தட்டுப்பாட்டுக்கும் ஒரு தேசம் என்ற வகையில் விவசாய வளங்களை உரிய முறையில் முகாமைத்துவம் செய்து நாட்டை இந்த சிக்கலான காரணிகளுக்குள் செல்வதை தவிர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அந்த வகையில் பிளென்டி பூட்ஸ் நிறுவனம் தனது முதல் படியை மேற்கொண்டுள்ளது'' என்றார்.

பிளென்டி பூட்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் இந்த வைபவத்தில் கருத்து தெரிவிக்கையில், ''இந்த தொழிற்சாலையின் பூரண தொழிற்பாட்டின் மூலம் இலங்கையின் விவசாயத்துறை சார்ந்த உணவு தயாரிக்கும் துறையில் புரட்சியை ஏற்படுத்தி சார்க் பிராந்திய நாடுகளுக்கும் உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்ய முடியும். இதன் மூலம் இப்பிராந்திய நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவையும் வளர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளையும் தாம் மேற்கொள்ள முடியும், அத்துடன் சிறந்த ஏற்றுமதி வருமானத்தையும் ஈட்டிக் கொள்ள முடியும். 24 மணி நேரம் உற்பத்தி நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம்.

இந்தத் திட்டம் கைகூடும் பட்சத்தில் மாதாந்த சமபோஷ உற்பத்தி 1200 தொன்களாக அதிகரிக்கும் வாய்ப்புகள் உள்ளன'' என்றார். எதிர்வரும் 2 வருட காலப் பகுதியில் தொடர்ச்சியான வியாபார அபிவிருத்தி நட வடிக்கைகளை மேற்கொள்ள பிரஸ்தாப நிறுவனம் திட்ட மிட்டுள்ளது.

# DFCC வர்தன வங்கியின் வீசா டெபிட் அட்டை

DFCC வங்கியின் வர்த்தக வங்கிப் பிரிவான DFCC வர்தன வங்கி (DVB) அதன் வர்தன வீசா டெபிட் அட் டையை அறிமுகம் செய்து வைத்ததன் மூலம் இன்னொரு மைல்கல்லை எட்டியுள்ளது.

டெபிட் அட்டைகள் தரமுயர்ந்த பல வசதிகளை வழங்கி, ஏராளமான வாடிக்கையாளர்களை கவர்ந்து வருவதால் இலங்கையில் பரந்தளவில் பிரபல்யமாகி வருகின்றன. அனேகமான வர்த்தகர்கள் பணம் மூலம் கொடுக்கல் வாங்கல்கள் செய்வதை விட மேலதிக நன்மைகள் பல இருப்பதை உணர்ந்து இப்பொழுது டெபிட் அட்டைகளை ஏற்றுக் கொள்கின்றனர். டெபிட் அட்டைகள் மூலம் ATM இயந்திரங்களிலிருந்து பணத்தை உடனடியாக மீளப்பெற்றுக் கொள்ள முடிவதுடன் கொள்வனவு செய்யப்படும் பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான கொடுப்பனவு களையும் விற்பனை நிலையங்களில் நேரடியாகச் செலுத்தலாம்.

DFCC வர்தன வங்கியினால் வழங்கப்படும் சகல டெபிட் அட்டைகளும் சர்வதேச ரீதியாகச் செல்லுபடியாகக் கூடியவை. வங்கியில் கணக்குகளை வைத்திருக்கும் தனிப்பட்ட வாடிக்கையாளர்கள் மற்றும் புதிய வாடிக்கையாளர்கள் வர்தன வீசா டெபிட் அட்டைகளைப் பெற்று கொடுக்கல் வாங்கல்களை இலகுவாக மேற்கொள்ளும் அனுபவத்தைப் பெற உரித்துடையவர்களாவர் என DFCC வர்த்தன வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி லக்ஸ்மன் சில்வா கூறினார்.

''எமது சர்வதேச வீசா டெபிட் அட்டைகள் நாளாந்த கொடுக்கல் வாங்கல்களுக்காக உலகெங்குமுள்ள 15 மில்லியனுக்கு மேற்பட்ட வர்த்தக நிலையங்களால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. மேலும் 2 மில்லிய னுக்கு மேற்பட்ட ATM இயந்திரங்களுடன் இணைப்பைக் கொண்டுள்ள உலகளாவிய வீசா ATM வலையமைப்புடன் தொடர்பை ஏற்படுத்தி பணத்தை மீளப் பெற்றுக் கொள்ளும் வசதியையும் வழங்குகின்றன. இலங்கையில், 20,000 க்கும் மேற்பட்ட விற்பனை நிலையங்களும் 1000 க்கும் மேற்பட்ட வீசா ATM இயந்திரங்களும் வர்தன வீசா டெபிட் அட்டைகளை ஏற்றுக் கொள்கின்றன'' என அட் டைகள் மற்றும் தனிப்பட்ட நிதிச்சேவைகள் பகுதி சிரேஷ்ட முகாமையாளர் கெமுனு குணசுமன கூறினார்.

# HUTCH மூலம் உலகம் உங்கள் கையில்

இலங்கையில் உள்ள தமது வாடிக் கையாளர் சகலரும் கையடக்கத் தொலைபேசி மூலம் இணையத் தளங்களைப் பயன்படுத்தும் வகையில் இணைய வசதிகளை கைக்கடக்க மான கட்ட்ண அடிப்படையில் HUTCH நிறுவனம் தற்போது வழங்குகின்றது.

உங்கள் வசதிக்கேற்ப தினசரி, வாராந்த மற்றும் மாத அடிப்படையில் ரூபா 11, ரூபா 21 மற்றும் ரூபா 51 செலுத்தி நீங்கள் முறையே 50MB, 100MB, 300MB தரவுப் பொதிகளைப் பெற்று இந்த இணைய வசதி களைப் பயன்படுத்தலாம். உண்மையில் இந்த வசதி மூலம் நீங்கள் இணையத்தைப் பயன்படுத்துவது என்பது முற்றிலும் இலவசம் போன்றதே.

இப்போது HUTCH வழங்கும் இந்த வசதியைப் பயன்படுத்தி Facebook, Twitter போன்ற சமூக வலைத்தளங்கள் மூலம் நண்பர்களுடன் தொடர்பு கொள்வதும் அவர்களுடன் உங்கள் படங்கள், அனுபவங்கள், சிந்தனைகள் என்பவற்றைப் பரிமாறிக்கொள்வதும் மிகச் சுலபமாகிறது. அதே போன்று Youtube மூலமோ அல்லது வேறு இணையத்தளங்கள் மூலமோ உங்களுக்குப் பிடித்த திரைப் படங்களைப் பார்வையிடுவதுடன் அவற்றைப் பரிமாறிக்கொள்ளலாம். செய்திகளைப் பார்வை யிடலாம். நண்பர்களுடன் இணைய அரட்டை களில் ஈடுபடலாம். இவை அனைத் தையும் எவ்வித கணினிகளையும் பயன்படுத்தாமல் உங்கள் கையடக்கத் தொலை பேசியை மட்டும் பயன்படுத்தி மேற்கொள்ளலாம்.

இந்த வசதிகள் தொடர்பாகக் கருத்துத் தெரி வித்த (HUTCH) நிறுவனத்தின் பெறுமதிசேர் சேவைகள் மற்றும் றோமிங் பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரி அருள்-வாஸ், ''இது வரை காலமும் கணினியையும் இணையத்தள இணைப்புகளையும் பயன்படுத்தி மேற்கொண்ட இணையத் தொடர்புகளை இப் போது உங்கள் கையடக்கத் தொலைபேசி யைப் பயன்படுத்தி மிகக் குறைந்த செலவில் மேற்கொள்ளலாம் என்பதே இதன் விசேட அம்சமாகும்.''- என்றார்.

கையடக்கத் தொலைபேசி என்பது தற் போது அனைத்தையுமே உங்கள் உள்ளங்கை யிலேயே மேற்கொள்ளக்கூடிய ஒரு சாதனமாக மாறிவிட்டது.

HUTCH MOBILE INTERNET வசதியைப் பயன்படுத்தி பாடல்களையும், வீடியோக்களையும் தரவிறக்கும்போது மிகக் குறைந்த கட்டணமே அறவிடப்படுகிறது. உதாரணமாக MB3 முறையில் ஒரு பாடலுக் கான தரவு 3 முதல் 4MB மட்டுமே. அதாவது ரூபா 11 ஐச் செலுத்தி தினசரி பெக்கேஜைப் பெறும் ஒருவர் அதன் மூலம் கிடைக்கும் 50க்க ளுக்கு ஏறத்தாழ 15 பாடல்களுக்குமேல் தரவிறக்கம் செய்துகொள்ள லாம். வாராந்த பெக்கேஜ் மூலமெனில் இது 30 பாடல்களாக உயரும் என்றும் அருள்வாஸ் குறிப்பிட்டார்.

இலங்கையில் உள்ள ஏனைய சேவை வழங்குனர்களோடு ஒப்பிடுகையில் GPRS வசதிகளுக்காக அறவிடப்படும் மிகக் குறைந்த கட்டணம் இது என்பதுடன், தங்களுக்கு ஏற்றவகையில் வாடிக்கையாளர்கள் செலுத் தும் கட்டணத்திற்கு அதிக தரவுகளைப் பயன்படுத்தும் வசதியையும் வழங்குகிறது.

வாடிக்கையாளர்கள் தாம் விரும்பும் பெக் கேஜ்களைப் பெற்றுக்கொள்ள *131# இலக்கத் திற்கு டயல் செய்து, தொடர்ந்துவரும் பட்டி யலில் தேவையான பெக் கெஜ்களுக்கான இலக்கங்களை அதாவது தினசரி மெனில் -1, வாரந்த மெனில் - 2 மாதாந்த மெனில் - என்ற இலக்கங் களை மெனுவில் தெரிவுசெய்து அனுப்புவதன் மூலம் இந்த வசதியை இயங்க வைக்கலாம்.

இந்த வசதியைப் பெறுவதற்கு இதற்கான கட்டணத் தொகை உங்கள் கணக்கில் இருக்க வேண்டியது அவசியம். நாடெங்குமுள்ள HUTCH வர்த்தக விற்பனை முகவர்களிடமும் ஏனைய தொலைத் தொடர்பு நிலையங்களி லும் தாராளமாகக் கிடைக்கும் Top up அட் டைகள் மூலமும் உங்களுக்குத் தேவையான பெக்கேஜ்களைப் பெற்றுக்கொள்ளலாம். அவற்றுக்கு அரசாங்கத்தின் அங்கீகரிக்கப் பட்ட வரிகள் அறவிடப்படும்.

மேலதிக தகவல்களுக்கு லக்ஷ்மன் பெரேரா 0773868293, 0112502044

# ஆர்பிகோ சுப்பர் சென்ரரின் 12 ஆவது கிளை கடவத்தையில்

இலங்கையில் அமைந்துள்ள 'சுப்பர் மார்க்கெட்' தொடரில் மிகவும் விசாலமான இடவசதிகளையும், அதிகளவு வாகனத் தரிப்பிட வசதிகளையும் கொண்ட ஆர்பிகோ சுப்பர் சென்ரரின் 12 ஆவது கிளை அண்மையில் கடவத்தை பகுதியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்தப் புதிய கிளைக்கு 'நீல அதிசயம்' (Blue Wonder)எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்தக் கிளையானது 25,000சதுர அடிப் பரப்பளவில் அமைந்துள்ளதுடன், 45,000க் கும் அதிகமான பொருட்களை விற்பனைக் காகக் கொண்டுள்ளது.

நிகழ்வில் கலந்துகொண்ட றிச்சர்ட் பீரிஸ் வியாபார நிலையத்தின் தலைவரான சேன யத்திகே கருத்துத் தெரிவிக்கையில்,

''ஆர்பிகோ சுப்பர் சென்ரர், குறுகிய காலப்பகுதியில் பிரதான நகரங்களில் புதிய கிளைகளை ஆரம்பித்துள்ளது. இதன்மூலம் நாம் வாடிக்கை யாளர்களின் தேவைகளை மிகவும் செம்மையாக அறிந்து, அதற்கேற்ப சேவைகளை வழங்கியமையே எமது வெற்றிக் குக் காரணமாகும்'' - என்றார்.

ஆர்பிகோ சுப்பர் சென்ரரின் விற்பனை முகாமையாளரான அவந்தி த சொய்சா கருத் துத் தெரிவிக்கையில்,

''நாம் புதிதாக கடவத்தைப் பகுதியில் திறந்து வைத்துள்ள இந்த சுப்பர் சென்ரர் கடவத்தை மற்றும் அதை அண்டிய பகுதியில் வசிக்கும் மக்களுக்கு புதிய ஷொப்பிங் அனுபவத்தை வழங்கும் என நம்புகிறோம்.

அத்துடன் வருடாந்தம் நாம் வெவ்வேறு பல சலுகைத் திட்டங்களை அறிமுகப்படுத்தி எமது வாடிக்கையாளர்களுக்கு பெருமளவான அனுகூலங்களை ஏற்படுத்திக் கொடுக்கிறோம். மேலும் எமது 'பிரிவிலேஜ்' அட்டைகளை வைத்திருக் கும் வாடிக்கையாளர்கள் தாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களின் போதும் புள்ளிகளைச் சேகரித்து, பெருமளவான சலுகை களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய திட்டமும் அமுலிலுள்ளது'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் பாதுகாப்பு குறித்து பிரதமர் மன்மோகன் மீளாய்வு

டில்லி, மே 19

பாகிஸ்தானில் ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இந்தியாவின் பாதுகாப்பு உஷார்நிலை குறித்து பாதுகாப்பு அமைச்சர், முப்படைத் தளபதிகள் உள்ளிட்டோரிடம் பிரதமர் மன்மோகன் சிங் கடந்த திங்கட்கிழமை ஆலோசனை நடத்தினார்.

பாகிஸ்தானின் அபோட்டாபாத் நகரில் பதுங்கியிருந்த பின்லேடனை அமெரிக்க கொமாண்டோ படையினர் அண்மையில் சுட்டுக் கொன்றனர்.

இதையடுத்து பின்லேடனுக்கு ஆதரவாக இருந்ததாக பாகிஸ்தான் மீது உலக நாடுகள் குற்றம்சாட்டி வருகின்றன.


இதையடுத்து நெருக்கடியில் சிக்கியிருக்கும் பாகிஸ்தான், கவனத்தைத் திசை திருப்புவதற்காக இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்கக்கூடும் என்கின்ற அச்சம் எழுந்திருக்கிறது.

இதை உறுதி செய்வதுபோல பாகிஸ்தான் ஐ.எ.ஐ. உளவு அமைப்பின் தலைவர் சுஜா பாஷா அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்தார். அபோட்டாபாத்தில் அமெரிக்கா தாக்குதல் நடத்தியதுபோல, இந்தியாவும் பாகிஸ்தானுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டால் பதிலடி கொடுப்பதற்குத் தயாராக இருப்பதாகவும் இந்தியாவுக்குள் சில தாக்குதல் இலக்குகளுக்குக் குறி வைத்திருப்பதாகவும் அவர் கூறியிருந்தார்.

இந்த நிலையில், இந்தியாவின் இராணுவத் தயார்நிலை குறித்து ஆய்வு செய்வதற்காக பிரதமர் தலைமையில் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி மற்றும் இராணுவத் தளபதிகள் கலந்து கொண்ட கூட்டம் டில்லியில் கடந்த திங்கட்கிழமை நடந்தது.

தரைப்படைத் தலைமைத் தளபதி, வி.கே.சிங், விமானப் படைத் தலைமைத் தளபதி பி.வி.நாயக், கடல்படைத் தலைமைத் தளபதி நிர்மல் வர்மா, பாதுகாப்புத்துறைச் செயலர் பிரதீப்குமார், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன், டி.ஆர்.டி.ஓ. தலைவர் வி.கே. சரஸ்வத் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

90 நிமிடங்கள் நடந்த இந்தக் கூட்டத்தில் இந்திய-பாகிஸ்தான், இந்திய-சீன எல்லையில்



உள்ள பாதுகாப்பு நிலைமைகள் குறித்து பிரதமரிடம் விளக்கப்பட்டதாகப் பாதுகாப்பு அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இருதரப்பு சண்டை நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் வகையில் எல்லையில் பாகிஸ்தான் தாக்குதல் நடத்தி வருவது குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது எனத் தெரிகிறது.

## தி.மு.கவின் தேர்தல் தோல்வியால் மேலுமொரு தொண்டர் தற்கொலை

திருப்பூர், மே 19

தி.மு.க.வின் தேர்தல் படுதோல் வியால் மனமுடைந்த மேலுமொரு தொண்டர் தற்கொலை செய்துள்ளார்.

திருப்பூர் அருகே அனுப்பர்பா ளையம் என்னுமிடத்தில் தி.மு.க. கிளைச் செயலராக இருந்தவர் ஆனந்தராஜ்.

இவர் தி.மு.க. தோல்விச் செய்தியை கேட்ட நாளில் இருந்து மனமுடைந்த நிலையில் காணப்பட்டார். இந்நிலையில் நேற்று சாணிப்பவுடரை கரைத்துக் குடித்து தற்கொலைக்கு முயன்றுள்ளார். சிகிச்சை பல னின்றி அவர் உயிரிழந்தார்.

தி.மு.க. தோல்வியைத் தாங்க முடியாமல் நிர்வாகிகள், கட்சியினர் தற்கொலைக்கு முயல்வது அக்கட்சியினர் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. (வ)

ஆலோசனை...



சென்னை புனித ஜோர்ஜ் கோட்டையில் நேற்று முன்தினம் மாலை முதல்வர் ஜெயலலிதா தலைமையில் முதல் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் அமைச்சர்கள், அரசு உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## அழகிரியின் திருமண மண்டபம் மீது மதுரையில் நேற்றுத் தாக்குதல்

மத்திய அமைச்சர் மு.க. அழகிரிக்குச் சொந்தமான மதுரையில் அமைந்துள்ள தயா திருமண மண்டபம் மீது நேற்று முன்தினம் நள்ளிரவில் கல்வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மண்டபத்தில் தாக்குதல் நடந்தபோது காவலாளி, தாக்குதல் நடத்தியவர்களை துரத்திய போது நாம் அ.தி.மு.க. கட்சிக்காரர்கள். உங்களை சும்மா விட மாட்டோம் என்று சத்தம் போட்டு ஓடியதாக காவலாளி கூறியுள்ளார்.

இதேவேளை நேற்று முன்தினம் நடிகர் வடிவேலு வீடு தொடர்ந்து தாக்கப்பட்ட நிலையில், அழகிரியின் திருமண மண்டபமும் தாக்கப்பட்டுள்ளது.

மேலும், அழகிரியின் ஆதரவாளர்கள் வீடுகள் மீதும் தாக்குதல் நடந்து வருகிறது.

இதனையடுத்து பரபரப்பான இந்த சூழ்நிலையில் மதுரை தி.மு.க. பிரமுகர்களுடன் அழகிரி ஆலோசனை நடத்தி வருகிறார். இந்தத் தாக்குதல் தொடர்பாக உள்ளூர் காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து அடுத்த கட்ட நடவடிக்கையாக என்ன செய்யலாம் என்று ஆலோசனை நடைபெறுகிறது. சென்னைக்குச் சென்று ஆளுநரைச் சந்தித்து முறைப்பாடு கொடுக்கலாமா என்றும் ஆலோசனை செய்யப்படுகிறது.

# தே.மு.தி.கவினால் ஆபத்து பாதுகாப்பு கோரி வடிவேலு மனு

தே.மு.தி.க.வினர் தன்னை மிரட்டுவதால் தனது குடும்பத்திற்குப் பாதுகாப்புத் தேவை என தமிழக டி.ஜி.பி.யிடம் நடிகர் வடிவேலு சார்பில் மனு அளிக்கப் பட்டுள்ளது.

நடிகர் வடிவேலு சார்பில் அவரது வழக்கறிஞர் சரவணன், டி.ஜி.பி. லத்திகாசரணிடம் கொடுத்த மனுவில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:

நான் கடந்த 20 ஆண்டுகளாக தமிழக திரைப்படத் துறையில் நகைச்சுவை நடிகராக நடித்து வருகிறேன். தமிழகத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.வுக்கு ஆதரவாக பிரசாரம் செய்தேன்.

குறிப்பாக தே.மு.தி.க.வை எதிர்த்து பிரச்சாரம் செய்தேன். இதனால் அந்தக் கட்சியினரும், அந்தக் கட்சியின் தலைவர் விஜயகாந்தும் என் மீது கோபமாக இருந்து வந்தனர். இதற்கிடையே தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் தூண்டுதலின் பேரில் எனக்கும், எனது குடும்பத்திற்கும் தொடர்ச்சியாக மிரட்டல் இருந்து வருகிறது.

எனது சொத்துகள் தே.மு.தி.க.வினரால் தாக்கப்பட்டும் வருகின்றன. எனக்கும், எனது குடும்பத்திற்கும் ஆபத்து ஏதேனும் ஏற்பட்டால், தே.மு.தி.க.வினர் தான் காரணமாக இருப்பார்கள். ஜனநாயக நெறிமுறைப்படி பிரசாரம் செய்த எனக்கு தே.மு.தி.கவினர் கொலை மிரட்டல் விடுத்து வருகின்றனர்.

எனவே மிரட்டல், தாக்குதல் ஆகியவற்றில் இருந்து காப்பாற்ற எனக்கும், எனது குடும்பத்திற்கும் பொலிஸார் தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டும். மிரட்டல் மற்றும் தாக்குதலில் ஈடுபடும் தே.மு.தி.க.வினர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## பெண் குழந்தை பிறந்தால் 10 மரக்கன்றுகள் நடுகை

பாகல்பூர், மே.19

பீகார் மாநிலத்தில் பெண் குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் நோக்கில் பாகல்பூர் மாவட்டத்தில் உள்ள தஹ்ரா கிராமத்தில் ஒவ்வொரு பெண் குழந்தை பிறக்கும்போதும் அந்தக் கிராமத்தில் 10 மாமரக்கன்றுகளை நடுகின்ற வழக்கம் பின்பற்றப் பட்டு வருகின்றது.

இந்தியாவில் பெண் குழந்தைகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்து வருகிறது. 1000 ஆண்களுக்கு 914 பெண்கள் என்ற அளவில்தான் பாலின விகிதம் உள்ளது. இந்த நிலையில் பீகாரில் உள்ள மேற்படி கிராமத்தில் பெண் குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கின்றனர்.

இவ்வாறு மரக்கன்றுகள் நட்டு வந்ததில் தற்போது அங்கு 20 ஆயிரத்துக்கும் அதிகமான மாமரங்கள் காணப்படுகின்றன. அத்துடன் ஆண், பெண் விகிதமும் குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது.

இதுகுறித்து தஹ்ரா கிராமப் பெண் ஒருவர் கூறுகையில்:, மரக்கன்றுகளை நடுவதால் 2 விதமான நன்மைகள் உள் ளன. அவற்றில் ஒன்று, அந்த மரக்கன்று பெரிய மரமாகும் போது கிடைக்கும் பழங்களை விற்று பெண் குழந்தை களின் திருமணத்துக்கு பணம் சேர்க்க முடியும். இரண்டாவதாக சுற்றுச்சூழலுக்கும் மரங்கள் பெரிதும் உதவும் என்று கூறியுள்ளார்.

## மதுபானத்தைக் குறைத்ததால் ரஜனிக்கு இந்த நிலை

### சகோதரர் சத்யநாராயணா கூறுகிறார்

சென்னை, மே.19

அண்மைக்காலமாக மதுபானம் உட்கொள்வதை குறைத்துவிட்டதால்தான் ரஜினிகாந்துக்கு நுரையீரல் மற்றும் கல்லீரலில் நோய்த்தொற்று ஏற்பட்டது. எனினும் அவருக்கு நிமோனியாவோ அல்லது கிட்னி பாதிப்போ இல்லை என அவரது மூத்த சகோதரர் சத்யநாராயண ராவ் தெரிவித்தார்.

நடிகர் ரஜினிகாந்தின் உடல் நலம் குறித்து அவர் விளக்கம் அளிக்கையில்:

நுரையீரல் நோய்த்தொற்று முழுமையாகக் குணமடைய ரஜினிகாந்த் மேலும் 15 தினங்கள் மருத்துவமனையில் இருக்க வேண்டிவரும் என சத்யநாராயணா தெரிவித்தார்.

திரைத்துறையில் மதுபானம் உட்கொள்வது சாதாரணமான விடயம்தான். எனினும் ரஜினிகாந்த் கடந்த சில மாதங்களாக அதை வெற்றிகரமாகக் குறைத்திருந்தார். அதனாலேயே அவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டிருக்கலாம்.

மதுபானம் உட்கொள்வதை நிறுத்தினால் வாந்தி, உடல் பலவீனம் அடைதல், காய்ச்சல், சுவாசப் பிரச்சினை போன்ற அறிகுறிகள் பொதுவாகக் காணப்படும். ரஜினியை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டமைக்கு இந்தப் பிரச்சினைகளே காரணமாக இருக்கும் என அவர் குறிப்பிட்டார்.

மேலதிக சிகிச்சைக்காக ரஜினியை அமெரிக்கா அழைத்துச் செல்லும் திட்டம் எதுவும் இல்லை எனவும் அவர், 6 மாதங்கள் அவர் திரைப்படங்களில் நடிக்க மாட்டார் என்று கூறப்படுவதும் உண்மையான தகவல்கள் இல்லை என அவர் விளக்கம் அளித்தார்.

## இந்தியா உதவுவதை தடுக்க தீர்மானம்

### ஜெயலலிதாவிடம் ம.தி.மு.க. வலியுறுத்து

இலங்கை அரசுக்கு இந்திய அரசு உதவுவதைத் தடுக்கும் வகையில் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று ம.தி.மு.க. வலியுறுத்தியுள்ளது.

தமிழக சட்டசபைத் தேர்தலில் ம.தி.மு.க. போட்டியிடாமல் புறக்கணித்தது. இந்த நிலையில் ம.தி.மு.க. மாவட்ட செயலாளர்கள், ஆட்சி மன்றக்குழு, அரசியல் ஆலோசனைக் குழு அரசியல் ஆய்வு மைய உறுப்பினர்கள் கூட்டம் எழும்பூரில் உள்ள தாயகத்தில் நடைபெற்றது.

அவைத்தலைவர் திருப்பூர் துரைசாமி தலைமை தாங்கினார். கூட்டத்தில் பொதுச் செயலாளர் வைகோ கலந்து கொண்டார்.

போர்க்குற்ற முறைப்பாட்டில் சிக்கியுள்ள இலங்கை அரசுக்கு இந்திய அரசு உதவுவதைத் தடுக்கும் வகையில் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று இந்தக் கூட்டத்தில் ம.தி.மு.க. கேட்டுக்கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தினரின் அருவருப்பான பாலியல் கொடூரங்கள் சனல்-4 வீடியோவில் குரூரமானக் காட்சிகள் சான்று

## ஜெனீவா ஒப்பந்த மீறல்கள் குறித்தும் விரிவாக விளக்கம்

**ஐ.நா. செயலாளரிடம் நிபுணர் குழு வழங்கிய அறிக்கை**

**பகுதி - 18**

**(ஈ) பொதுமக்களுக்கு எதிராகக் கண் மூடித்தனமான மற்றும் அளவுமீறிய தாக்குதல்கள் மீதான தடை**

201. பின்வருமாறு கருதப்படுபவை மீதான வகைதொகையற்ற தாக்குதல்களைச் சர்வதேச மனிதாபிமான சட்டம் தடைசெய்கிறது.

(70)

குறிப்பானதோர் இராணுவ இலக்குக்கு எதிராக மேற்கொள்ளப்படாத (ஆ) ஒரு குறிப்பிட்ட இராணுவ இலக்குக்கு எதிராகச் செலுத்த முடியாத யுத்த முறையை அல்லது வழியைப் பிரயோகிக்கும் ஒன்று, அல்லது (இ) சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தால் தேவைப்படுத்தப்படுவதற்கேற்ப விளைவுகளை மட்டுப்படுத்த முடியாத யுத்த முறையை அல்லது வழியைப் பிரயோகிக்கும் ஒன்று மற்றும் அதன் விளைவாகப் பாகுபாடின்றி இராணுவ இலக்குகளையும் பொதுமக்களையும் அல்லது பொது இடங்களையும் தாக்கும் தன்மையை கொண்டதொன்று. (விதி 11-13, ஐ.சி.ஆர்.சி. ஆய்வு)

202. தன்னால் பிரகடனப்படுத்தப்பட்ட யுத்த சூனிய வலயங்களில் அமைந்துள்ள மற்றும் ஆஸ்பத்திரிகள் உணவு விநியோக வரிசைகளை உள்ளிட்ட வித்தியாசமின்றிப் பொதுமக்களைத் தாக்கக் கூடிய, ஆனால் குறிப்பிட்ட இராணுவ இலக்குகளை மாத்திரம் குறிவைக்காத விதத்தில் இலங்கை இராணுவம் பீரங்கிகளைப் பிரயோகிப்பதன்மூலம் மீறல் ஒன்றைச் செய்ததாக நம்பகமான குற்றச்சாட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

அதிகமாகப் பொதுமக்கள் உள்ள இலக்குப் பார்த்த பிரதேசங்களுக்கு எதிராகக் கனரக ஆயுதங்களைப் பாவித்ததாக அல்லது அந்தவிடங்களில் பரவலாகப் பீரங்கிகளைப் பாவிப்பது தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தாமாகவே அவை கண்மூடித்தனமானவையாகும் என்பதை குறிப்பிடுவனவாகவுள்ளன.

203. எதிர்பார்க்கப்படும் உறுதியான மற்றும் நேரடி இராணுவப் பயனை விஞ்சக்கூடிய, தற்செயலாகப் பொதுமக்கள் உயிரிழப்பைப் பொதுமக்கள் காயமடைவதை, பொது இடங்களைச் சேதப்படுத்துவதை அல்லது அவை இணைந்தவற்றை ஏற்படுத்தக் கூடிய விதத்தில் தாக்குதல் ஒன்றை நடத்துவதையும் சட்டம் தடைசெய்கிறது. (விதி 14.ஐ.சி.ஆர்.சி) எதிர்பார்க்கப்படும் அளவுக்கதிகமான பொதுமக்கள் மரணத்தை மற்றும் காயத்தை ஏற்படுத்துவது தொடர்பாக அளவுக்கதிகமான பலத்தைப் பிரயோகிப்பதையும் இந்த விதிமுறை தடைசெய்கிறது.

சகல சம்பவங்கள் பற்றிய தகவலும் குழுவிடம் இல்லாத அதேவளையில், யுத்த சூனிய வலயங்கள் மீதான தாக்குதல்கள் அத்தகைய தாக்குதல்கள் மூலம் எதிர்பார்க்கப்படும் இராணுவப் பயனை விட அதிகமாக இருந்ததால் இந்த ஏற்பாடு பலமுறை மீறப்பட்டதை நம்பகமான குற்றச்சாட்டுகள் குறிப்பிடுகின்றன. யுத்த சூனிய வலயங்களில் கனரக ஆயுதங்களின் பாவனையை நிறுத்தியுள்ளதாகப் பலதடவை அரசு தெரிவித்துள்ளதைக்கொண்டு அவற்றின் பிரயோகம் அளவுக்கு அதிகமாக இருக்கும் என்பது பற்றி அது அறிந்திருந்தது என்பதைச் சுட்டிக்காட்டுவதாக உள்ளது.

**(உ) தாக்குதல்களுக்கு முன்பும் அவற்றின் போதும் முன்னேற்பாடுகளின் தேவை**

204. இலக்குகள் இராணுவம் சம்பந்தப்பட்டவையா என்பதை உறுதிப்படுத்திக்கொள்வது பொதுமக்கள் இறப்பு மற்றும் காயமடைவதைக் குறைப்பதற்கான யுத்த முறைகளையும் வழிகளையும் தேர்ந்தெடுப்பது மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலைகள் இடமளிப்பின் பயனுறு முன்னெச்சரிக்கை ஆகியவற்றை உள்ளிட்ட பொதுமக்கள் கொல்லப்படுவதை அல்லது காயமடைவதைக் குறைப்பதற்கான முடியுமான சகல முற்பாதுகாப்பு நடவடிக்கைகளையும் தரப்பினர் மேற்கொள்வதை சர்வதேச மனிதாபிமான சட்டம் தேவைப்படுத்துகிறது. (விதி 15-20, ஐ.சி.ஆர்.சி. ஆய்வு)

(71)

205. பொதுமக்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய விதத்தில் இராணுவ இலக்குகள் மீதான தாக்குதல்கள் உள்ளிட்ட தாக்குதல்கள் பற்றிப் பொது மக்களுக்கு எந்தவித அல்லது போதிய முன்னெச்சரிக்கையை இராணுவத்தினர் வழங்கவில்லை என்பதாக இந்த ஏற்பாடு மீறப்பட்டதை நம்பகமான குற்றச்சாட்டுக்கள் குறிப்பிடுகின்றன. வன்னியில் இடைக்கிடையே விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் குறிப்பான தாக்குதல்கள் பற்றிப் போதிய முன்னேற்பாடாக அமையவில்லை. மேலும் பொதுமக்களைச் செல்லுமாறு அரசு பணித்த யுத்த சூனிய வலயங்களை, இந்த விதியைக் கவனிக்காது இலங்கை இராணுவம் பின்னர் ஷெல் வீசித் தாக்கியது காரியம் சாதிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட சாதுரியமான செயலாகவே இருக்கிறது.

**2. ஆஸ்பத்திரிகள் மற்றும் மனிதாபிமான இலக்குகள் மீதான ஷெல் வீச்சு**

**(அ) ஜெனீவா உடன்படிக்கைகளின் பொது உறுப்புரை 3**

206. அவை தெளிவாக அடையாளமிடப்பட்டு அவற்றின் அமைவிடங்கள் அரசுக்குத் தெரிந்திருந்த போதிலும், மேலே குறிப்பிட்ட ஆஸ்பத்திரிகள் மற்றும் மனிதாபிமான தலங்கள் மீதான தாக்குதல்கள் பற்றிய நம்பகமான குற்றச்சாட்டுக்கள், உறுப்புரை 3 இல் தெளிவாகக் கூறப்பட்டுள்ள 'நோயாளர் மற்றும் காயமுற்றோருக்குப் பராமரிப்பு வழங்குதல்' என்ற கடப்பாட்டின் மீறலாக அமைகிறது.

அறிந்திருந்தும் மக்கள் அதிகமாக உள்ள ஆஸ்பத்திரி அமைவிடயங்கள் மற்றும் மனிதாபிமான தலங்களை நேரடியாகவோ அல்லது கண்மூடித்தனமாகவோ குறிவைப்பது அந்தத் தாக்குதல் மரணத்தை ஏற்படுத்தக் கூடும் என்று நடத்தியவர்கள் அறிந்துள்ளார்கள் என்பதைக் குறிப்பதாக உள்ளதோடு அவை பொது உறுப்புரை 3 இனை மீறிய கொலை என்பதாகவும் உள்ளது.

**(ஆ) மருத்துவ மற்றும் மனிதாபிமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் தலங்களுக்கான விசேடபாதுகாப்புக்கான தேவை**

207. தரப்பினர் சகல மருத்துவ ஆளணியினர், மருத்துவ அலகுகள், மருத்துவப் போக்குவரத்துக்கள், மனிதாபிமான உதவியாள்கள் அத்துடன் மனிதாபிமான உதவித் தலங்கள் ஆகியவற்றை மதித்துப் பாதுகாக்க வேண்டும் என்பதை சர்வதேச மனிதாபிமான சட்டம் தேவைப்படுத்துகிறது. (விதிகள் 26,28,31 மற்றும் 32, ஐ.சி.ஆர்.சி. ஆய்வு). குறிப்பான ஜெனீவா உடன்படிக்கைகளின் சின்னங்கள், இலங்கையைப் பொறுத்தவரை, செஞ்சிலுவை அல்லது ஐ.சி.ஆர்.சி. கொடியைத் தெளிவாகக் காட்டும் வைத்திய ஆளணியினர மற்றும் தலங்களை தரப்பினரைத் தாக்கலாகாது (விதி 30, ஐ.சி. ஆர்.சி. ஆய்வு). நேரகாலத்தோடு இலங்கை அரசுக்கு அறிவிக்கப்பட்ட தெளிவான சின்னங்கள் அல்லது அறிவிக்கப்பட்ட எல்லைகளைக் கொண்ட பல்வேறு ஆஸ்பத்திரிகள் மற்றும் மனிதாபிமான தலங்கள் மீதான ஷெல் தாக்குதல் பற்றிய நம்பகமான குற்றச்சாட்டுக்கள் இந்த விதியின் மீறலைக் குறிக்கின்றன.

அதே போன்று, ஐக்கிய நாடுகள் கொடி தெளிவாகப் பறக்கவிடப்பட்டிருந்த முதலாவது யுத்த சூனிய வலயம் போன்ற ஐக்கிய நாடுகள் வளாகம் மீதான தாக்குதல்களும் இதே தீர்மானத்தையே குறிக்கின்றன.

(72)

**(இ) பொதுமக்கள்மீது அல்லது பொதுமக்கள் தலங்கள் மீதான தாக்குதலுக்கான தடை**

208. ஆஸ்பத்திரிகள் மற்றும் மனிதாபிமானத் தலங்கள் மீதான தாக்குதல்களும் பொதுமக்கள் தலங்கள் மீதான சட்டவிரோதத் தாக்குதலைக் குறிக்கின்றன. சில ஆஸ்பத்திரிகளில் (புதுக்குடியிருப்பு, புதுமாத்தளன் மற்றும் முள்ளி வாய்க்கால்) காயமடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர்களுக்குச் சிகிச்சை அளிக்க வேறொரு பிரிவு இருந்தது என்பது இத்தளங்களின் பொதுமக்கள் சுபாவத்தில் மாற்றத்தை ஏற்படுத்தாது. ஆயினும், இந்த ஆஸ்பத்திரிகள் பலமுறை தாக்கப்பட்டன. அவை வேண்டுமென்றே குறிபார்க்கப்பட்டன என்ற ஊகத்தை ஏற்படுத்துகிறது.

**3. மனிதாபிமான உதவியை மறுத்தல்**

**(அ) ஜெனீவா உடன்படிக்கைகளின் பொது உறுப்புரை 3**

209. யுத்தத்தின் இறுதிக்கட்டங்களில் 'நோயாளிகளுக்கும் காயமடைந்தவர்களுக்கும் பராமரிப்பை வழங்குதல்' என்ற கடமை தொடர்பாக, ஐ.நா. ஒழுங்கு செய்த வாகனத் தொடர்கள் அல்லது ஐ.சி.ஆர்.சி. கப்பல்கள் மூல மான அடிப்படை மருந்துப்பொருள்கள், குறிப்பாக அறுவைச் சிகிச்சைக்கான பொருள்கள் யுத்த வலயத்தைச் சென்றடைவதை அரசு அதிகமாகக் கட்டுப்படுத்தியது. உயிர் காப்பதற்கான சத்திர சிகிச்சைக்குத் தேவையான மருந்துப் பொருள்களை பிரதேச, மாவட்ட வைத்திய அத்தியட்சகர் பல முறைவேண்டிய போதும் அது அதனைக் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளவில்லை. அது கப்பல் மூலமாக அனுப்பும் மருந்துப் பொருள்கள் மீது கட்டுப்பாடுகளை விதித்தும் காயமடைந்தவர்களை எடுத்துச்செல்வதற்காக வந்த கப்பல்களுக்கு அருகில் துப்பாக்கியால் சுட்டும் ஷெல் வெடிகளைச் செலுத்தியும் காயமடைந்த பொதுமக்களுக்கு உதவுவதில், பாரபட்சமான முறையில் மனிதாபிமான உதவியை அது வழங்குகிறது என்று சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் ஐ.சி. ஆர்.சிக்குக் கடுமையான தடைகள் ஏற்படுத்தப்பட்டன.

**(ஆ) மருத்துவ மற்றும் மனிதாபிமான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் தளங்களுக்குமான விசேட பாதுகாப்புக்கான தேவைப்படுத்தல்கள்**

210. மேலே 2இல் கலந்துரையாடப்பட்ட ஆஸ்பத்திரிகள் மீதான ஷெல் தாக்குதலுக்குப் புறம்பாக, இலங்கை இராணுவத்தால் பல மனிதாபிமான தளங்கள், குறிப்பாக வாகனத்தொடர் 11, புதுமாத்தளனுக்கு அருகில் ஐக்கிய நாடுகள் வளாகம், முதலாவது யுத்த சூனிய வலயத்தில் மற்றும் அம்பலவன் பொக்கணையில் உணவு விநியோகப் பாதை மற்றும் ஐ.சி.ஆர்.சி. கப்பல்களுக்கு அருகே ஷெல் தாக்குதலை மேற்கொளல் இந்த விதியின் மீறலைக் குறிக்கின்றன.

(73)

**(இ) பொதுமக்களின் பட்டினிச் சாவு மற்றும் மனிதாபிமான நிவாரண நிராகரிப்பு மீதான தடை**

211. பட்டினிச் சாவை யுத்த முறையாகப் பாவிப்பதை சர்வதேச மனிதாபிமான சட்டம் தடைசெய்கிறது. 'பாரபட்சமற்ற முறையிலும் மற்றும் எதுவித பாதகமான வித்தியாசமுமின்றி, கட்டுப்படுத்தும் அவர்களின் உரிமைக்கு ஏற்ப தேவையை எதிர்கொண்டிருக்கும் பொதுமக்களுக்கான மனிதாபிமான நிவாரணம் சென்றடைவதை அனுமதித்து மற்றும் தீவிரமாகவும் தடையின்றியும் செல்வதற்கான வசதியை வழங்குவதை' தரப்பினர் மீது சர்வதே மனிதாபிமான சட்டம் தேவைப்படுத்துகிறது. (விதிகள் 53 மற்றும் 55, ஐ.சி.ஆர்.சி ஆய்வு)

212. (i) குறைந்த அளவிலான உணவு நிவாரணத்தை நியாயப்படுத்துவதற்காக வேண்டுமென்றே மற்றும் பகிரங்கமாகப் பொதுமக்கள் எண்ணிக்கையைக் குறைத்து மதிப்பிட்டு, (ii) மனிதாபிமான வாகனத்தொடர்கள் மற்றும் கப்பல்கள் யுத்த வலயத்தைச் சென்றடைவதற்கு இடையூறு விளைவித்து, மற்றும் (iii) தெரிந்துகொண்டே மனிதாபிமான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோருக்கு அருகில் ஷெல் தாக்குதலை நடத்தி இந்த ஏற்பாட்டை அரசு மீறியதை நம்பகமான குற்றச்சாட்டுக்கள் குறிப்பிடுகின்றன. அதன் விளைவாகக் குறிப்பாக இரண்டாவது யுத்த சூனிய வலயத்தில் பொதுமக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் மருந்துவகைகள் கிடைக்காமல் செய்யப்பட்டன. குறிப்பாக அதன் உதவி அரச அதிபரிடம் இருந்து அதற்குக்கிடைத்த அறிக்கைகள் அரசு இந்த விளைவுகளை அறிந்திருந்தது என்று குற்றம் சாட்டலாம்.

**4. பாதிக்கப்பட்டோர் மற்றும் யுத்தத்தில் இருந்து உயிர் பிழைத்தவர்கள் அனுபவித்த மனித உரிமைகள் மீறல்கள்**

213. யுத்ததின் போதும் அதன் பின்னரும் இந்த வகையான அரச நடவடிக்கைகள் நடைபெற்றதால், அவற்றை சர்வதேச மனிதாபிமான சட்டம் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் ஆகிய இரண்டின் கீழும் குழு ஆராய்கிறது.

**(அ) ஜெனீவா உடன்படிக்கைகளின் 3ஆவது பொதுவான உறுப்புரை**

214. 'சுய மரியாதை, குறிப்பாக அவமானப்படுத்தும் மற்றும் இழிவு படுத்தும் விதத்தில் நடத்துவதைக் கொண்ட அட்டூழியங்கள்' தடை தொடர்பாக, கொலை செய்யப்படுமுன் அல்லது தடுத்து வைக்கப்படு முன், இராணுவத் தடுப்புக் காவலில் இருக்கும்போது பெண்கள் மற்றும் சிறுமிகள், குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் சந்தேக நபர்கள், மீது இலங்கை இராணுவத்தினர் மேற்கொண்ட பாலியல் வல்லுறவு அல்லது பாலியல் குற்றங்கள் மூலம் இந்த ஏற்பாடு மீறப்பட்டுள்ளதற்கான நம்பத்தகு குற்றச்சாட்டுக்கள் உள்ளன. வேண்டுமென்றே நிர்வாணமாக்கப்பட்ட பெண்களின் உடம்புகளைக் கொண்ட குறிப்பாக சனல் 4 வீடியோ மற்றும் புகைப்படங்களை உள்ளிட்ட இறந்த ஒரு பெண் உறுப்பினர் எனக் காணப்படும் ஒருவரின் புகைப்படமும் அதனோடுவரும் இலங்கை இராணுவ வீரர்களின் மோசமான குறிப்புக்களும் கொலை செய்யப்படுவதற்கு முன்போ அல்லது அதற்குப் பின்போ பாலியல் வல்லுறவு அல்லது பாலியல் வன்முறை நிகழ்ந்திருக்கலாம் என்பதற்கான உறுதியான ஊகத்தை வழங்குகிறது.

*(வளரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மெய்வன்மைப் போட்டி; 3 தங்கம் வென்றது யாழ்ப்பாணம்

## ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப் பதக்கங்களையும் தனதாக்கியது

யாழ்ப்பாணம்,மே 19

அகில இலங்கைப் பாடசாலைகள் மெய்வன்மைச் சங்கத்தின் ஏற்பாட்டில் கொழும்பு சுகததாஸ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுவரும் மெய்வன்மைப் போட்டிகளில் நேற்றுவரை மூன்று தங்கப் பதக்கங்களையும், ஒரு வெள்ளிப் பதக்கத்தையும், இரண்டு வெண்கலப் பதக்கங்களையும் யாழ்.மாவட்டம் பெற்றுள்ளது.

தடகளப் போட்டி ஒன்றில் 30 வருடங்களின் பின்னர் யாழ். மாவட்ட வீரன் தங்கப் பதக்கம் சுவீகரித்துள்ளார்.

பதக்கம் வென்றோர் விவரம் வருமாறு:

**தங்கப்பதக்கம்**

* அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவி எஸ். தனுஷா 20 வயதுப் பிரிவில் உயரம் பாய்தலில் முதலாமிடம்.
* யாழ்.மத்திய கல்லூரி மாணவன் எட்வேட் எடின் 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலாமிடம் (30 வருடங்களின் பின் தடகளப் போட்டியில் யாழ். மாணவனின் சாதனை).
* அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவி எஸ். தனுஷா 20 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் முதலாமிடம்.

**வெள்ளிப் பதக்கம்**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வீரர் எட்வேட் எடின் 20 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் இரண்டாமிடம் .

**வெண்கலப் பதக்கம்**

க.ஜக்சனா 20 வயதுப் பிரிவு கோலூன்றிப் பாய்தல் மூன்றாம் இடம்.

* 18 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் எஸ்.பவித்திரா மூன்றாமிடம். (ஐ-86)

## மாவட்டமட்ட உடற்பயிற்சிப் போட்டி

பருத்தித்துறை,மே 19

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து வலயங்களிலும் நடத்தப்பட்ட உடற்பயிற்சிப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற உடற்பயிற்சி அணிகள் இந்தப் போட்டியில் பங்குபற்றவுள்ளன.

(ஐ-190)

## 17 வயதுப் பிரிவு கரபந்தாட்டம்; புத்தூர் மகாஜன மாவட்டச் சம்பியன்

வலி.வடக்கு,மே 19

யாழ்.மாவட்ட கல்வி வலயங்களுக்கு இடையே நடைபெற்ற 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் புத்தூர் ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் யாழ்.மாவட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் புத்தூர் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயமும் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பத்தில் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம் எதிர்ப்புக்காட்டி விளையாடிய போதிலும் இந்த நிலை தொடராத நிலையில் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு நேர்சுற்றுக்களை ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் 25:16, 25:15 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

ஆட்ட நிறைவில் புத்தூர் ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் 2:0 என்ற சுற்றுக்கள் கணக்கில் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தை வெற்றி பெற்று மாவட்ட சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

இரண்டு அணிகளும் மாகாண மட்டப் போட்டிகளில் விளையாடத் தகுதி பெற்றுள்ளன. (ஐ-86)



பருத்தித்துறை பிரதேச செயலக விளையாட்டு விழா நெடிய காடு பிள்ளையார் கோயில் முன்றிலில் இடம்பெற்றது. அதில் வெற்றிபெற்ற சென்.தோமஸ் விளையாட்டுக்கழக அணிக்கு வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை வெற்றிக் கேடயம் வழங்குகிறார். அத்துடன் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற்ற விளையாட்டு வீராங்கனைகளுக்கு பதக்கங்கள் வழங்கப்படுகின்றன. பிரதேச செயலர் ஆர். வரதீஸ்வரனும் உள்ளார். *(319)*

## பூப்பந்தாட்டம், மேசைப்பந்தாட்டம்; மாவட்டப் போட்டி இன்று வவுனியாவில்

யாழ்ப்பாணம்,மே 19

வடமாகாண பெருவிளையாட்டுப் போட்டிகளில் ஓர் அங்கமான ஆண், பெண் இருபாலாருக்குமான பூப்பந்தாட்டம், மேசைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் இன்று வியாழக்கிழமை வவுனியாவில் இடம்பெறவுள்ளன.

பூப்பந்தாட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவில் மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்ட அணிகளும் -

பெண்கள் பிரிவில் - மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்ட அணிகளும்- பங்குபற்றுகின்றன.

மேசைப்பந்தாட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவில் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார் மாவட்ட அணிகளும் -

பெண்கள் பிரிவில் - மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்ட அணிகளும் மோதவுள்ளன.

(ஐ-23)

## கூட்டுறவு தினத்தை ஒட்டிய போட்டிகளின் முடிவுகள்

யாழ்ப்பாணம்,மே 19

89 ஆவது சர்வதேச கூட்டுறவுத் தினத்தையொட்டி யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை மாவட்ட மட்டத்தில் நடத்திய குழுநிலைப் போட்டிகளில் வெற்றி பெற்ற சங்கங்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

முடிவுகள் வருமாறு:

**கரபந்தாட்டம்:** ஆண்கள் - அச்சுவேலி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

**வலைபந்தாட்டம்:** பெண்கள்- பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், பண்டத்தரிப்பு மகளிர் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம்.

**துடுப்பாட்டம்:** உடுப்பிட்டி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம், சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

**மரதன் ஓட்டம் :** ஆண்கள்- சி.ஜெயந்தன்- பண்டத்தரிப்பு பனை தென்ன வள கூட்டுறவுச் சங்கம், சி.ஞானேஸ்வரன் நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கா.தனுஷன் பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

பெண்கள்- ஞா.சுமதி பண்டத்தரிப்பு பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம், கு.தனுசியா, பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

**கயிறு இழுத்தல் :** ஆண்கள் - சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், நவாலி முருகானந்த மகளிர் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம், சுன்னாகம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம். (ஐ-23)

# ஜொலிஸ்ராரின் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஜொனியன்ஸ், அரியாலை சென்ரல் வெற்றி

யாழ்ப்பாணம்,மே 19

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த வாரம் இடம்பெற்ற ஆட்டங்களில் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகமும் அரியாலை சென்றல் விளையாட்டுக்கழகமும் வெற்றி பெற்றன.

யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஈகிள்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 30 பந்து பரிமாற்றம் நிறைவில் சகல இலக்குகளையும்இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றது.

அன்புஜன் 68 ஓட்டங்களையும் மயூரன் 30 ஓட்டங்களையும், பிரணவன் 28 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

கோகுலன் ஆறுஓவர்கள் பந்து வீசி 5 இலக்குகளையும் நிருஷர் ஆறு ஓவர்கள் பந்து வீசி 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

224 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென களம் இறங்கிய ஈகிள்ஸ் விளையாட்டுக்கழக அணி 29.4 ஓவர்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 219 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில்கிருஷத் 35 ஓட்டங்களையும் துளசி 54 ஓட்டங்களையும் சொந்தூரன் 24 ஓட்டங்களையும் நிருஷாந் 22 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர். லவேந்திரா ஆறு ஓவர்கள் பந்து வீசி மூன்று இலக்குகளையும்,மயூரன் 5 ஓவர்கள் பந்து வீசி 2 இலக்குகளையும் டக்கர் 4.3 ஓவர்கள் பந்துவீசி 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

அன்று மதியம் இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அரியாலை சென்றல் விளையாட்டுக்கழக அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை சென்றல் விளையாட்டுக்கழக அணி 30 பந்துப் பரிமாற்றம் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 219 ஓட்டங்களைப் பெற்றது.

விதுஷன் 53 ஓட்டங்களையும், நிரேஸ் 42 ஓட்டங்களையும், நவதீபன் 36 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர். கரிகரன் 4 ஓவர்கள் பந்து வீசி 2 இலக்குகளையும் திலக் ஆறு ஓவர்கள் பந்துவீசி 2 இலக்கு களையும் கைப்பற்றினர்.

220 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென களம் இறங்கிய மானிப்பாய்ப் பரீஸ் விளையாட்டுக்கழக 18 ஓவர் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 126 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

கரிகரன் 30 ஓட்டங்களையும் ரஜீத் 17 ஓட்டங்களையும் மயூரபிரியா 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

கவிந்தன் 4 ஓவர்கள் பந்து வீசி 3 இலக்குகளையும், விதுஷன் 5.5 ஓவர்கள் பந்துவீசி 3 இலக்குகளையும், வசிகரன் 4 ஓவர்கள் பந்துவீசி 2 இலக்குகளைக் கைப்பற்றினர். அரியாலை சென்றல் விளையாட்டுக்கழக அணி 92 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. (ஐ-23)

## பாடசாலைகள் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,மே 19

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தவிருக்கும் 13 வயதுப்பிரிவு (1999- 2000), 15 வயது பிரிவு (1997 -1998) யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டி அடுத்த மாதம் நடுப் பகுதியில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டிகள் தொடர்பான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்குகொள்ளவிரும்பும் பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்களை மேற்படி கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு இணைப்பாளர் பேர்டிபெனிஸ் கேட்டுள்ளார். (ஐ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி மனோன்மணி சோமசுந்தரம்
(முல்லைப்பிளவு, காரைநகர்)



காரைநகர், முல்லைப்பிளவைப் பிறப்பிடமாகவும், 132/2 பிறவுண் வீதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி சோமசுந்தரம் நேற்று (18.05.2011) புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - செல்லாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமார்- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், சிவகுமார்(சிவாஸ் நகையகம், யாழ்ப்பாணம்) , சிவராசன் (விநாயகர் அடகு நிலையம்,யாழ்ப்பாணம்), திருமதி அம்பிகைபாகன் சிவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சிவபாலன், சிவஞானம் ஆகியோரின் அன்புத் தாயும், திலகவதி, கமலராணி, அம்பிகைபாகன்(அம்பிகை களஞ்சியம், எட்டியாந்தோட்டை) ஆகியோரின் அன்பு மாமியும், நவதர்சினி, பன்னீர்செல்வம், மயூரதி,சிவகரன், கார்த்தியாணி, விதுர்ஷா, கஜலக்ஷி, திலக்ஷன், சங்கவி, சிவானி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(19.05.2011) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

132/2, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சோ.சிவகுமாரன்(மகன்)

## தவறிவிடப்பட்டுள்ளது

17.05.2011 அன்று மல்லாவிக்கும் மாங்குளத்துக்கும் இடையில் அ.அ.அட்டை (693512352V) யும் சாரதி அனுமதிப்பத்திரம் (B389589) தவறிவிட்டது. இதனைக் கண்டெ டுத்தவர்கள் 'ஆசா உணவகம்' A9 வீதி, மாங்குளம் அல்லது 'நிகல்யா நிகழரசி'' A9 வீதி, கிளிநொச்சி. இங்கு ஒப்படைக்கவும்.

தொ.பே- 0778171503, சன்மானம் வழங்கப்படும்

## பதவி வெற்றிடம்

**1. வெளிக்கள உத்தியோகத்தர்/ நிதி சேகரிப்பாளர்**

**தகைமை**- *க.பொ.த (உயர்தரச் சித்தி)*

**தெரிவுசெய்யப்படுபவர்கள் பாதுபாப்புப் பிணைப்பணம் செல்த்தக் கூடியவராக இருத்தல் வேண்டும்.**

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

**2. பாதுகாப்பு ஊழியர்**

**தகைமை**- *க.பொ.த சாதாரண சித்தி.*

**3. விநியோக உதவியாளர்**

**தகைமை**- *க.பொ.த. சா/தர சித்தி.*

I. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
II. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
III. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்
இறுதித் திகதி:- 25.05.2011
IV. அனுப்ப வேண்டிய முகவரி-

முகாமையாளர்,
*லக்ஷிமி ஏஜென்சி*
எஸ்-லோன் விநியோக நிலையம்.
4ஆம் ஒழுங்கை,
23/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

## பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான வெற்றிடம்

ஞானசம்பந்தர் கலை மன்றம்- புலோலி கிழக்கு- பருத்தித்துறை
க.பொ.த சா/த தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சுயவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும். விண்ணப்ப முடிவுத் திகதி:- 25.05.2011

திரு. பா.இரகுவரன்
செயலாளர்

## விற்பனைக்கு

அழகிய வர்ண மீன்கள், தொட்டிகள், அழகுப் பொருள்கள், ஆபிரிக்க லவ்பேட்ஸ், தாரா, காடை, புறா, கோழிக்குஞ்சு, முயல், கினிப்பிக், நாய்க்குட்டிகள், கூடுகள், இனிப்பு ஒட்டுத் தோடை, பலஇன பூங்கன்றுகள், பூச்சாடிகள் அனைத்தும் விற்பனைக்கு உண்டு.
யாழ். அக்கூரியம், 941,கே.கே.எஸ். வீதி, தட்டாதெருச்சந்தி,யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

யாழ்.சிறுப்பிட்டி, தெற்குப் பகுதியில் பத்துப் பரப்பு மரங்களுடன் கூடிய காணி விற்பனைக்கு. குடிமக்கள் வசிக்கும் பகுதி யாழ். பருத்தித்துறை வீதியிலிருந்து 20மீ. தூரத்தில் அமைந்துள்ளது.

தொடர்பு- 0773597068

## தவறிவிட்டது

இருபாலை பெரியதம்பிரான் ஆலய உடுக்கு இருபாலை ஊடாக பருத்தித்துறை செல்லும் தனியார் மினிபஸ்ஸில் 20.04.2011 அன்று தவறிவிட்டது. பூசைக்குரிய உடுக்கு என்பதால் அதனை எடுத்தவர்கள் இறைவன் பொருள் என எண்ணி ஆலயத்தில் ஒப்படைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.
பெரியதம்பிரான் பூசகர், க. சின்னராசா ஸ்ரீதரன்(ரமேஷ்)
கோப்பாய் தெற்கு, இருபாலை. 0776510104

## வீடு விற்பனை

கோண்டவில் கிழக்கு, பலாலி றோட்டிலிருந்து 50 மீற்றர் தூரத்திலுள்ள வாமஸ் சந்திக்கு அருகில் 5 அறைகள், 2 பெரிய ஹோல், உள்ளடங்கலாக அமைந்த வீடு விற்பனைக்குண்டு.(2 அறைகள் குளிரூட்டப்பட்டுள்ளன,)அலுவலகங்களுக்கு உகந்தது.

தொடர்புகளுக்கு- 0778435528

# தாக்கல் செய்த வேட்பு மனுக்கள் 31ஆம் திகதியுடன் காலாவதி

கொழும்பு, மே 19

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் வேட்பு மனுக்களை நிராகரிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான தீர்ப்பு வெளிவந்துள்ள நிலையில், வேட்பு மனு கோரப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை இம்மாதம் 31ஆம் திகதிக்குள் நடத்தாவிட்டால் அந்த வேட்பு மனுக்கள் காலாவதியாகிவிடும் என்று தேர்தல்கள் செயலகம் தெரிவிக்கின்றது.

இது தொடர்பாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.பி.சுமணசிறி 'உதயன்'க்குத் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சிச்சபைத் தேர்தலில் நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களை தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான தீர்ப்பு கடந்த 12ஆம் திகதி வெளியானது.

இருந்தபோதிலும், அந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை நடத்துகின்றமை தொடர்பான திகதி குறித்து இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. இந்த நிலையில், வேட்பு மனு கோரப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் இம்மாதம் 31ஆம் திகதிக்குள் நடத்தப்படவேண்டும். அவ்வாறு நடத்தப்படாவிட்டால் அந்த வேட்பு மனுக்கள் காலாவதியாகிவிடும். அதன் பின்னர் மீண்டும் வேட்பு மனுக்க

-இப்படி அவர் கூறினார்.

# பருத்தித்துறையில் மீட்கப்பட்ட மாணவியின் சடலம்

யாழ்ப்பாணம் மே 19

பருத்தித்துறை கல்லூரி வீதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து பாடசாலை மாணவியின் சடலம் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டது. பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் 2012ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவிருந்த முருகானந்தராசா நிதர்சனா (வயது- 18) என்ற மாணவியே தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாணவியின் 18ஆவது பிறந்ததினமாகும். அன்று காலை இடம் பெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றி விட்டு அவர் வீடு திரும்பியுள்ளார். இதேவேளை குறித்த மாணவியின் பெற்றோர் அளவெட்டியில் உள்ள கோயில் திருவிழாவுக்கு சென்றுள்ளனர். வீடு திரும்பிய மாணவி சித்தி வீட்டுக்குச் சென்று அங்கிருந்து தனது தாயாருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பிறந்த தினம் கொண்டாட வருமாறு அழைத்துள்ளார்.

பின்னர் சித்தி வீட்டில் இருந்து தங்களின் வீட்டுத் திறப்பை எடுத்துச் சென்றுள்ளார். வீட்டுக் கதவு பூட்டப்பட்டிருந்ததால் உறவினர்கள் மாணவியைத் தேடியுள்ளனர். இறுதியாக வீட்டை உடைத்துச் சென்று பார்த்த போது அறையொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டார்.

மாணவியின் கண் இமைப்பகுதியில் சிறுகாயம் காணப் பட்டதால் மரணத்தில் சந்தேகம் தெரிவிக்ககப்பட்டது. இதனைத் தொடர்ந்து யாழ். போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி எஸ். சிவரூபன் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார். மின் விசிறியினால் ஏற்பட்ட காயமே காணப்பட்டதால் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

(ஒ-15-319)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில்
15 * 02 * 1987



ஆண்டவன் அடியில்
20 * 04 * 2011

## திருஞானசம்பந்தமூர்த்தி கணேஷமயூரன் (குட்டி)

எங்கள் பாசத்தின் ஒளியாய் ஒளிர்ந்த குல விளக்கே!
நீ எம்மை விட்டுப் பிரிந்தாலும் உன் நினைவு
எம் நெஞ்சங்களை விட்டு என்றும் அகலா.

20.04.2011 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த அன்புக் குல விளக்கின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (20.05.2011) வெள்ளிக்கிழமை வீட்டில் நடைபெறும். இந்தக் கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)

மீனாட்சி அம்மன் கோயிலடி,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்,திருஞானசம்பந்தமூர்த்தி
(பெரியண்ணா, பத்மா)

# மரண அறிவித்தல்

## செல்வி கனகசபை துஷாந்தி (B.A)



42/7, ஈச்சமோட்டை, கடற்கரை வீதியைச் சேர்ந்த செல்வி கனகசபை துஷாந்தி 17.05.2011 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா கனகசபை(றீகல் வீடியோ அன் சவுண்ட்ஸ், ஈச்சமோட்டை) - பங்கஜா தம்பதியரின் ஆசை மகளும், பிரசாந்தன்(தம்பி), சுசி, துஷியந்தன்(லண்டன்), யசோதினி(தங்கா-லண்டன்)ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுனில் ரஞ்சித், ஷசிலா(லண்டன்), நவநீதராஜா(நவம்-லண்டன்) ஆகியோரின் ஆசை மைத்துனியும் காலஞ்சென்ற நடராஜா மற்றும் தையல்நாயகி காலஞ்சென்றவர்களான க்னகசபை- தங்கம்மா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(19.05.2011) வியாழக்கிழமை ஈச்சமோட்டை, கடற்கரை வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் ஒரு மணியளவில் கொழும்புத்துறை துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

42/7, ஈச்சமோட்டை,
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

(4354)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முறையான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக உறுதியளித்துள்ள விடயங்கள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் நிலைப்பாடு தொடர்பாகக் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்திய அரசுக்கு உறுதியளிக்கப்பட்டுள்ள விடயங்கள் தெடர்பாகத் தற்போது எம்மால் எதுவும் கூற முடியாது எனத் தெரிவித்த அவர், உறுதியளிக்கப்பட்டுள்ள விடயங்கள் மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நிறைவேற்றப்படும் சந்தர்ப்பத்திலேயே இது குறித்து திருப்தி அடையவோ, மகிழ்ச்சி அடையவோ முடியும் என்றார்.

"நாட்டில் நல்லிணக்கத்தையும், நிலையான சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்கு இது சிறந்த ஒரு சந்தர்ப்பம். இந்திய அரசுக்கு வழங்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் மக்கள் மத்தியில் நிறைவேற்றப்படவேண்டும்.

அமைச்சர் பீரிஸ் நாடு திரும்பியவுடன் தமிழ் மக்களுக்கு முறையான அதிகாரப் பகிர்வின்மூலம் அரசியல் தீர்வுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் அதற்குத் தேவையான பூரண ஒத்துழைப்பை நாம் வழங்குவோம்" எனத் தெரிவித்தார் சம்பந்தன்.

(உ-சி)

# மரண அறிவித்தல்கள்

## விஸ்வநாதர் செல்லையா



அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நல்லூர் பண்டாரிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வநாதர் செல்லையா நேற்று (18.05.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கிலியன் வீதி,
நல்லூர். (4364)
தகவல்:
குடும்பத்தினர்.

## வைரவிப்பிள்ளை சின்னத்தம்பி

(ஓய்வுபெற்ற அதிபர்)



கரணவாய் தெற்கு அண்ணா சிலையடியைப் பிறப்பிடமாகவும், எம்.எஸ். வீதி கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட வைரவிப்பிள்ளை சின்னத்தம்பி நேற்று (18.05.2011) புதன்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவிப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், தனேஸ்வரதேவி, இரத்தினேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், முத்துராசாவின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

எம்.எஸ்.வீதி,
கோண்டாவில் கிழக்கு. (4363)
தகவல்:
குடும்பத்தினர்.

## முருகானந்தராசா நிதர்சனா (நிதா)

(A/L கணிதப்பிரிவு 2012 யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை)



பருத்தித்துறை கல்லூரி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகானந்தராசா நிதர்சனா கடந்த (17.05.2011) செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் முருகானந்தராசா - பவானி தம்பதியரின் அன்பு மகளும் நிரோஜன் (ஜேர்மனி) சதுர்சன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரி வீதி,
பருத்தித்துறை. (9086)
தகவல்:
குடும்பத்தினர்.

## இராமநாதன் லோகநாதன் (அப்புலி)

(செயலாளர், பிரதேச சபை காரைநகர்)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் லோகநாதன் (அப்புலி) நேற்று (18.05.2011) புதன்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நயினாதீவு. (4365)
தகவல்:
குடும்பத்தினர்.

## தமிழர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

முள்ளிவாய்க்காலில் இறந்துபோன தம் உறவுகளின் ஆத்மசாந்திக்காக பலர் கீரிமலை, வில்லூன்றி ஆகிய புனித தீர்த்தக் கரைகளில் நேற்று பிதிர்க்கடன் நிறைவேற்றினார்கள்.

தமது துக்கத்தை - துயரத்தை புறத்தே வெளிக்காட்ட முடியாமல் பலர் ஆலயங்களில் விளக்குகளை ஏற்றி தமது அஞ்சலிகளை செலுத்தினார்கள்.

சில ஆலயங்களில் இறந்துபோன மக்களின் ஆத்ம சாந்திக்காக விசேட பூசை வழிபாடுகளும் நடைபெற்றுள்ளன.

முள்ளிவாய்க்கால் தேசிய துக்கதினம் வன்னியிலும் மிகவும் அமைதியாக அனுஷ்டிக்கப்பட்டது. கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் இறுதிப் போரில் இறந்துபோன தமது உறவுகளுக்கு மிகவும் அமைதியான முறையில் தமது அஞ்சலியைச் செலுத்தினார்கள். அவர்களது முகங்களில் நேற்று இறுதிப் போர் இழப்புக்களின் சோகம் காணப்பட்டதாக எமது செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

ஈழத்தமிழனத்திற்கு பெரும் துயரை ஏற்படுத்திய முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை தேசிய துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### களுவாஞ்சிக்குடியில் அஞ்சலி நிகழ்வு

களுவாஞ்சிக்குடி சக்தி இல்லத்தில் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டோருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெற்றது.

சக்தி இல்லத்தில் நேற்று மு.ப. 10.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை உயிரிழந்தவர்களுக்காக விசேட பூஜைகள் நடைபெற்றன.

நிகழ்வில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா கலந்துகொண்டு உரையாற்றினார். எதிர்கால சந்ததியினருக்கும் இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளை வரலாற்று ரீதியாகக் கொண்டுசேர்க்கவும் இதுபோன்ற நிகழ்வுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் - என்றார்.

சக்தி இல்லத்தில் உள்ள தாய், தந்தை அற்ற குழந்தைகளுக்கு நேற்று அன்னதானம் வழங்கப்பட்டது. நிகழ்வில் மட்டு. கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், எஸ். யோகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(உ-த-9)

**தேவை**

நல்ல நிலையிலுள்ள ஆங்கில தட்டச்சு இயந்திரம் தேவை.
தொடர்பு: 0778535693

**வீடு, கடை விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில் இரு வீடுகளும், யாழ்ப்பாணம் சத்திரச் சந்திக்கு அருகில் ஒரு கடையும் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: T.P: 0778449687

**டேடன்ஸ் ஆய்வுகூடம்**
Durdans Lab

1. மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் A/L விஞ்ஞானம் 2 பாடங்கள்
2. தாதியர்: ஒருவருட தாதியர் பயிற்சி தேவை.
3. காசாளர்: A/L வணிகம் 2 பாடங்கள்

514/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொடர்பு- 0212229727, 0773068122

**காணவில்லை**

பொமனேரியன் (வெள்ளை நிறம்-பழுப்பு) நாயொன்று நேற்றைய தினம் (18.05.2011) நாவலர் வீதியில் அத்தியடிப் பகுதியில் காணாமற் போய்விட்டது. அதன்நோய்க்கு ஊசி ஏற்றப்படவேண்டிய நிலையிலுள்ளது. தகவல் தருவோருக்கு சன்மானம் உண்டு. 0779046396

## ஜெயலலிதாவுடன்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்மோகன்சிங், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். எம். கிருஷ்ணா, பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர்மேனன் ஆகியோரைச் சந்தித்த பின்னர் புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் செய்தியாளர்களுக்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

பேட்டியின்போது மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் ஜெயலலிதா அரசின் உதவிகளைப் பெற்று செயற்படுவதில் ஆர்வம் கொண்டுள்ளோம். இந்தியத் தலைவர்களுடன் நடைபெற்ற சந்திப்பில் இலங்கையில் போருக்குப் பிந்திய அரசியல் நிலைமை, முகாம்களில் உள்ள தமிழ் மக்களை மீளக்குடியமர்த்தும் பணி கள் ஆகியவை விவாதிக்கப்பட்டன.

மீள் குடியமர்வு என்பது மனிதர்களை ஓர் இடத்தில் இருந்து வேறு இடத்துக்கு மாற்றும் பணியல்ல. மக்களுக்கு வாழ்வாதாரம், வசிக்கத் தேவையான கட்டமைப்புகள் ஆகியவற்றை உருவாக்கவேண்டும். இலங்கை போர் தொடர்பாக ஐ.நா. நிபுணர் குழு அளித்த அறிக்கை சர்வதேச நெறிகளுக்கு எதிரானது. மோசடியாகத் தயாரிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் முற்றிலும் ஒழிக்கப்பட்டுவிட்டதால், இந்தியாவின் விருப்பப்படி இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழர்கள் உள்ளிட்ட அனைத்துச் சமூகத்தினருக்கும் அரசியல் உரிமை வழங்குவதற்கான நடவடிக்கைகளில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது.

ஆட்சிப் பகிர்வுக்கு வகை செய்யும் விதத்தில் இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் நடவடிக்கைகள் விரைவில் நிறைவேற்றப்படும்.

சர்வதேச அளவில் இலங்கைக்கு உள்ள நற்பெயரையும், நன்மதிப்பையும் சீர்குலைக்கும் வகையில் செயல்படும் சில சக்திகளின் செல்வாக்குக்கு ஐ.நா. சபை அடிபணியக்கூடாது. இந்த உண்மை இலங்கையில் கள ஆய்வில் ஈடுபட்டு நேரில் உண்மைகளைக் கண்டறியும்போது தெளிவாகும்.

ஐ.நா. குழு நிபுணர் குழு அறிக்கை அளித்த விதம், வெளிப்படையாகச் செயல்பட்ட இலங்கை அரசின் நடவடிக்கைக்கு நேர் எதிரானது. சர்வதேச நீதிக்குப் புறம்பானது. எனவேதான் நிபுணர் குழு அறிக்கை மீது எந்த நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என வலியுறுத்துகிறோம்.

இலங்கை அரசின் இதுபோன்ற நடவடிக்கைகளுக்கு இந்தியா முழு ஒத்துழைப்பை அளித்து வருகிறது.

தனது அறிக்கையில், இலங்கை அரசைக் குற்றவாளிகளாகவும், அதேசமயம், புலிகளை ஒழுக்க சீலர்களைப் போலவும் போர் வீரர்களைப் போலவும் ஐ.நா. குழு சித்திரித்துள்ளது

இலங்கைத் தமிழர் நலன் விவகாரத்தில், தமிழ்நாட்டின் புதிய முதல்வராக பொறுபேற்றுள்ள செல்வி ஜெயலலிதாவுக்கு வாழ்த்துத் தெரிவித்து கடிதம் எழுதியுள்ளேன். அவரது அரசின் உதவிகளைப் பெற்று செயற்படுத்துவதில் ஆர்வமாக இருக்கிறேன்.

- இப்படி அவர் தெரிவித்தார். (உ-சி)

## மாநகரசபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக் அவர் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

கடந்த 17ஆம் திகதி அரியாலை, புங்கன்குளம் வீதியில் அமைந்துள்ள தனது வீட்டுக்கு அருகில் உள்ள ஒழுங்கையில் சிவில் உடையில் வந்த இராணுவப் புலனாய்வாளர்கள் தனது வீடு தொடர்பாகவும் நடமாட்டம் தொடர்பாகவும் அப் பகுதியில் உள்ள மக்களிடம் விசாரித்த தாக விந்தன் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தான் யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவுக்குத் தொலைபேசியில் தொடர்புகொண்டு முறை யிட்டதாகவும் அவர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்யுமாறு ஆலோசனை வழங்கியதையடுத்து யாழ். பொலிஸ் நிலையத்திலும் மனித உரிமை ஆணைக் குழு விலும் இது தொடர்பாக முறைப்பாடு செய்துள்ளதாக விந்தன் தெரிவித்தார்.

தனக்கு ஏதாவது உயிராபத்து ஏற்படுமாக இருந்தால் அதற்கு மாநகர முதல்வரும் ஈ.பி.டி.பியினருமே பொறுப்பு எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (த)

அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க
மீண்டும் யாழ்ப்பாண...
எந்த முதலீடும் இல்லாமல்
மாதம் ரூபா 50,000/= க்கு மேல்
சம்பாதிக்க ஆசையா.....?? !!!!



யாழ் குடாநாட்டு இளைஞர் யுவதிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் இணையத்தளம் மூலம் மாதம் ரூபா 50,000/= மேல் வீட்டிலிருந்தபடியே சம்பாதிப்பதற்கு ஓர் இலகு வழிகாட்டல் வகுப்பு

இல்லத்தரிசிகளே நீங்களும் உங்கள் குடும்பத்தை முன்னேற்ற நினைக்கிறீர்களா????ஆனால் என்ன வேலை செய்வது. என்று தெரியவில்லை???? முதலீடு இல்லை மற்றும் குழந்தைகளை விட்டு வெளியே சென்று வேலை செய்ய யோசிக்கிறீர்களா? கவலையை விடுங்கள் உங்கள் வீட்டிலிருந்தபடியே மாதம் ரூபா 50,000/=மேல் சமபாதித்து கொள்ளுங்கள்

உங்களிடம் இருக்க வேண்டியது ஓர் கணணியும் இணைய வசதியும் மட்டுமே.
குறிப்பு : கணணி பற்றி அறிவில்லாதவர்களும் பயப்படாமல் எம்முடன் இணைந்து கொள்ளலாம்.
வகுப்பு நடை பெறும் நாள் : 21.22 ந்திகதிகளில் சனி ஞாயிறு பி.ப 2.30க்கு
இடம்: யாழ் இந்து மகளிர் கல்லூரி மண்டபம் (Hindu Ladies College)
பயிற்சி கட்டணம்: 3250/= மட்டுமே
பதிவுக்கட்டணம் எதுவுமில்லை
மேலதிக விபரங்களுக்கு 0215675916
... கீழ் பட்டவர்களுக்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானிலை நிலவுவதற்கான சாத்தியம் உள்ளது.

# இலங்கைத் தமிழரின் துயரம் நீங்க உங்கள் செயற்பாடுகள் உதவட்டும்

## 'ஜெ'க்கு செல்வம் எம்.பி. வாழ்த்து



மன்னார், மே 19

தமிழகத்தில் புதியதோர் மறுமலர்ச்சியை தோற்றுவிக்கவும், இலங்கைத் தமிழர்களின் துயரங்கள் நீங்கி நிரந்தர அரசியல் தீர்வு காணவும், உலகத் தமிழர்கள் அனைவரையும் ஒன்றிணைக்கவும் உங்களது செயற்பாடுகள் அமையுமென்ற உறுதியான நம்பிக்கையுடன் உள்ளோம்.

தமிழகத்தின் புதிய முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஜெயராமுக்கு தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய செல்வம் அடைக்கலநாதன் அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழகத்தில் ஊழல், மோசடிகளை இல்லாதொழித்து சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை நிலைநாட்டவும், வறிய மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தவும், இலங்கைத் தமிழர்களின் துயர் துடைக்கவும், தமிழகத்தின் அரசியல் வரலாற்றில் எப்போதும் வழங்கப்படாத மகத்தான மக்கள் ஆணை உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனையிட்டு இலங்கைத் தமிழர்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள்.

இலங்கைத் தமிழர்களின் உரிமைகளுக்காக ஐ.நா. சபை வரை சென்றுகுரல் எழுப்புவேன் என்றும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பில் சர்வதேச சமூகத்தின் கவனத்தை திருப்புவேன் என்றும் சட்டசபைத் தேர்தல் பிரசாரத்தின் போது நீங்கள் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கையுடன் உள்ளோம்.

இறுதி யுத்தம் என்ற போர்வையில் வன்னியில் எமது மக்கள் எதிர்கொண்ட துயரங்கள் மிகக் கொடூரமானவை. பல்லாயிரக்கணக்கான உறவுகளை இழந்த மக்கள் இன்னமும் மீள முடியாத துயரில் உள்ளனர்.

எனவே, உங்களது உடன் பிறப்புகளான இலங்கைத் தமிழர்களின் துயரம் நீங்க இந்திய மத்திய அரசு சர்வதேச சமூகத்துக்கும் அழுத்தம் கொடுத்து உரிய தீர்வை பெற்றுத்தர வேண்டும் என்பதே எமது வேண்டுகோளாகும்.

பெரும்பான்மையின மக்கள் அனுபவிக்கும் அனைத்து உரிமைகளையும், கடந்த மூன்று தசாப்தகால யுத்த நடவடிக்கைகள் காரணமாக அனைத்தையும் இழந்து போயுள்ள இலங்கைத் தமிழர்களுக்கும் உரிய அரசியல் தீர்வின் ஊடாகப் பெற்றுக் கொடுக்க தங்களது ஆட்சியில் நடவடிக்கை எடுப்பீர்கள் என்ற நம்பிக்கையில் உள்ளோம்.

அதேபோன்று தமிழகத்திலுள்ள அகதிமுகாம்களிலும், ஏனைய வெளியிடங்களிலும் வாழும் இலங்கைத் தமிழர்கள் எந்தவொரு கெடுபிடியுமின்றி சுதந்திரமாக வாழ்வதற்கும், மாணவர்கள் கல்வி கற்பதற்கும் உங்களது ஆட்சியில் உரிய வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பீர்கள் என்ற திடமான நம்பிக்கையில் உள்ளோம்.

- இவ்வாறு அந்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ்க் கூட்டமைப்புடன் பேச்சு மூலம் எட்டப்படும் தீர்வுக்கு ஐ.தே.க. ஆதரவு

## ரணில் சுமந்திரனுக்கு உறுதிமொழி

கொழும்பு, மே 19

இலங்கை அரசுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்தும் பேச்சுக்களின் மூலம் எட்டப்படும் அரசியல் தீர்வுக்கு ஐதேக முழுமையான ஆதரவை வழங்கும் என்று உறுதி அளித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே இந்த உறுதிமொழியை தமக்கு வழங்கியுள்ளதாகக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசுடன் நடத்தப்படும் பேச்சுக்கள் குறித்து ஐ.தே.கவுக்கு, தமது கட்சித் தலைமை தகவல்களைப் பரிமாறி வருவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

கடந்த திங்களன்று மாலை ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்தில் நடத்திய சந்திப்பின் போது இறுதித்தீர்வுக்குத் தமது கட்சி ஒத்துழைப்பு வழங்கும் என்று உறுதி அளித்ததாகவும் சுமந்திரன் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் ரணில் விக்கிரமசிங்கவுடன் ரவி கருணாநாயக்க, லக்ஸ்மன் கிரியெல்ல ஆகியோரும் கூட்டமைப்பின் சார்பில் இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அதிகாரப்பகிர்வு பற்றிப் பேச முற்பட்ட சந்தர்ப்பங்களில் அரச தரப்புக் குழு அதை கைவிட்டதாகவும் சுமந்திரன் தெரிவித்தார்.

செனட் சபையை உருவாக்குவது பற்றிப் பேசுவதற்கான தருணம் இதுவல்ல என்று தாம் அரசுக்கு தெளிவாகக் கூறிவிட்டதாகவும் குறிப்பிட்ட சுமந்திரன், அதிகாரப்பகிர்வுக்கே முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று தாம் அரசுக்குக் கூறியுள்ளதாகவும் தெரிவித்தார்.

தமது நிலைப்பாட்டை அரசு ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் அடுத்த சுற்றுப் பேச்சுக்கள் ஜூன் 23ஆம் நாள் நடைபெறும் என்றும் அவர் மேலும் தெரி வித்தார். (த-10)

# தொண்டமானாற்றில் நீராடிய போது நீரிழ் மூழ்கிய நுவரெலியா மாணவன்

## சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதி

நெல்லியடி,மே19

கல்விச் சுற்றுலா மேற்கொண்டு தொண்டமானாறு செல்வச்சந்நிதிக்குச் சென்ற மாணவர் அங்கு ஆற்றில் நீராடிய வேளை அதில் ஒருவர் மயக்கமடைந்து நீரில் மூழ்கி மூச்சுத்திணறிய நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

நுவரெலியாவில் உள்ள பாடசாலை ஒன்றின் மாணவர்கள் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருந்தனர். இவர்கள் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு செல்வச்சந்நிதிக்கு அருகில் உள்ள ஆற்றில் நீராடினார்கள். அப்போது அதில் ஒரு மாணவன் மயக்கமடைந்து நீரில் மூழ்கி மூச்சுத்திணறிய நிலையில் மீட்கப்பட்டு வாகனம் ஒன்றின் மூலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு அவர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

நுவரெலியா, திம்புள்ள பாடசாலையைச் சேர்ந்த பாக்கியநாதன் சிவப்பிரசாந் (வயது - 14) என்ற மாணவனே இவ்வாறு மூச்சுத்திணறல் ஏற்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட மாணவன் ஆவார். (த-309)

# மாகாண விளையாட்டு போட்டி குறித்த கலந்துரையாடல்

வவுனியா,மே19

மாகாண மட்ட விளையாட்டுப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு வவுனியா தெற்கு கல்வி வலய மண்டபத்தில் வடமாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சத்தியபாலன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

மாகாணத்தின் 12 வலயங்களில் இருந்தும் உடற்கல்விப் பணிப்பாளர்கள், உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர்கள் ஒவ்வொருவரை இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு மாகாண உதவிக்கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டார். (ஒ-23)

# தென்மராட்சி மாம்பழம், பலாப்பழத்துக்கு மவுசு

தென்மராட்சி,மே19

தென்மராட்சிப் பிரதேசத்தில் மாம்பழம், பலாப்பழம் போன்றவற்றுக்கு தற்போது நல்ல மவுசு ஏற்பட்டுள்ளது. தென்னிலங்கையில் இருந்து வருவோரும் யாழ். மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களும் பெருமளவில் பலாப்பழம், மாம்பழம் வாங்குவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

# சாவகச்சேரியில் தாய்மாருக்கு விசேட 'கிளினிக்'

தென்மராட்சி, மே 19

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் குழந்தை பிரசவித்த தாய்மாருக்கான குடும்பநல சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரதி புதன்கிழமைகளில் இந்த சிகிச்சை நிலையம் இயங்கவுள்ளது. குழந்தை பிரசவித்து 42 நாள்கள் சென்ற தாய்மாரையும் குழந்தைகளையும் பரிசோதிப்பதற்காக இந்த நிலையம் ஆரம்பிக்கப் பட்டுள் ளதாகவும் பிரசவித்த தாய்மாரிகளுக்கு ஏற்படும் பல்வேறு பாதிப்புகள் பற்றி 'கிளினிக்'கில் சோதிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி வைத்தியசாலைப் பிரசவ விடுதியில் குழந்தை பிரசவித்த தாய்மாரை பிள்ளைகளுடன் 'கிளினிக்'குக்கு வருகை தருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-207)

# நிகழ்வுகள்

### வங்கிக் கிளை திறப்பு விழா

யாழ்ப்பாணம், மே.19

சுன்னாகம் சனச அபிவிருத்தி வங்கிக் கிளை திறப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சனச அமைப்பின் தலைவர் பி.கிரிவந்தெனிய கலந்து கொள்வார். (ற)

### மானிப்பாயில் செயலமர்வு

யாழ்ப்பாணம், மே.19

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்களுக்கான கட்டாயக் கல்விக் குழுக்களின் வேலைத்திட்டங்களை வலுப்படுத்தல் தொடர்பான செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அருகில் உள்ள ஆசிரியவள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி எ.அன்ரன் யோகநாயகம், பிரதிக்கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், முறைசாராக் கல்விச் செயற்திட்ட அலுவலர் ந.சண்முகராஜா, சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப்பணிப்பாளர் சி.கந்தசாமி, சங்கானை கோட்டக்கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர். (ற)

### மாதாந்த ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், மே.19

சொண்ட் நிறுவனத்தின் மாதாந்த ஆய்வரங்கு நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.அரசடி வீதியில் அமைந்துள்ள சொண்ட் நிறுவன செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆய்வரங்கில் ''ஆரோக்கிய வாழ்வில் மூலிகை மருத்துவம்'' என்னும் கருப்பொருளில் சித்த மருத்துவத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி வி.சத்தியசீலன் ஆய்வுரையை நிகழ்த்தவுள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு எதிராக இலங்கையை சீனா பயன்படுத்த இடமளியோம்

இலங்கையின் நிலப்பரப்பையோ, கடற்பரப்பையோ இந்தியாவுக்கு எதிரான எந்தவொரு நடவடிக்கைக்கும் சீனா பயன்படுத்துவதற்கு இடமளிக்கமாட்டோம் என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் நேற்றுமுன்தினம் மாலை புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய போது, சீனாவின் ஆதிக்கம் தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கம் குறித்த இந்தியாவின் கவலையை நாம் புரிந்து கொள்கிறோம். இலங்கையின் நெருங்கிய நட்பு நாடுகளான சீனாவும், இந்தியாவும் மோதிக் கொள்ளும் நோக்கம் ஏதும் எமக்கு கிடையாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இருநாடுகளும் எமது அபிவிருத்திக்கான உதவிகளை செய்து வருகின்றன. ஒரு நாட்டுக்கு எதிராக மற்றொரு நாடு, எமது நிலத்தை தாக்குதலுக்காகப் பயன்படுத்திக் கொள்வதற்கு ஒருபோதும் அனுமதிக் கமாட்டோம். இது ஒரு உலகளாவிய கொள்கையுமாகும்.

அதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். எனவே, எந்தவொரு நாடும் எமது நிலத்தையோ கடலையோ மற்றொரு நாட்டுக்கு எதிராக பயன்படுத்தி கொள்ள வழியில்லை. அதற்கு அனுமதிக்கவும் மாட்டோம்.

சீனாவும், இந்தியாவும் துறைமுகங்கள், விமான நிலையங்கள், வீதிகள் மற்றும் மின்சக்தித் திட்டங்களில் உதவிகளை செய்து வருகின்றன. இவை ஒரு மோதலோ அல்லது போட்டியோ அல்ல. இரண்டு நாடுகளுமே எமது நெருக்கமான நண்பர்கள்.

இதில் அச்சப்படுவதற்கு எந்தக் காரணமும் இல்லை. இவையாவும் வர்த்தக உறவுகளேயாகும். ஹம்பாந்தோட்டைத் துறைமுகத்தை அமைப்பதன் மூலம் சீனா, இந்தியாவை முற்றுகையிடுவதான எந்தக் கேள்விக்கும் இடமேயில்லை.

எமக்கு எப்போதும் இந்தியாவின் ஆதரவு தொடர்ச்சியாக கிடைத்து வருகிறது. இந்த பலமான உறவு எப்போதும் தொடரும். இது ஒரு சிறப்பான தனிப்பட்ட உறவுமுறை என்று ஜீ.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

## போலிக் கடவுச் சீட்டில் பிரான்ஸ் செல்ல முயன்ற யாழ். இளைஞர் கைது

இந்தியாவிலிருந்து பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் நோக்கி போலியான கடவுச்சீட்டில் செல்லமுற்பட்ட போது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளார்.


யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜீவதாஸ் என்ற 30 வயதுடைய நபரே நெடும்பசேரியில் உள்ள கொச்சின் சர்வதேச விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர், சவரி முத்து பீற்றர் என்ற பெயரில் தயார் செய்யப்பட்ட போலிக் கடவுச் சீட்டைக் கொண்டே இந்தியாவை விட்டு வெளியேறமுற்பட்டுள்ளார் என்று குடியகல்வு காவல்துறை மேலதிகாரி கே.ஜே.ஜேம்ஸ் தெரிவித்துள்ளார்.

ஜீவதாஸ் என்ற குறித்த நபர் 2003 ஆம் ஆண்டு இந்தியாவிற்கு வந்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையினால் வழங்கப்பட்ட கடவுச்சீட்டு காலாவதியானதைத் தொடர்ந்து குறித்த நபர் சவரி என்ற பெயரில் திருச்சியில் போலிக்கடவுச்சீட்டை பெற்றுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், விடுதலைப்புலி உறுப்பினராக அல்லது வேறு ஏதாவது பயங்கரவாத குழுவைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்ற சந்தேகத்தின்பேரில் நெடும் பச்சேரி பொலிஸ் பொலிஸ் நிலையத்திற்கு பாரப்படுத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப் படுகிறது. (த- 10)



இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பரீஸ் நேற்று முன்தினம் புதுடில்லியில் இந்திப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேசிய போது...

இணையச் செய்திகள்

## 50 இலங்கையர் நாடு திரும்பினர்

திருப்திகரமான சம்பளம் உயர்வினமை மற்றும் சில பிரச்சினைகள் காரணமாக ஜோர்தானிலிருந்து 50இற்கு மேற்பட்ட இலங்கை ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் நாடு திரும்பியுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் இன்று அறிவித்தது.

## அனைத்து மன்னிப்புச் சபையின் அமெரிக்கக் கிளையினர் போராட்டம்

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக சுதந்திரமான விசாரணைகளை ஐ.நா முன்னெடுக்க வேண்டும் என்று கோரி அனைத்துலக மன் னிப்புச்சபையின் அமெரிக்க கிளையினால் போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இலங்கை யில் போர் முடிவுக்கு வந்து இரண்டு ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டே இந்தப் போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

இந்த இறுதிக் கட்டப் போரில் போர்க்குற்றங்கள் இழைக்கப் பட்டதற்கான சாட்சியங்கள் உள்ள தாக ஐ.நாநிபுணர்குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. கடந்த 15ஆம் நாள் சிக்காகோ நகர வீதிகளில் இலங்கையில் நீதி கோரி அனைத்துலக மன்னிப்புச் சபை போராட்டத்தை நடத்தியது.

அத்துடன் நியுயோர்க்கில் உள்ள இலங்கையின் ஐ.நாவுக்கான தூதரகம் முன்பாகவும், வொசிங்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்பாகவும் அனைத்துலக மன்னிப்புசபையின் உறுப்பினர்கள் போராட்டங்களில் ஈடுபட்டிருந்தனர்.

## ஐ.நா. அலுவலகத்துக்கு முன்னால் திரண்டனர் புலம்பெயர் தமிழர்கள்

நியூயோர்க் நகரில் அமைந்துள்ள ஐ.நா. அலுவல கத்தை நோக்கி அமெரிக்காவில் உள்ள புலம்பெயர் தமிழர்கள், முள்ளிவாய்க்கால் அவலத்தின் இரண்டாவது நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்பதற்காக நேற்றுப் படையெடுதனர்.

முள்ளிவாய்க்கால் அவலத்தின் இரண்டாவது நினை வேந்தல் நிகழ்வாகவும், ஐக்கிய நாடுகள் சபையை யுத்தக் குற்ற விசாரணையை முன்னெடுக்கக் கோரும் ஒரு சரித்திரம் வாய்ந்த நிகழ்வாக இந்த நிகழ்வு அமைந்துள்ளது.

அமெரிக்காவின் பல மாகாணங்களிலிருந்தும் வருகை தந்த தமிழர்களோடு இந்த நிகழ்வில் பங்கேற்கவென சுமார் ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட தமிழர்கள் கனடாவிலிருந்து அமெரிக்காவின் நியூ யோர்க்கை வந்தடைந்தனர்.

புலம்பெயர்ந்த தமிழர்களின் அண்மைய வரலாற்றிலே வட அமெரிக்காவின் சகல தமிழர்கள் அமைப்புக் களும் ஓரணியாக நின்று இந்த நிகழ்வை முன்னெடுத்தன.

நாடுகடந்த அரசு, அமெரிக்க தமிழ் அரசியல் விவகார அமைப்பு, கனேடியத் தமிழ்க் காங்கிரஸ், கனடிய தமிழ்த் தேசிய மக்களவை, இலங்கைத் தமிழர் சங்கம், நாம் தமிழர் இயக்கம் - வட அமெரிக்கா, உலகத் தமிழ் அமைப்பு அமெரிக்கா, ஒபாமாவிற்கான தமிழர்கள் அமைப்பு, இனப்படு கொலைக்கெதிரான தமிழர் அமைப்பு, திராவிடர் கழகம், தமிழ்ப்படைப் பாளிகள் கழகம், கனடாத் தமிழர் இணையம் என சகல அமைப்புகளும் ஒரே குரலில் தமிழர்களின் வேதனை களை உலகிற்கு ஓங்கிச் சொல்ல இதில் கலந்து கொண்டுள்ளன.

## கனடாவிலும் நேற்று முள்ளிவாய்க்கால் படுகொலையின் நினைவேந்தழ் நிகழ்வு

மாபெரும் போர்குற்ற நாளான நேற்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு நினைவேந்தல் நிகழ்வு ரொறன்ரோ நகர மத்தியில் அமைந்துள்ள ஒன்ராரியோ நாடாளுமன்றத்தின் முன்பாக உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது.

2009 மே மாதத்தில் பல்லாயிரக்கணக்கில் எங்கள் உறவுகளை வகைதொகையின்றி கொன்று குவித்து, இலட்சக் கணக்கானவர்களை ஏதிலிகளாக்கி, தற்போதும் எம்மினத்தைக் கருவறுத்துக்கொண்டிருக்கும் இலங்கை ஆட்சியாளரை சர்வதேச நீதிமன்றின் முன்னால் போர்க் குற்றவாளியாக்குவோம் என்று சபதம் எடுத்து 'அழுதது போதும் இனி எழுவோம் துணிவுடன்' என்ற தொனிப் பொருளில் கனேடியத் தமிழர் தேசிய அவையினர் மாபெரும் போர்க்குற்றநாள் நினைவேந்தழ் நிகழ்வினை ஏற்பாடு செய்து நடத்தியுள்ளனர்.

இந்நிகழ்வில் மனித உரிமை ஆர்வலர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியலாளர்கள் மற்றும் பல பிரமுகர்கள் கலந்துகொண்டு இறுதிப் போரில் உயிரிழந்த மக்களுக்காக அஞ்சலி செலுத்தினர்.

அத்துடன் இலங்கை அரசின் போர் குற்றத்தை வெளிப்படுத்தும் வகையில் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன் இறுதி நிகழ்வாக வணக்க நிகழ்வும் இடம்பெற்றது.

ஏற்கனவே நினைவெழுச்சி நாளை மீட்கும் முகமாக போர்க் குற்றங்களை சித்திரிக்கும் பெரியளவிலான சுவரொட்டிகள் ரொறன்ரோவில் உள்ள தமிழ் வர்த்தக நிலையங் களில் ஒட்டப்பட்டிருந்தது.

அத்துடன் ஈழத்தில் உறவுகள் படுகொலை செய்யப்பட்டு இரண்டாண்டு ஆவதையிட்டு ரொறன்ரோவில் உள்ள தமிழ் வர்த்தகள் தமது வர்த்தக நிலையங்களை மூடி தமது துக்கத்தை வெளிப்படுத்தினர்.

இந்த நிகழ்வுக்கு கனடாவில் உள்ள அனேகமான பிரதேசங்களில் இருந்தும் அயல் பிரதேசங்களில் இருந்தும் தமிழ் உணர்வாளர்கள் கலந்து கொண்டு தமது உணர்வுகளை வெளிப்படுத்தியோடு இலங்கை அரசுக்கு எதிராக சர்சதேச சமூகம் நடவடிக்கை எடுத்து தமிழ் மக்களின் உரிமைகளை பெற்றுக் கொடுக்க வழிசெய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

(தமிழ்வின்) (த-10)

## மீள்குடியேற்றப்படாத நிலையில் 117,888 பேர் அறிக்கையிடுகிறது ஐ.நா. சபை

யுத்தம் முடிந்து இரு வருடங்களாகிவிட்ட போதிலும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இன்னும் 117,888 பேர் நிரந்தரமாக குடியேற்றப்படாமலுள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

யுத்தத்தின்போது இடம்பெயர்ந்த சுமார் 300,000 பேர் செட்டிகுளம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் தற்காலிக முகாம்களில் வைக்கப்பட்டிருந்ததாகவும் இவர்களில் 4981 குடும்பங்களைச் சேர்ந்த 16401 பேர் செட்டிகுளம் முகாமில் தற்போது இருப்பதாகவும் ஐ.நா. அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் மீளக்குடியேற்றப்பட்ட மக்கள் தமக்கு முறையான குடியிருப்புகள் இல்லையெனவும் நண்பர்கள், உறவினர்களின் வீடுகளில் தங்கியிருப்பதாகவும் கூறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வவுனியாவைச் சேர்ந்த 18589 பேரும் மன்னாரைச் சேர்ந்த 4928 பேரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 94371 பேரும் இன்னும் நிரந்தரமாக மீளக்குடியேற்றப் படாமல் உள்ளனர் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

செட்டிகுளம் முகாமில் இருப்பவர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர். கண்ணிவெடிகள் அகற்றப் படாததால் அவர்கள் இன்னும் மீளக்குடியேற்றப்படாமல் உள்ளனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்றுத் தெரிவித்தார்.

மொழிக் கொள்கையைப் பொலிஸார் மீறிச் செயற்படுகின்றனர். இதற்கு எதிராக பொலிஸ்மா அதிபர் மீது வழக்கு தொடரமுடியும். இருந்தும் அரசு ஒரு அரசே ஓர் அரச திணைக்களத்துக்கு எதிராக வழக்கு தொடர முடியாத காரணத்தால் பொலிஸ் மா அதிபருக்கு எதிராக வழக்கு தொடர முடியாதுள்ளது என்றும் அமைச்சர் கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

தேசிய மொழிக் கொள்கையை பொலிஸாரே மீறிச் செயற்படுகின்றனர். இதனால் மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்த முடியாதுள்ளது. சிங்கள மற்றும் தமிழ் மக்களின் சம உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் வீதிப் போக்குவரத்து தொடர்பான அநேக பதாகைகளில் தமிழ் மொழியில் குறிப்பிடப்படுவதில்லை.

இதனால் சிங்களம் தெரியாத தமிழ் மக்கள் வீதிப் போக்குரத்து முறைகளை மீறும் சந்தர்ப்பங்கள் இடம்பெறுகின்றன. எனவே, இது தொடர்பாக பொலிஸ் திணைக்களத்துடன் விரைவில் பேச்சு நடத்தப்படும். தமிழ் மொழியை தொடர்ச்சியாகப் பொலிஸார் புறக்கணித்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களில் அரச கரும மொழிகள் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் பொலிஸார் இடையூறாக உள்ளனர். இது தொடர்பாக பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரியவுக்கு கடிதம் அனுப்பியுள்ளேன்.

- இப்படி அவர் தெரிவித்தார். (சி)

**2012 A/L**
**வெப்பவியல்** - By.M.கருணாநிதி
Sat., Sun 12.00 ஆரம்பம் 21.05.2011
At **N.E.W** ஆனைப்பந்தி. (4356)

**படிவங்கள் விற்பனையாகிறது**
சமூக சேவைகள் அமைச்சின் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் ஐந்து பதவி வெற்றிடங்கள்.
1. உள்ளக கணக்காய்வாளர்
2. உதவிப் பதிவாளர்
3. கணினி நிகழ்ச்சித் திட்ட அலுவலர்
4. கணக்கு உத்தியோகத்தர்
(1–4: பட்டதாரிகள்)
5. சாரதி (O/L தகைமை)
6. வன விரிவாக்கல் அதிகாரி (O/L தகைமை)
7. அலுவலகப் பணியாளர் (O/L தகைமை)
**பூபாலசிங்கம் புத்தகசாலை**
பஸ் நிலையம், யாழ்ப்பாணம். வேம்படிச் சந்தி, யாழ்ப்பாணம்.

**வெளிவந்து விட்டது!**
"புலமை மஞ்சரி"
தரம் 2, 3, 4 மாணவர்களுக்கான மாதிரிவினாத்தாள் தொகுப்பும், தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் தொகுப்பும் கிடைக்கும் இடங்கள்.
பூபாலசிங்கம் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். அன்னை புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
பாடசாலைகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும். (4342)

# தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு குறித்த மூன்றாம் கட்டப் பேச்சு இன்று

கொழும்பு, மே 19

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான மூன்றாம் கட்டப் பேச்சு இன்று நடைபெறவுள்ளது.

கொழும்பு, ராஜகிரியவிலுள்ள முதலாளிமார் சம்மேளனத்தில் முற்பகலில் இந்த பேச்சு இடம்பெறவுள்ளதாக முதலாளிமார் சம்மேளனத்தின் பணிப்பாளர் ரவி பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த இரண்டு கட்ட பேச்சுகளிலும் முதலாளிமார் சம்மேளனம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் தொடர்பாக தொழிற்சங்கங்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அத்துடன், தொழிலாளர்கள் சம்பள உயர்வு தொடர்பில் தொழிற்சங்கங்களுக்கு வலியுறுத்தியுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், பிரதியமைச்சருமான முத்துசிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொழலாளர் காங்கிரஸினால் முன்வைக்கப்பட்ட சம்பள உயர்வு கோரிக்கை தொடர்பான தீர்வுகள் முதலாளிமார் சம்மேளனத்தின் ஏனைய பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய பின்னரே அறிவிக்கப்படும் என்று முதலாளிமார் சம்மேளனத்தின் பணிப்பாளர் ரவி பீரிஸ் தெரிவித்துள்ளார்.

(சி)

## சு.க.வின் மத்திய செயற்குழுக் கூட்டம் இன்று

கொழும்பு, மே 19

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி மாலை அலரிமாளிகையில் நடைபெறவுள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ள இந்த கூட்டத்தில், ஒத்திவைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பின்னர் ஆளும் கட்சி மத்திய செயற்குழு எதிர்வரும் 30ஆம் திகதி முதன்முறையாக கூடுகிறது.

## இலங்கை மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குற்றச்சாட்டுகளை ஐ. நா. மனித உரிமைகள் சபை உதாசீனம் செய்துள் ளது எனவும், அக்குற்றச்சாட்டுகள் தொடர்பாகக் காத் திரமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியுள்ளது எனவும் சர்வதேச மன்னிப்புச்சபை குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபை மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

சுயாதீன விசாரணைகளை நடத்துவதற்கு இலங்கை அரசு முனைப்புக்காட்டத் தவறியுள்ளது. இதனால் சர்வதேச ரீதியான விசாரணைகளுக்கு ஐ.நாவின் மனித உரிமைகள் சபை முயற்சிக்க வேண்டும். அனைத்து இலங்கையினரதும் உரிமைகளைப் பாதுகாத்து கடந்த கால துரதிர்ஷ்டங்களை மீண்டும் சந்திக்காமல் இருக்க சரியான சூழல் உருவாவதற்கு மனித உரிமைகள் சபை நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கையில் யுத்தம் முடிவடைந்து 2009ஆம் ஆண்டு மே 27ஆம் திகதி ஐ.நாவின் மனித உரிமைகள் சபை பிரேரணை ஒன்றை நிறைவேற்றியது. அதில் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு மற்றும் சமாதானம் தொடர்பாக வலியுறுத்தப்பட்டிருந்தது.

இருந்தும் இரண்டு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் குறித்து அந்தப் பிரேரணையில் எந்தவிதமான கருத்துகளும் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

தற்போது ஐ.நா. செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் இலங்கையில் போர்க்குற்றம் இடம்பெற்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில், இலங்கை மீதான சர்வதேச விசாரணைக்கு ஐ.நாவின் மனித உரிமைகள் சபை ஆதரவு வழங்கவேண்டும்.

- இப்படி சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

(உ-சி)

## ஐ.நா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மீறல்கள் தொடர்பான நிபுணர் குழு அறிக்கையை நியூஸிலாந்து அரசு ஆதரிக்குமா என்று நியூஸிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர் கீத் லொகி எழுத்து மூலம் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பி இருந்தார். இதற்குப் பதிலளிக்கும்போதே வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை நியூஸிலாந்து அரசு ஆதரிக்கின்றது. அத்துடன் இலங்கையில் இடம்பெற்றுள்ள மனித உரிமை மீறல்கள் குறித்தும் கவலைப்படுகிறது என வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார். (சி)

## பிரச்சினைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாகாணசபை உறுப்பினர் ஒருவரைக் கைதுசெய்தமை தொடர்பிலும் முதலமைச்சரின் வீட்டில் இராணுவத்தின் திடீர் சோதனை நடவடிக்கையை மேற்கொண்ட குறித்தும் ஜனாதிபதியிடம் முறையிடுவதற்காகவே இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் சார்பில் மட்டக்களப்பில் நேற்றுப் புதன்கிழமை மாலை நடத்தப்பட்ட விசேட செய்தியாளர் மாநாட்டின் போதே இது தொடர்பாக அறிவிக்கப்பட்டது.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில், கட்சியின் பிரதித் தலைவரும் மாகாண சபை உறுப்பினருமான நா.திரவியம் (ஜெயம்), செயலாளர்நாயகம் ஏ.கைலேஸ் வரராஜா, மாகாண சபை உறுப்பினர் பூ. பிரசாந்தன், மட்டக்களப்பு மாநகர சபை பிரதி மேயர் ஜோர்ச் பிள்ளை பிரதேச சபை தவிசாளர்களான உதய ஜீவதாஸ், சிறிதரன், சுப்பிரமணியம், உள்ளிட்ட உயர் பீட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இங்கு மேலும் கருத்து வெளியிட்ட அசாத் மௌலானா,

கடந்த சில நாள்களாக நடைபெற்று வரும் செயற்பாடுகள் குறித்து எமது கட்சி ஆழ்ந்த கவலையையும் கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

கிழக்கில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதிலும், அமைதியைப் பேணுவதிலும் பலமுள்ள கட்சி என்ற வகையில் எமக்கும் பொறுப்புண்டு.

அசம்பாவிதங் கள் குறித்து எமது கட்சி உறுப்பினர்கள் மீத சந்தேகங்கள் இருந்தால் எமது கட்சியிடம் அறிவித்திருந்தால் நாங்கள் எமது உறுப்பினர்களை ஒப்படைத்திருப்போம். அதற்காக எவ்வித அறிவித்தலுமின்றி கைது செய்ய வேண்டிய அவசியமில்லை.

எந்த வித முன் அறிவித்தலுமின்றி முதலமைச்சரின் மட்டக்களப்பிலுள்ள வாசஸ்தலத்தைச் சோதனையிடுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இது எமது தலைவருக்கும் முதலமைச்சருக்கும் ஏற்படுத்தப்பட்ட அகௌரவமாகவே நாம் பார்க்கிறோம். எமது கட்சிக்கும் தலைவருக்கும் ஏற்படுத்தப்பட்ட அரசியல் களங்கத்திற்கு நீதி வேண்டும் என ஜனாதிபயைக் கோரவிருக்கிறோம். - என்றார். (த)




**மீண்டும் யாழ்நகரில்,**
163, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்
(வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)
**D.C.M**
ரெத்தியேக வகுப்பு
பொருளியல் **S. வரதராஜன்** B.A (Hons)
**A/L 2013** தேர்ச்சி -1 பொருளியல் அறிமுகம்
தேர்ச்சி -2 சந்தைச் செயற்பாடு
ஆரம்பம்: 20.5.11 வெள்ளி 3.00
**A/L 2012** தேர்ச்சி -5 தேசிய கணக்கீடு
(பாடத்திட்ட வகுப்பு)
மீட்டல் வினாவிடை பயிற்சி வகுப்பு
ஆரம்ப அலகிலிருந்து
ஆரம்பம்: 20.5.11 வெள்ளி 4.00

**Quick Learning Course**
**Spoken English with Grammar**
Duration 1 Month Rs. 3000.00
உரையாடட் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய **Audio & Video visuals** மூலமாக நடாத்தப்படுகிறது
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special
**23-05-2011**
Batch 16 : 09.00 AM - 12.00 PM
Batch 17 : 02.00 PM - 05.00 PM
**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே நீங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் ஏற்ற நேர அட்டவணையை தெரிவு செய்து வீண் விரயத்தை தவிர்க்கவும்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில்19.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org